# Current Affairs

## தமிழக அரசின் சமீபத்திய திட்டங்கள்

### 1. நமக்கு நாமே திட்டம்: 1997-98.

1. சமூகத்தின் சுய உதவி (ம) நம்பிக்கை மனப்பான்மையை ஊக்குவிததல் நோக்கம்
2. மாநில அரசின் நிதிஉதவி (ம) தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்.
3. மக்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்கிறது.
4. 2011 – 12 கிராம தன்னிறைவுத் திட்டம்.
5. 2012 – தன்னிறைவுத் திட்டம் எனப்பட்டது.

**நிதியளவு:**

1. 1/3 பங்கு – மக்களிடம் கிராமம் (ம) நகர்ப்புறம்
2. 2/3 பங்கு – அரசு
3. விதி விலக்கு – உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்புகள்.

**செயல்படுத்தும் பணிகள்:**

**நன்மைகள்:**

1. மக்களின் நேரடி ஈடுபாடு
2. முழு பலனும் மக்களை சென்று அடைகிறது.
3. அரசும் மக்களும் இணைந்து செயல்படுதல்
4. வேலையின் தரம் (ம) தன்னம்பிக்கை சமூகம் உருவாதல்
5. விரைவான சமூக – பொருளாதார வளர்ச்சி உறுதி செய்தல்

### 2. தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித்திட்டம்.

1. நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்
2. செலவு – 100 கோடி
3. MGNREGA வடிவில் நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தும்
4. தமிழ்நாட்டில் நகர்ப்புற மக்கள்தொகை – 2036 க்குள் 60% ஐ எட்டும்.

**நன்மைகள்:**

1. நகராட்சி (ம) நகர பஞ்சாயத்துக்களில் சமுதாய கூடம், சந்தைகள், நவீன நூலகங்கள், உள்ளகட்மைப்பு உருவாக்கப்படும்.
2. COVID – 19 ல் வேலை இழந்த நகர்ப்புற ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு
3. நீர்நிலைகளை சுத்தப்படுத்துதல்
4. பொதுப் பூங்கா போன்ற இடங்களைப் பராமரித்தல்
5. சென்னை மாநகராட்சி – 2 மண்டலங்கள், மற்ற மாநகராட்சிகளில் - 1 மண்டலம், 37 மாவட்டங்களில் - தலா 1 நகர உள்ளாட்சி என திட்டம் செயல்படுத்தப்படும்.

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம்:**

1. ரூ 1000 கோடி
2. நகராட்சி (ம) ஊராட்சிகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்
3. அனைத்து நகர உள்ளாட்சிகளுக்கான சாலை நெட்வொர்க் திட்டம்
4. நகர நீர் இருப்புத்திட்டம்

5. சமுதாய நூலகங்கள், சமுதாய கூடங்கள், சந்தைகள் அமைப்பு
6. நீர் இணைப்பு, கழிவுநீர் இணைப்பு
7. சாலைகள் அமைத்தல்
8. கண்காணிப்பு மையம் - தமிழ்நாடு நகர்ப்புற நிதி (ம) உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்
9. குடிசை / பின்தங்கிய (ம) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பகுதிகளுக்கு முன்னுரிமை தரப்படும்.

**3. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ம் – II**

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒரு முக்கியமான திட்டமாக 2006 முதல் 2011 வரை** செயல்படுத்தப்பட்டது. இத்திட்டமானது ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான அடிப்படை வசதிகள் எற்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஊராட்சியிலும் குளங்கள் புதுப்பித்தல், அறைகலன்கள் மற்றும் புத்தகங்களுடன் கூடிய ஊரக நூலகங்கள் அமைத்தல், புதிய இடுகாடு / சுடுகாடு மற்றும் பழைய இடுகாடு / சுடுகாடுகளில் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் சமுதாய / பள்ளி விளையாட்டு மையங்கள் தேவையான விளையாட்டு உபகரணங்களுடன் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அனைத்து குக்கிராமங்களும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, தற்போது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2021-22-ம் ஆண்டு முதல் 2025-26-ம் ஆண்டு முடிய ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் படிப்படியாக நிறைவேற்றப்படும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்களுடனும் மற்றும் ஏறத்தாழ 16 துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்தல்:**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II-ஐ திறம்படச் செயல்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும், ஊராட்சி ஒன்றிய அளவில் சம எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகள் (சுமார் 20 விழுக்காடு) தேர்ந்தெடுக்கப்படும். இதன் மூலம் மாவட்டம் மற்றும் மாநில அளவில் இதே அளவீடு பராமரிக்கப்படும். ஆண்டு ஒன்றிற்கு 20 விழுக்காடு கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்படுவதை உறுதி செய்யவும், ஆண்டிற்கு ரூ.1200 கோடி என்ற ஒதுக்கீட்டு உச்ச வரம்பினை கணக்கில் கொண்டும் மேற்கண்ட விகிதாச்சார முறை கணக்கிடப்பட்டுள்ளது. இம்முறையின் மூலம், 5 ஆண்டுகளுக்கான கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**நிதி ஒதுக்கீடு:**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II-ன் கீழ், குறைந்தபட்ச அடிப்படை நிதியாக தலா ரூ.30 இலட்சம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படும். மேலும், செயல்திறன் ஊக்க நிதியாக ரூ.5 இலட்சம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படும். இதைத் தவிர 2 விழுக்காடு நிதியானது நிர்வாகச் செலவுகள், தகவல், கல்வி, தொடர்பு, ஆவணப்படுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்படும். மக்கள்தொகை மானியம், குக்கிராம மானியம் ஆகியவற்றைக் கணக்கிடும் போது குக்கிராம எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும், மக்கள்தொகை எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும் நிதி வழங்கப்படும்.

செயல் திறன் ஊக்க நிதியானது கீழ்கண்ட 9 காரணிகளின் அடிப்படையில், அவை எய்தப்பட்ட அளவிற்கு ஏற்ப ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்:

1. 100% அனைத்து வணிக ரீதியான நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் வரி விதிப்பு நிர்ணயம் செய்தல்.
2. 100% சொத்துவரி மற்றும் வீட்டு வரியை வசூல் செய்தல்.
3. 100% மின்கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணங்களை செலுத்துதல்.
4. தெருவிளக்கு மற்றும் குடிநீர் விநியோகம் தொடர்பான மின்சார செலவில் கடந்த 12 மாத சராசரி அளவில் 20% சேமித்தல்.
5. 100% கழிவறைகளை பயன்படுத்துதல் மற்றும் திறந்த வெளியிடங்களில் மலம் கழிக்காத நிலையை உருவாக்குதல்.
6. 100% கிராம ஊராட்சியில் உள்ள நீர்நிலைகள் மற்றும் பொது திறந்தவெளி ஒதுக்கீடு நிலம் (OSR Land) ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
7. 100% அனைத்து அரசு மற்றும் தனியார் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் முறையாக பயன்படுத்துவதை உறுதி செய்தல்.
8. திட மற்றும் திரவக்கழிவுகள் மேலாண்மை தொடர்பாக ஓர் முறையான திட்ட வரைவை கிராம ஊராட்சி தயாரித்து இருக்க வேண்டும். அதில் 80% திட்ட பணிகள் முடிக்கப்பட்டு, கிராம ஊராட்சி திட மற்றும் திரவக் கழிவுகள் தேக்கம் இல்லாத ஊராட்சியாக மாற்றப்பட்டு சாம்பல்நிற கழிவுநீர் தேங்காத ஊராட்சியாக இருத்தல் வேண்டும்.
9. கிராம ஊராட்சியின் மொத்த பரப்பளவில், கூடுதலாக 1% மரக்கன்றுகள் (ஒரு ஹெக்டருக்கு 500 வீதம்) நடப்பட்டிருக்க வேண்டும் (ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு மரக்கன்றுகள் நடப்படுவதை உறுதி செய்ய வேண்டும்).

**ஒருங்கிணைந்த குக்கிராமங்கள் கணக்கெடுப்பு:**

குக்கிராமங்களில் உள்ள அடிப்படை உட்கட்டமைப்பு இடைவெளி தேவைகள் குறித்த கணக்கெடுப்பு, தொடர்புடைய அலுவலர்கள், கிராம அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் மற்றும் எந்த கிராம ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II முதல் கட்டமாக செயல்படுத்தப்படுகிறதோ அந்த கிராம ஊராட்சியின் தலைவர் அடங்கிய குழுவின் மூலம் நடத்தப்படுகிறது.

இக்கணக்கெடுப்பின் மூலம் அந்த கிராம ஊராட்சியில் ஏற்கனவே உள்ள மற்றும் தேவைப்படுகிற அடிப்படை வசதிகள் குறித்து விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இந்த கணக்கெடுப்பின் அடிப்படையில், ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் மதிப்பிடப்பட்டு கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் மிக முக்கியமான தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு பணிகள் இறுதி செய்யப்படுகிறது.

இக்கணக்கெடுப்பின் அடிப்படையில், மேற்கொள்ள வேண்டிய பணிகள் இரண்டு விரிவான இனங்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. (1) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் நிதியைப் பயன்படுத்திச் செயல்படுத்தப்படும் பணிகள். (2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பிற திட்டங்கள் மற்றும் பல்வேறு இதர துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பணிகள்.

**திட்டக் கூறுகள்:**

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II-ன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்:**

| வ. எண் | பணியின் வகைகள் | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | நீர் நிலைகள் புதுப்பித்தல் | 30% |
| 2 | குக்கிராமங்களில் தெருக்கள் / வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | 25% |
| 3 | சமத்துவ சுடுகாடு / இடுகாடு என்று பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல் | 10% |
| 4 | பள்ளிகளில் உட்கட்டமைப்புமேம்பாடு மற்றும் பொதுப் பயன்பாட்டு கட்டமைப்புகளை உருவாக்குதல் | 15% |
| 5 | பசுமை மற்றும் சுத்தமான கிராமம் | 10% |
| 6 | வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் வசதிகளை ஒருங்கிணைத்தல் | 10% |

மொத்த ஒதுக்கீட்டில் 30% ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு மாநில அரசு நிதி, பகிர்வு நிதி, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி, உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு நிதி மற்றும் மாநில நிதிக் குழு மானியம் ஆகியவற்றின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II, 2021-22-ம் ஆண்டில் ரூ.1455 கோடி மதிப்பீட்டில் 2657 கிராம ஊராட்சிகளிலும், 2022-23-ம் ஆண்டில் ரூ.1155 கோடி மதிப்பீட்டில் 2544 கிராம ஊராட்சிகளிலும் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படும்.

**4. பெரியார் நினைவு சமத்துவபுரம்**

சமூக நீதியை ஏற்படுத்தவும் சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் எனும் தந்தை பெரியார் அவர்களின் செய்தியை பரப்பவும் 1997-98-ம் ஆண்டில் பெரியார் நினைவு சமத்துவபுரம் தமிழக அரசால் துவங்கப்பட்டது. இத்திட்டம், இந்திய சுதந்திர பொன்விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக 1997 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் சமுதாய நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த தனிச்சிறப்பு வாய்ந்த திட்டமாகும். 100 வீடுகளும், அடிப்படை வசதிகளும் கொண்ட மாதிரி கிராமத்தை உருவாக்கிட 8 முதல் 10 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பு கண்டறியப்பட்டது. இவ்வீடுகள் பல்வேறு இனத்தைச் சேர்ந்த வீடற்ற ஏழை மக்களுக்கு ஒதுக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 1997-2001-ம் ஆண்டு வரையில் 145 சமத்துவபுரங்களும், 2008-2011-ம் ஆண்டு வரையில் 93 சமத்துவபுரங்களும் என மொத்தம் 238 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2008-2011-ல் அமைக்கப்பட்ட 93 சமத்துவபுரங்களில், பல்வேறு காரணங்களினால் 5 சமத்துவபுரங்கள் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இச்சமத்துவபுரங்கள் சமூக நீதி மற்றும் சமுதாய நல்லிணக்கத்திற்கான

அடையாளச் சின்னங்களாக விளங்குவதால் இவ்வரசு அனைத்து சமத்துவபுரங்களையும் (நகர்ப்புரங்களில் அமைந்துள்ள 15 சமத்துவபுரங்கள் உட்பட) பழுதுநீக்கி சீரமைக்க முடிவு செய்துள்ளது.
சமத்துவபுரங்களை சீரமைக்கும் பணி இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளது:

அ) 1997-2001-ல் கட்டப்பட்ட 145 சமத்துவபுரங்களையும், 2008-2011-ல் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படாத 4 சமத்துவபுரங்களையும் சீரமைக்கும் பணி 2021-22-ம் ஆண்டில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆ) 2008-2011-ல் கட்டப்பட்டு, மீதமுள்ள 88 சமத்துவபுரங்களை சீரமைக்கும் பணி 2022-23-ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

சமத்துவபுரங்கள் சீரமைப்பு என்பது ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளை பழுதுபார்ப்பதுடன், மிகவும் பழுதடைந்த வீடுகளை புதியதாக கட்டும் பணியையும்,
பொதுவான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலைகள், தெரு விளக்குகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளான சமுதாயக்கூடம், நூலகம், அங்கன்வாடி, பொது விநியோகக் கடை மற்றும் பள்ளி கட்டடம் போன்றவையும் புதுப்பிக்கப்படும். இவை தவிர, பெரியார் சிலை பராமரிப்பு, புதிய பெரியார் சிலை அமைத்தல் மற்றும் அலங்கார வளைவு பராமரிப்பு ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**நிதி ஒதுக்கீடு:**
இச்சமத்துவபுரங்களில் அமைந்துள்ள வீடுகளின் சிறு பழுதுகள் மற்றும் பொது பராமரிப்பிற்கு சராசரியாக வீடு ஒன்றிற்கு ரூ.50,000/- அரசால் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும். சிறுபழுதுகளை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட பயனாளிகள் மூலம் செயல்படுத்தப்படும். மேற்கூரை மீள வேய்தல் / வீடுகளை முழுமையாக புதுப்பித்தல் போன்ற நேர்வுகளில் பயனாளிகளின் இசைவுடன், ஒப்பந்தப்புள்ளி முறையை பின்பற்றி பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த நிதியுதவி ஒரு முறை மட்டுமே அரசால் வழங்கப்படும் என்பதால், பயனாளிகள் சீரமைப்பு பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதையும் முறையாக சீரமைப்பு பணி நடைபெறுவதையும் உறுதி செய்யவும் ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் குடியிருப்போர் நலச் சங்கம் அமைக்கப்படும். 149 சமத்துவபுரங்களை சீரமைக்கும் பணி ரூ.190 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### 5. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்.
சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை கண்டறிந்து அவற்றுக்கான பணிகளைத் தேர்வு செய்து செயல்படுத்துவதே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படுவதுடன், பணிகளை செயல்படுத்துவதற்கான செயலாக்க முகமைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. 2021-22-ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கு புதிய வழிகாட்டி நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண்.145, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி-1) துறை, நாள் 10.12.2021 மூலம் வெளியிடப்பட்டது.
புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்படும் மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.3 கோடியில் ரூ.90 இலட்சத்திற்கு முன்னுரிமை பணிகளையும், மீதமுள்ள ரூ.2.10 கோடியில் தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்த பணியையும் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் சட்டமன்ற

உறுப்பினர்கள் தேர்வு செய்யலாம். 2022-23-ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.705 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்ட ம் (TNRRIS)

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் ஊரகச் சாலைத் தொகுப்பினை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதலில் உள்ள இடைவெளியை நிரப்புதல் ஆகும். இத்திட்டத்திற்கான நிதி மாநில நிதிக்குழு மானிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:**

- இத்திட்டம் இரண்டு பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல், ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல் ஆகியவை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.
- மாவட்டங்களில் உள்ள பல்வேறு வகையான சாலைகளை தேவையின் அடிப்படையில் தேர்வு செய்ய தேவையான நெகிழ்வுத்தன்மையை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 29,163 கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூ. 6427.23 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. 2021-22-ம் ஆண்டில், 3473 கி.மீ நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் ரூ.998 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

### 7. புதுவாழ்வு திட்டம் – 2005

i. உலக வங்கியின் உதவியுடன், ஊரக மேம்பாடு (ம) பஞ்சாயத்து துறை இணைந்து வறுமையை ஒழிக்கவும் அதிகாரத்தை மேம்படுத்தவும் தொடங்கிய திட்டம்
ii. இத்திட்டம் சென்றடைய இலக்காக நிர்ணயிக்கப்பட்டவர்கள் ஏழை மக்கள், மாற்றுத்திறனாளிகள், ஒதுக்கப்பட்ட சமூக மக்கள் ஆகும்.

### 8. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத் திட்டம 2012-2013 (TNSRLM)

i. ஊரகப் பகுதிகளின் வருமானத்தை உயர்த்த கொண்டுவரப்பட்டது.
ii. நாகப்பட்டினம், அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் 266 பஞ்சாயத்துகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
iii. மத்திய, மாநில அரசு இணைந்து இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
iv. அரசுகளின் நிதி பங்களிப்பு 60:40
v. ஊரக மக்களுக்கு அடிப்படை வாழ்வாதார கட்டமைப்புகளை உருவாக்கித்தருதல்
vi. இத்திட்டத்தின் மூலம் கிராம, வட்டார, மாவட்ட அளவில் சுயஉதவிக்குழுக்கள் துவங்கப்பட்டது.

### 9. சுய உதவிக் குழு இயக்கம்

தொலைநோக்கு பார்வை கொண்ட முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையின் கீழ், 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக்குழுக்களுக்கான விதை விதைக்கப்பட்டது பெருமைக்குரியதாகும். ஐஃபாடு (IFAD) நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழு இயக்கம் வலுப்பெற்றது. 1996 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மகளிர் திட்டத்தின் கீழ் இந்த இயக்கம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. 2000 ஆம் ஆண்டுக்குள் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. பலமான சுய உதவிக் குழு அஸ்திவாரம் உருவாக்கப்பட்டிருந்ததால், 1999 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் பங்களிப்புடன் ஸ்வர்ணஜெயந்தி கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SGSY) அறிமுகப்படுத்தப்பட்டபோது, ஊரகப் பகுதியில்

உள்ள சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்த முடிந்தது.

**10. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், 1983 ஆம் ஆண்டு கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் தற்சார்பு மூலமாக மகளிர் சமூகப் பொருளாதார மேம்பாடு அடைவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்குத் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்கி, வங்கிக் கடன் இணைப்புகளையும், தொழில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றலை அதிகரித்து, சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்கிறது.

**நிறுவன ஏற்பாடுகள்:**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது. ஊரகம் மற்றும் நகர்ப்புர திட்டங்களைச் செயல்படுத்த மேலாண்மை இயக்குநர் அவர்களும், நகர்ப்புர வாழ்வாதாரத் திட்டத்தின் செயல் இயக்குநர், கருப்பொருள் வல்லுநர்களான கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் இதர அலுவலர்களுடன் மாநில அளவில் செயல்படுத்தப்படுகிறது. நிதி உள்ளாக்கம், வேளாண்மை மற்றும் தொழில் நிறுவன மேம்பாடு உள்ளிட்ட கருப்பொருட்களில் ஆலோசனை வழங்க திட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மாவட்ட அளவில், இணை இயக்குனர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சேர்ந்த அலுவலரை திட்ட இயக்குநர் TNSRLM தலைமையாகக் கொண்டு மாவட்ட திட்ட செயலாக்க அலகு செயல்படுகிறது. உதவித் திட்ட அலுவலர்கள் திட்டக் கூறுகளுக்கான அனைத்து களப் பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றனர்.

வட்டார இயக்க மேலாண்மை அலகானது, வட்டார இயக்க மேலாளர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் ஒதுக்கப்பட்ட திட்டக் கூறுகளை செயல்படுத்தி வருகிறார்கள். நகர்ப்புரங்களில், 3,000 ஏழைக் குடும்பங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு ஒரு சமுதாய ஒருங்கிணைப்பாளர் வாழ்வாதாரத் திட்டத்தினைக் கண்காணித்து செயல்படுத்துவர்.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பின்வரும் நான்கு முக்கிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

I. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)
II. தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் (NRETP)
III. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)
IV. தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் மேம்பாட்டுத் திட்டம் (DDU-GKY)

**11. தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் (NRETP)**

2019-2020 ஆம் ஆண்டு முதல் தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டமானது திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், ஈரோடு, சேலம் மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களின் 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கமானது உயர்தர செயல்பாடுகளான வட்டார அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்பு கூட்டு சங்கிலி, பண்ணைசார் மற்றும் பண்ணை சாரா துறைகளில் தனிநபர் மற்றும்

கூட்டு நிறுவனங்களை நிறுவுதல், திறன் மேம்பாடு மற்றும் மாற்று நிதிச் சேவைகள் வழங்குதல் போன்ற உயர்நிலை நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தி, சமூக முன்னேற்ற உத்திகள் கையாளப்படுகிறது. இத்திட்டம் 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய அரசு மற்றும் தமிழக அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

**முக்கிய முயற்சிகள்:**

i. சுய உதவிக் குழுக்களின் உயர்நிலை நிறுவனங்களை மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பாக உருவாக்குவதன் மூலம், மற்ற வட்டாரங்களுக்கு கருத்தாழ் (Immersion) நிறுவனமாக செயல்படும்.

ii. **சமுதாயம் நிர்வகிக்கும் பயிற்சி மையம்** (CMTCS) சமுதாயம் நிர்வகிக்கும் பயிற்சி மையமானது உள்ளூர் பகுதியில் பயிற்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சமுதாயத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2020-21 ஆம் ஆண்டிற்கு ஒரு சமுதாயம் நிர்வகிக்கும் பயிற்சி மையத்திற்கு ரூ.8 லட்சம் வீதம் ரூ.40 லட்சத்தில் 5 பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

iii. சுயஉதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு உடனடி கட்டணம் செலுத்தும் சேவை (IMPS), ஒருங்கிணைந்த கட்டண சேவை தளம் (UPI), பணபரிவர்த்த னை உபகரணம் (POS Machine) போன்ற மின்னனு நிதி சேவைகள் பயன்படுத்துவது தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 53 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இந்திய வங்கி மற்றும் நிதியியல் நிறுவனத்தில் (IIBF) மின்ன னு பரிவர்த்தனைகள் தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டு, சுய உதவிக் குழுவில் உள்ள மகளிருக்கு மின்னனு பரிவர்த்தனைகள் குறித்து கற்றுதரப்படுகிறது.

iv. **மகளிர் வாழ்வாதார சேவை மையம்** தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்டத்திலும், சுய உதவிக் குழு மகளிர் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், விரிவுப்படுத்தவும் அனைத்து வகையான வழிநடத்துதல் மற்றும் ஆதரவு சேவைகளை வழங்க மகளிர் வாழ்வாதார சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. வணிகத் திட்டம் தயாரித்தல், வங்கி இணைப்புகளுக்கு வழிநடத்துதல், சட்டப்பூர்வமான விதிமுறைகளுக்கு உட்பட்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் பல்வேறு அம்சங்களாகிய வலுவான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குதல், வாழ்வாதார மேம்பாடு, சமூக செயல்பாடுகள் ஆகியவை வட்டார அளவிலான அமைப்புடன் வலுவான ஒருங்கிணைப்பு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காப்பீட்டு மற்றும் ஓய்வூதியத் திட்டங்களின் வாழ்வாதார மேம்பாடு, தொழில் நிறுவன மேம்பாடு, தயாரிப்புகளை சந்தைப்படுத்தல் மற்றும் சுய உதவிக்குழு குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலையில் முழுமையான முன்னேற்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய உத்திகள், பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றை வட்டார அளவிலான அமைப்புகள் வழிநடத்தும்.

### 12. வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் மூன்றாம் தலைமுறை வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார அதிகாரம் அளிக்கும் திட்டம் ஆகும். இத்திட்டம், பெண்களை மையப்படுத்திய நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம், ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் வாழ்க்கையில் நிலையான வருமானத்தைப் பெறவும், வாழ்க்கையை ஒளிமயமானதாக மாற்றியமைக்கவும் முடியும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டமானது 31 மாவட்டங்களிலுள்ள (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் நீங்கலாக) 120 ஒன்றியங்களில் 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் என்ற பெயரில் செயல்பட்டு வந்த இத்திட்டம் அரசாணை (நிலை) எண்.12, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (CGS3) துறை, நாள்: 07.02.2022-ன் படி "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, ஊரகப் பகுதிகளில் சமூகப் பொருளாதார மாற்றத்தையும், தொழில் மேம்பாடு மற்றும் மேல்நோக்கிய வளர்ச்சியையும் தொலைநோக்காகக் கொண்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது.

உலக வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு இந்த திட்டத்திற்கு 70:30 என்ற விகிதத்தில் ரூ.910.37 கோடி மதிப்பீட்டில் நிதியளிக்கிறது.

**முக்கிய செயல் திட்டங்கள்:**

1. நிதி உதவி வழங்குதல்
2. திறன் மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி
3. நிறுவனங்களை உருவாக்குதல்

**நிதி உதவி வழங்குதல்:**

**அ. துவக்க நிதி:**

குழுத் தொழில் நடவடிக்கைகள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துதல், உள்ளீடு செலவை குறைத்தல், தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களின் வருமானம் மற்றும் இலாபத்தை அதிகப்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது.

(i) உற்பத்தியாளர் குழுவானது – 30 முதல் 150 நபர் வரையிலான உற்பத்தியாளர்களை ஒன்று திரட்டி, உற்பத்தியினை மேம்படுத்துவதால் அதிக வருமானத்தை ஈட்ட வழிவகை செய்கிறது. உற்பத்தியாளர் குழுக்கள் உரிய தகுதியை அடைந்த பின்னர் துவக்க நிதியாக ரூ. 75,000 வழங்கப்படும். 2021-22ம் ஆண்டில், 2477 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 2000 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.15 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

(ii) தொழில் குழுவானது 10-30 உறுப்பினர்களைக் கொண்ட குழு நிறுவனம் ஆகும். உற்பத்திச் செலவுகளைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும், கூட்டு உரிமை மற்றும் வணிகச் செயல்பாடுகளின் மீதான கட்டுப்பாட்டுடன், வருவாயை அதிகரித்து, லாபத்தை பகிர்ந்து கொள்ளும் தொழில் நிறுவனம் ஆகும். தொழில் குழுக்கள் உரிய தகுதியை அடைந்த பின்னர், துவக்க நிதியாக ரூ.75,000 வழங்கப்படும். 2021-22 நிதியாண்டில், 804 தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 500 தொழில் குழுக்களுக்கு ரூ.3.75 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

(iii) உற்பத்தியாளர் கூட்டமைப்பானது உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து, மதிப்பு கூட்டல், சந்தைப்படுத்தல் மற்றும் பொருளாதார சேவை வழங்குதல் ஆகியவற்றினை ஒருங்கிணைக்கும் உயர்நிலை நிறுவனமாகும். இது 300-3000 உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாகும். உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உரிய தகுதியை அடைந்த பின்னர், துவக்க நிதியாக ரூ.30 இலட்சம் வழங்கப்படும். 2021-22 நிதியாண்டில், 15 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் நிறுவன சட்டம் 2013-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**ஆ) இணை மானிய நிதி (MGP)**

ஊரகத் தொழில்முனைவோருக்கு தேவைப்படும் கடனுதவியை நிதி நிறுவனங்களிடமிருந்து எளிதாக பெற வழி வகை செய்ய இணை மானிய நிதி திட்டம் துணைபுரிகிறது. இத்திட்டத்தின் கீழ், ரூ. 91.60 கோடி ஊரக நிறுவனங்களுக்கு மானியமாக விடுவிக்கப்படும். இதனால் வங்கிகள் மூலம் ரூ.300 கோடி வரை தொழில் முனைவோர்களுக்கு கடனுதவி கிடைக்கும். இணை மானிய நிதி மூலம் தனி நபர் நிறுவனங்கள் மற்றும் குழு நிறுவனங்கள் பயனடையலாம். கடன் பெற்ற தனிநபர் மற்றும் குழு நிறுவனங்கள் முறையாக 70% கடனை திருப்பிச் செலுத்திய பின்பு மீதமுள்ள 30% கடன் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்குப் பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் 6000 நுண் நிறுவனங்கள், 500 குறு நிறுவனங்கள் மற்றும் 120 சிறு நிறுவனங்களுக்கு இணை மானிய நிதி வழங்கப்படும். இணை மானிய நிதியாக நுண், குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு முறையே ரூ.1 இலட்சம், ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.5 இலட்சம் என வழங்கப்படும்.

**திறன் மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி:**

வாழ்வாதார மேம்பாட்டிற்கும் வருமானத்தை உயர்த்துவதற்கும் ஏழை எளிய மக்களின் திறனை அதிகரிக்கவும் திறன் பயிற்சி முக்கிய தேவையாகும். ஊரகப் பகுதிகளில் வசிக்கும் திறன் வாய்ந்த தொழில் வல்லுநர்கள் மூலம் சமுதாயத் திறன் பள்ளிகள் மற்றும் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.

ஊராட்சி / வட்டார அளவில் தொன்மையான கைவினைத் தொழில்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் அதிக வருமானம் ஈட்டும் தொழில் முனைவோர்களில் அனுபவமுள்ள பயிற்றுநர்களைக் கண்டறிந்து, குறைந்தபட்ச உள்கட்டமைப்புகளை உருவாக்கி, இளைஞர்கள் வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் தொடங்குவதற்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்காக சமுதாயத் திறன் பள்ளிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 2021-22 ஆம் ஆண்டில், 501 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு 11,718 ஊரக இளைஞர்களுக்கு ரூ.3.92 கோடி செலவில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

பல வருட அனுபவத்தின் வாயிலாக நிபுணத்துவம் பெற்ற புதிய யுத்திகளைக் கையாளும் மற்றும் பிற விவசாயிகள், உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவை கற்றுக் கொடுக்கும் திறன் கொண்ட விவசாயிகளால் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.

2021-22 ஆம் நிதியாண்டில், 1131 சமுதாய பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள 34,689 உறுப்பினர்களுக்கு வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்பு தொடர்பான பயிற்சிகள் ரூ.7.62 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

**நிறுவனங்களை அமைத்தல்:**

(i) **மகளிர் வாழ்வாதார சேவை மையமானது** பொது கட்டமைப்புடன் வணிக மேம்பாட்டிற்கான ஆதரவு மற்றும் வேலை வாய்ப்புச் சேவைகளை வழங்க நிறுவப்பட்டுள்ளது. ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காக 30 மகளிர் வாழ்வாதார சேவை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(ii) **புலம் பெயர்ந்தோர் ஆதரவு மையமானது** சிறந்த வேலை வாய்ப்புகளுக்காகவும் மற்றும் தனிநபர் தொழில் மேம்பாட்டிற்காகவும் இடம் பெயர்ந்த திறனுள்ள கிராமப்புர இளைஞர்களின் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்கவும் அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு வழிகாட்டிடவும் செயல்படுத்தப்படும். இந்த முயற்சியினை பிற அமைப்புகளோடு குறிப்பாக தொழிற்கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவன கூட்டமைப்புகள் மற்றும் சமுதாய அமைப்புகளோடும் இணைந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முதலீட்டு பகுப்பாய்வு உத்தி மற்றும் திட்டமிடல்

1. மாவட்ட பகுப்பாய்வு அறிக்கையானது மாவட்டங்களில் உள்ள முக்கிய பண்ணை சார் மற்றும் பண்ணை சாரா துறைகளை கண்டறிவதற்காக மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை (DDS) அனைத்து திட்ட மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.
2. மதிப்புத் தொடர் ஆய்வானது சந்தைக் கட்டுப்பாடுகள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய ஆழமான புரிதலைப் பெறுவதற்கு மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை மூலம் அடையாளம் காணப்பட்ட 24 முன்னுரிமைப் பொருட்களில் பகுப்பாய்வு நடத்தப்பட்டு மதிப்புத் தொடர் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
3. மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டமானது, தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்களை அடையாளம் காண கிராம அளவில் நடத்தப்படும் முதலீட்டு திட்டங்களை உள்ளடக்கிய பயிற்சியாகும். கிராம முதலீட்டுத் திட்டங்கள் தயாரித்து ஒருங்கிணைக்கப்பட்டு, வட்டார முதலீட்டுத் திட்டங்களாகவும், மாவட்ட முதலீட்டுத் திட்டங்களாகவும் உருவாக்கப்பட்டுள்ளன.

**13. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது, நகர்ப்புர ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, அவர்களின் வறுமையையும் நலிவு நிலையையும் குறைத்து,சுய வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்த தன்மை அடையச் செய்வதும் ஆகும். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கமானது 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (**TNULM**) ஆரம்ப கால கட்டத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்பட்டது. 2016-17 ஆம் ஆண்டு முதல், இத்திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் கூறுகள்:**

1. சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SMID)
2. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வு (ESTP)
3. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CBT)
4. சுயவேலைவாய்ப்புத் திட்டம் (SEP)
5. நகர்ப்புர வீடற்றோருக்கு உறைவிடம் (SUH)
6. நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார திட்டம் (SUSV)
7. புதுமை மற்றும் சிறப்புத் திட்டங்கள் (ISP)

**சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு:**

**அ) சுய உதவிக்குழுக்கள் அமைத்தல் மற்றும் சுழல் நிதி வழங்குதல்:**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் நகர்ப்புர ஏழைகள் மற்றும் நலிவுற்றோரை உறுப்பினர்களாகக் கொண்டு, சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் அமைத்து, ஒட்டுமொத்த சமுதாயத்தினை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் சுய உதவிக்குழுக்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் வழங்கி மூன்று மாதங்கள் முடிவடைந்த பின்பு, தரமதிப்பீட்டின் அடிப்படையில், அக்குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில் 20,438 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதில் 15,959 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக 15.96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ஆ) பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் சுழல் நிதி வழங்குதல்:**

பகுதி அளவிலான கூட்டமைப்பு குறைந்த பட்சம் 10 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து குடியிருப்புப் பகுதி / வார்டு அளவில் ஏற்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு பகுதி அளவிலான கூட்டமைப்பும், அதன் உறுப்பினர் குழுக்களுக்கு முறையான வட்டி விகிதத்தில் உடனடியாக கடன் பெற வழிவகை செய்தல், மற்றும் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக உள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் 215 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சுழல் நிதியாக 1.08 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டம்:**

வேலை வாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டமானது நகர்ப்புர ஏழை எளிய குடும்பங்களை சார்ந்த இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியளித்து சுய தொழில் அல்லது ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி அவர்களின் வருமானத்தைப் பெருக்கி நிலைத்த வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் தினக்கூலி அல்லது பருவகால தொழில் செய்யக்கூடிய நகர்ப்புர ஏழைகளின் தொழில் பாதிப்புகளை குறைக்கும் வகையிலான பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில் 7,662 நகர்ப்புரத்தை சார்ந்த இளைஞர்களுக்கு 11.20 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி:**

நகர்ப்புரத்தில் வறுமையை ஒழிப்பதற்கும், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான பயிற்சிகளை வழங்குவது திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி திட்டத்தின் நோக்கமாகும். இந்த உட்கூறின் கீழ் மாநில, மாவட்ட மற்றும் நகர அளவில் திட்டத்தினை அமலாக்கம் செய்யும் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதன் வாயிலாக ஏழை மக்களின் சமூக அமைப்புகளை கட்டமைப்பு செய்து திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வழிவகை செய்கிறது.

**சுய வேலைவாய்ப்புத் திட்டம்:**

இத்திட்டமானது நகர்ப்புர ஏழை குடும்பங்களைச் சார்ந்த தனி நபர் மற்றும் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த வேலை வாய்ப்பற்ற மற்றும் தகுதிக்கும் குறைவான வருமானத்தில் பணிபுரிபவர்களை அடையாளம் கண்டு, அவரவர் திறன் மற்றும் உள்ளூர் நிலைமைக்கு ஏற்றார் போல் சுய வேலைவாய்ப்பு மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கு வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் 8,053 தனி நபர்களுக்கு 45 கோடி ரூபாய், 5,245 தொழில் குழுக்களுக்கு 167.48 கோடி ரூபாய் மற்றும் 14,237 சுய உதவிக் குழுக்களுக்கு 644.42 கோடி ரூபாய் வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட திட்டங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டங்களை ஒருங்கிணைத்து நிதியுதவி வழங்கி செயல்படுத்தி வருகிறது.

1. நகர்ப்புர வீடற்றோருக்கு உறைவிடம் (SUH)
2. நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் (SUSV)
3. பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகள் சுய சார்பு நிதி திட்ட ம் (PMSVANidhi)

## 14. ஸ்வச் பாரத் மிஷன் – நகர்ப்புற (SBM-U) 2.0

**குறிக்கோள்கள்:**

- பொது இடங்களில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்தல், அனைத்து நகரங்களையும் தூய்மையாகவும் குப்பைகள் இல்லாததாகவும் மாற்ற, 100% முனிசிபிள் திடக்கழிவுகளை (MSW) அறிவியல் பூர்வமாக செயலாக்குதல்.
- திடக்கழிவு மேலாண்மை (SWM) நடவடிக்கைகளால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் குறைத்தல்.
- ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் உபயோகத்தை படிப்படியாகக் குறைத்தல்.
- முழுமையான சுகாதாரம், இறுதி முதல் இறுதி தீர்வுகள் (வெளியேற்றம், கட்டுப்படுத்துதல், வெளியேற்றம், போக்குவரத்து முதல் கழிப்பறைகளில் இருந்து வெளியேறும் அனைத்து கழிவுகளையும் பாதுகாப்பாக அகற்றுவது வரை).
- ‘ஜன் அந்தோலனை’ உருவாக்குவதற்கும், ‘ஸ்வச்’ நடத்தையை நிறுவனமயமாக்குவதற்கும் பெரிய அளவிலான குடிமக்களுடன் விழிப்புணர்வு உருவாக்கம்.
- பணி நோக்கங்களை அடைவதற்காக நிரல் தலையீடுகளை திறம்பட செயல்படுத்த நிறுவன திறனை உருவாக்குதல்.
- நீர்நிலைகளில் வெளியேற்றப்படுவதற்கு முன் பயன்படுத்தப்பட்ட நீரை சுத்திகரித்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீரை அதிகபட்சமாக மீண்டும் பயன்படுத்துதல்.
- சாக்கடைகள் மற்றும் செப்டிக் டேங்க்களில் அபாயகரமான நுழைவை ஒழித்தல் மற்றும் கழிவுநீர் மற்றும் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் செயல்பாடுகளை இயந்திரமயமாக்குவதன் மூலம் கைமுறையாக சுத்தம் செய்வதை நீக்குதல்.

**முக்கிய அம்சங்கள்:**

- **பின்னணி:**
  - ஸ்வச் பாரத் மிஷன்-அர்பன் (SBM-U) ஐந்தாண்டுகளுக்கு (2014-2019) 2014 அக்டோபர் 2 ஆம் தேதி ஸ்வச் இந்தியாவை உருவாக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத (ODF) இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை இந்தியா உணர்ந்துள்ளது.
  - அக்டோபர் 2, 2021 வரை, 3,309 நகரங்கள் ODF+ சான்றிதழ் பெற்றுள்ளன, 960 நகரங்கள் ODF++ சான்றிதழைப் பெற்றுள்ளன, மேலும் 9 நகரங்கள் மூன்றாம் தரப்பு சரிபார்ப்பு மூலம் நீர்+ ஆக மாறியுள்ளன.
  - மீதமுள்ள பணியை முடிப்பதற்கும், ‘ஸ்வச்’ நடத்தையை நிறுவனமயமாக்குவதற்கும், அதை நிலையானதாக மாற்றுவதற்கும் பணி இப்போது நீட்டிக்கப்பட்டுள்ளது.
- மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்கள் மற்றும் ULB கள் MoHUA உடன் முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளன. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், “குப்பை இல்லாத நகரங்களை” உருவாக்குவதற்கான MoHUA, மாநிலம்/ UT மற்றும் ULBகளின் கூட்டு நோக்கத்தை பிரதிபலிக்கிறது.

  **குப்பையில்லா நகரங்களை உருவாக்குவதில் கவனம்:**

  ✓ முழுமையான மூலப் பிரிப்பு

  ✓ கட்டுமானம் மற்றும் இடிப்புக் கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் உட்பட அனைத்து கழிவுப் பகுதிகளின் முழுமையான செயலாக்கம்

- ✓ ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை படிப்படியாக குறைத்தல்
- ✓ மரபுவழி குப்பைகள் அனைத்தையும் சரிசெய்தல்

- **எதிர்பார்க்கப்படும் முடிவுகள்:**
  - அனைத்து சட்டப்பூர்வ நகரங்களும் குறைந்தபட்சம் 3-நட்சத்திர குப்பை இல்லாதவை அல்லது அதற்கு மேற்பட்டவை என்று சான்றளிக்கப்பட்டுள்ளன;
  - அனைத்து சட்டப்பூர்வ நகரங்களும் குறைந்தபட்சம் ODF+ ஆக மாறும்;
  - 1 லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட அனைத்து சட்டப்பூர்வ நகரங்களும் குறைந்தபட்சம் ODF++ ஆக மாறும்;
  - 1 லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட அனைத்து சட்டப்பூர்வ நகரங்களில் குறைந்தது 50% நீர்+ ஆக மாறுகிறது.
- **நிதிப் பகிர்வு மையம்:** திட்ட நிதியின் மாநிலப் பகிர்வு இப்படி இருக்கும்
  - NE/இமயமலை மாநிலங்களில் உள்ள ULBகளுக்கு 90%:10%
  - சட்டமன்றம் இல்லாத யூனியன் பிரதேசங்களுக்கு 100%
  - 80%: சட்டமன்றம் கொண்ட யூடிகளுக்கு 20%
  - 25%: 10 லட்சம் மற்றும் ULBகளுக்கு 75%
  - 33%: 1 லட்சம் முதல் 10 லட்சம் மக்கள்தொகை கொண்ட ULBகளுக்கு 67% (இரண்டும் சேர்த்து)
  - 50%: 1 லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட ULB களுக்கு 50%

**கழிவறைகள் (IHHL அல்லது தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள், சமூகம்/பொதுக் கழிப்பறைகள், சிறுநீர்க்குழாய்கள்):** நகர்ப்புற இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனும் பாதுகாப்பான சுகாதார உள்கட்டமைப்புக்கான அணுகலையும், சேறுகளை பாதுகாப்பான கட்டுப்பாட்டு வசதிகளையும் அணுகுவதை உறுதிசெய்ய ஒரு செறிவூட்டல் அணுகுமுறையை அமைக்கிறது.

**வழிகாட்டும் கொள்கைகள்:**

- பங்கேற்பு
  - ஜன் அந்தோலன்: 'ஸ்வச்சதா'வின் இதயத்தில் சமபங்கு மற்றும் உள்ளடக்கம்.
  - தாக்கத்திற்கான போட்டி: நகரங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டியை மேம்படுத்துதல், ஆர்வமுள்ள மாவட்டங்களின் ULB களில் சிறப்பு கவனம் செலுத்துதல்.
- **Swachhata தரநிலைகள்:** MoHUA ஆனது SBM-U இன் கீழ் இந்தியா முழுவதும் துப்புரவு மற்றும் திடக்கழிவு மேலாண்மையில் தரப்படுத்தப்பட்ட விளைவுகளை உறுதி செய்வதற்காக ODF, ODF+, ODF++, Water+ மற்றும் குப்பையில்லா நகரங்களுக்கான நட்சத்திர மதிப்பீட்டு நெறிமுறைகளை உள்ளடக்கிய பல தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- **திறன் உருவாக்கம் மூலம்:**
  - தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அம்சங்களில் நிறுவன மற்றும் தனிப்பட்ட திறன்களை உருவாக்க மின்-கற்றல் மற்றும் பிற நிரூபிக்கப்பட்ட தளங்களை வலுப்படுத்துதல்;
  - துப்புரவு மற்றும் கழிவு மேலாண்மை துறையில் திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்துதல்.
- **கூட்டாண்மைகள்:** மிஷன் அனைத்து மேம்பாட்டு பங்காளிகள், அறிவு பங்காளிகள், துறை பங்குதாரர்கள் மற்றும் தொழில்துறையினருடன் தீவிரமாக ஈடுபடும், அவர்களின் ஆதரவு மற்றும் உதவியை நிலத்தில் பணி விளைவுகளை விரைவுபடுத்தவும்,

அத்துடன் SWM மற்றும் பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை துறைகளில் நிறுவன திறன்களை வலுப்படுத்தவும்.

- **டிஜிட்டல் செயலாக்கம்:**
  - வலுவான ICT இயக்கப்பட்ட நிர்வாகம், ஏற்கனவே SBM-அர்பன் கீழ் முக்கிய அம்சமாக உள்ளது, தீவிர கவனம் செலுத்தி, சொத்துக்களை நிகழ்நேர கண்காணிப்பை செயல்படுத்த, அவற்றின் முழு திறன் பயன்பாட்டை உறுதிசெய்ய, மற்றும் மிஷன் டிஜிட்டல் மற்றும் காகிதமற்றதாக மாற்றப்படும்.
  - செயல்பாட்டுக் கட்டத்தில் செயல்திறன் அளவுருக்கள் குறித்த நிகழ்நேரத் தரவை வழங்க டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு அனைத்து திட்டங்களுக்கும் சேவைகளுக்கும் கட்டாயமாக இருக்க வேண்டும்.
- தொழில்நுட்ப மேம்பாடு, சமூக நிறுவனங்களுக்கான புதுமை மற்றும் ஊக்கம்: சிறு அளவிலான மற்றும் தனியார் தொழில்முனைவோர் மற்றும் ஸ்டார்ட் அப்கள் மூலம், உள்நாட்டில் புதுமையான, செலவு குறைந்த தீர்வுகள் மற்றும் வணிக மாதிரிகளை பின்பற்றுவதை மிஷன் ஊக்குவிக்கும். "ஆத்ம நிர்பர் பாரத்" மற்றும் "மேக் இன் இந்தியா" என்ற அரசாங்கத்தின் பார்வையை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக, அரசு இ-மார்க்கெட்பிளேஸ் (GeM) போர்ட்டலில் சேர்ப்பதற்கான சவால்கள் மற்றும் வசதிகள்.
- திட்டமிடலில் கவனம் செலுத்துங்கள்: இடைவெளி பகுப்பாய்வின் அடிப்படையில் பல்வேறு செயல் திட்டங்களை வரைந்து சமர்ப்பிக்க ULBகள் தேவைப்படும்.
- செயல்பாட்டு முடிவுகள் மற்றும் அவற்றின் கண்காணிப்பில் கவனம் செலுத்துதல்: இந்த இயக்கத்தின் முக்கிய அம்சம் விளைவு அடிப்படையிலான நிதி வெளியீடுகளாக இருக்கும், இதில் மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களுக்கு மத்தியப் பங்கின் முதல் மற்றும் இரண்டாவது தவணைகள் வெளியிடப்படும். / UTகள் மற்றும் ULBகள்.
  - SBM-U MIS போர்டல், நடைமுறையில் வழிகாட்டும் கொள்கைகள் எந்த அளவிற்கு முன்னோக்கிச் செல்லப்படுகின்றன என்பதைக் கண்காணிக்க தரைமட்டத் தரவைக் கைப்பற்றும்.
- நகர்ப்புற-கிராமப்புற ஒருங்கிணைப்பு: பொதுவான கழிவு செயலாக்க வசதிகள் திறமையாகப் பயன்படுத்தப்படும் வகையில், அண்டை ULB கள் மற்றும் கிராமப்புறங்களின் குழுக்களைப் பூர்த்தி செய்ய, கிளஸ்டர் அடிப்படையில் உள்கட்டமைப்பு திட்டங்கள் எடுக்கப்படும்.
- மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் மற்றும் ULB கள் தங்கள் டெண்டர் ஆவணங்களைத் தயாரிக்கக் குறிப்பிடக்கூடிய மாதிரி RFP களை உருவாக்குவதன் மூலம் செயல்படுத்தும் சூழலை உருவாக்குதல், மாநிலங்கள் / ULB கள் GeM மூலம் கொள்முதல் செய்ய உதவுதல் போன்றவை.
- விளைவுகளை அடைய 15வது நிதி ஆணையத்தின் மானியங்களை (இரண்டும் இணைக்கப்பட்ட மற்றும் கட்டப்படாதவை) பயன்படுத்துதல்: 15வது எஃப்சிக்கு கீழ், 10 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட நகரங்களுக்கு துப்புரவு தொடர்பான சேவை நிலை வரையறைகளை சந்திப்பதற்காக 5 ஆண்டு காலத்தில் ₹13,029 கோடி சவால் நிதியாக வழங்கப்படுகிறது. மற்றும் திடக்கழிவு மேலாண்மை.
  - 10 லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட ULBகளுக்கான மொத்த மானியமான ₹82,859 கோடியில், 40% மானியங்கள் கட்டப்படாமல் உள்ளன, 60% சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட தேசிய முன்னுரிமைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

- தேசிய பணிகள் மற்றும் தேசிய முன்னுரிமைகளுடன் சீரமைத்தல்: எடுத்துக்காட்டாக. C & D (கட்டுமானம் மற்றும் இடிப்பு) கழிவு மேலாண்மை மூலம் தூசி தணிப்பு தேசிய சுத்தமான காற்று திட்டத்துடன் (NCAP) இணைந்திருக்கும்; தனியார் துறை ஈடுபாடு உத்தியானது ஸ்டார்ட்-அப் இந்தியா மற்றும் மேக் இன் இந்தியா ஆகியவற்றின் ஆணைகளுடன் இணைந்திருக்கும்; அனைத்து பணி விளைவுகளையும் கண்காணிப்பதற்காக, டிஜிட்டல் இந்தியா, தேசிய நகர்ப்புற டிஜிட்டல் மிஷன் (NUDM) மற்றும் ஸ்மார்ட் சிட்டிஸ் மிஷன் ஆகியவற்றின் கட்டளைகளுடன் மிஷன் இணைந்திருக்கும், நமாமி கங்கே முதலியன.

**தொடர்புடைய முன்முயற்சிகள்:**

**குப்பையில்லா நகரங்களின் நட்சத்திர மதிப்பீடு நெறிமுறை (GFC)-டூல்கிட் 2022:**

- MoHUA ஆல் தொடங்கப்பட்ட இந்த கருவித்தொகுப்பு, ஸ்வச் பாரத் மிஷன்-அர்பன் (SBM-U) 2.0 இன் முன்னுரிமைகளுடன் சீரமைக்கப்பட்டுள்ளது, வீடு வீடாக குப்பை சேகரிப்பு, மூலப் பிரிப்பு, கழிவுகளை பதப்படுத்துதல் மற்றும் குப்பைகளை அகற்றுதல் ஆகியவற்றுக்கு அதிக எடை ஒதுக்கப்படுகிறது.
- SBM-U 2.0 மற்றும் 15வது நிதிக் கமிஷன் ஆகிய இரண்டிற்கும், ULB கள் குறைந்தபட்சம் 1-நட்சத்திர சான்றிதழைப் பெற்றால், அரசு நிதியை விடுவிப்பது நிபந்தனைக்கு உட்பட்டது.
- குப்பை இல்லாத நகரங்களின் நட்சத்திர மதிப்பீடு
    - ஸ்டார்-ரேட்டிங் முயற்சியானது திடக்கழிவு மேலாண்மைக்கான 25 முக்கிய அளவுருக்களின் அடிப்படையில் 7-நட்சத்திர மதிப்பீட்டு முறையில் நகரங்களை மதிப்பிடும், இதில் வீடு வீடாக சேகரிப்பு, மொத்த ஜெனரேட்டர் இணக்கம், மூலப் பிரிப்பு, துடைத்தல், கழிவுகளை விஞ்ஞான ரீதியாக செயலாக்குதல், அறிவியல் நிலம் நிரப்புதல், பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, கட்டுமானம் மற்றும் இடிப்பு மேலாண்மை, குப்பைகளை சரிசெய்தல் மற்றும் குடிமக்கள் குறை தீர்க்கும் அமைப்பு போன்றவை.
    - குறிப்பிட்ட நட்சத்திர மதிப்பீட்டை அடைவதற்கு நகரங்கள் சுய மதிப்பீடு மற்றும் சுய சரிபார்ப்பை மேற்கொள்ள வேண்டும். குடிமக்களும் இதில் ஈடுபட வேண்டும்.

**ஸ்வச் சர்வேக்ஷன்:**

- இது இந்தியா முழுவதும் உள்ள நகரங்கள் மற்றும் நகரங்களில் தூய்மை, சுகாதாரம் மற்றும் சுகாதாரம் பற்றிய வருடாந்திர கணக்கெடுப்பாகும். இது SBM இன் ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது.
- இது உலகின் மிகப்பெரிய தூய்மை கணக்கெடுப்பு ஆகும்.
- கணக்கெடுப்பின் நோக்கம், பெரிய அளவிலான குடிமக்கள் பங்கேற்பை ஊக்குவித்தல், குப்பை இல்லா மற்றும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நகரங்களுக்கு எடுக்கப்பட்ட முன்முயற்சிகளின் நிலைத்தன்மையை உறுதி செய்தல், மூன்றாம் தரப்பு சான்றிதழின் மூலம் சரிபார்க்கப்படும் நம்பகமான விளைவுகளை வழங்குதல், ஆன்லைன் செயல்முறைகள் மூலம் இருக்கும் அமைப்புகளை நிறுவனமயமாக்குதல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல். சமூகத்தின் அனைத்து பிரிவுகளும்.
- இந்திய தர கவுன்சில் (QCI) அதன் செயல்படுத்தல் பங்குதாரர்.

**குறிப்பு:**

- **ODF:** ஒரு நாளின் எந்த நேரத்திலும், ஒரு நபர் கூட திறந்த வெளியில் மலம் கழிக்கவில்லை எனில், ஒரு நகரம்/வார்டு ODF நகரம்/வார்டு என அறிவிக்கப்படும்.

- **ODF+:** தண்ணீர், பராமரிப்பு மற்றும் சுகாதாரம் கொண்ட கழிவறைகள்.
- **ODF++:** கசடு மற்றும் செப்டேஜ் மேலாண்மை கொண்ட கழிவறைகள்.
- **நீர்+:** சுத்திகரிக்கப்படாத கழிவு (பயன்படுத்தப்பட்ட) நீர் திறந்த சூழல் அல்லது நீர்நிலைகளில் வெளியேற்றப்படுவதை உறுதி செய்யவும்.
- MoHUA இன் படி ODF நெறிமுறைகளின் அடிப்படையில் ஒருமுறையாவது ODF சான்றிதழ் பெற்ற நகரங்கள், தங்களை SBM-ODF+ & SBM-ODF++ என அறிவிக்க தகுதியுடையவை.

### 15. அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

ஒன்றிய அரசு, அதன் முதன்மைத் திட்டமான அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தை (AMRUT) ஜுன் 2015இல் தொடங்கியது. இத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது, (அ) ஒவ்வொரு வீட்டிற்கும் தடையற்ற குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் இணைப்பு, (ஆ) பசுமை மற்றும் நன்றாக பராமரிக்கப்பட்ட திறந்தவெளிகளை (எடுத்து காட்டாக. பூங்காக்கள்) மேம்படுத்துவதன் மூலம் நகரங்களின் மதிப்பை ஏற்றமுற செய்தல்; மற்றும் (இ) பொதுப் போக்குவரத்திற்கு மாறுவதன் மூலம் மாசுபாட்டை குறைத்தல் அல்லது மோட்டார் சாராத போக்குவரத்திற்கான வசதிகளை அமைப்பது (எ.கா. நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டுதல்) ஆகியவற்றை அடைவதாகும். இத்திட்டச் செயலாக்க காலம் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஆகும்.

தமிழ்நாட்டில், 28 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அதாவது, 15 மாநகராட்சிகள், 12 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி ஆகியவற்றில் அம்ருத் திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**அம்ருத் திட்டங்களின் விவரம்:**

ஒன்றிய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாநில ஆண்டு செயல் திட்டங்களின் (I, II, III) அடிப்படையில், ‘அம்ருத்’ திட்டங்கள் 28 பெருநகரங்கள்/நகரங்களில் செயல்படுத்தப்படுகின்றன. மொத்தம் ரூ.11,441.41 கோடி மதிப்பீட்டிலான 445 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே அதிக நிதி ஒதுக்கீடு பெற்றுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

### 16. சீர்மிகு நகரங்கள் திட்டம் (Smart Cities Mission)

சீர்மிகு நகரத்திட்டத்தின் நோக்கமானது, முக்கிய உட்கட்டமைப்பை வழங்கும், நிலையான மற்றும் உள்ளடக்கிய நகரங்கள், குடிமக்களுக்கு தரமான வாழ்க்கை சூழலை ஏற்படுத்துதல், சுத்தமான மற்றும் நிலையான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவது மற்றும் சீர்மிகு தீர்வுகளை பயன்படுத்துவது ஆகும்.

தமிழ்நாட்டின் 11 நகரங்கள், அதாவது சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகியவை இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட 11 நகரங்களிலும், ஒவ்வொரு நகரத்திற்கும் ஒன்றிய மற்றும் மாநில நிதிபங்களிப்பாக தலா ரூ.500 கோடி (ஒவ்வொரு நகரத்திற்கும் மொத்தம் ரூ.1,000 கோடி) நிதியின் கீழ், சீர்மிகு நகர திட்டப் பணிகள், திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயலாக்கப்படுகின்றன.

### 17. ஜல் ஜீவன் மிஷன் (நகர்ப்புறம்)

**குறிக்கோள்கள்:**

- அனைத்து 4,378 சட்டப்பூர்வ நகரங்களிலும் SDG இலக்கு- 6 இன் படி செயல்பாட்டு குழாய்கள் மூலம் அனைத்து வீடுகளுக்கும் நீர் விநியோகத்தின் உலகளாவிய கவரேஜ் வழங்குதல்.
- 500 AMRUT நகரங்களில் கழிவுநீர்/செப்டேஜ் மேலாண்மைக்கான பாதுகாப்பு வழங்குதல்.

- நிலையான நன்னீர் விநியோகத்தை பெருக்க நீர்நிலைகளை புத்துயிர் பெறுதல் மற்றும் பசுமையான இடங்கள் மற்றும் கடற்பாசி நகரங்களை உருவாக்குதல் மற்றும் வெள்ளத்தை குறைக்க மற்றும் நகர்ப்புற நீர்நிலை மேலாண்மை திட்டத்தின் மூலம் வசதி மதிப்பை மேம்படுத்துதல்.

**முக்கிய அம்சங்கள்:**

1. இந்த பணி 2021-22 பட்ஜெட்டில் தொடங்கப்பட்டது.
2. நிதியுதவி – யூனியன் பிரதேசங்களுக்கு 100%, வடகிழக்கு மற்றும் மலை மாநிலங்களுக்கு 90%, 1 லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகரங்களுக்கு 50%, 1 லட்சம் முதல் 10 லட்சம் மக்கள்தொகை கொண்ட நகரங்களுக்கு மூன்றில் ஒரு பங்கு மற்றும் மில்லியன் மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு 25%.
3. விளைவு அடிப்படையிலான நிதியுதவி – 20:40:40 என்ற மூன்று தவணைகளில் நிதி வழங்கப்படும். அடையப்பட்ட முடிவுகள் மற்றும் நம்பகமான விலக்கு ஆகியவற்றின் அடிப்படையில் மூன்றாம் தவணை வெளியிடப்படும்.
4. PPP மாதிரியை ஊக்குவித்தல் – மில்லியன் கணக்கான மக்கள்தொகை கொண்ட நகரங்கள் தங்கள் மொத்த திட்ட நிதி ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 10% மதிப்புள்ள PPP திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.
5. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மறுசுழற்சி / மறுபயன்பாடு, நீர்நிலைகளின் புத்துயிர் மற்றும் நீர் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் ஒவ்வொரு நகரத்திற்கும் நகர நீர் சமநிலை திட்டத்தை உருவாக்குவதன் மூலம் நீரின் வட்ட பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.
6. தண்ணீருக்கான தொழில்நுட்ப துணைப் பணி - இது நீர் துறையில் சமீபத்திய உலகளாவிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.
7. தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் (IEC) பிரச்சாரம் – நீர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே பரப்புதல்.
8. பே ஜல் சர்வேக்ஷன் – இது நகரங்களில் சமமான நீரின் விநியோகம், கழிவு நீரை மறுபயன்பாடு செய்தல் மற்றும் நீரின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றைப் பொறுத்து நீர்நிலைகளின் வரைபடத்தை ஒரு சவாலான செயல்முறை மூலம் உறுதிப்படுத்தும்.
9. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் நகரங்களின் நீர் பாதுகாப்பில் கவனம் செலுத்தும் சீர்திருத்த நிகழ்ச்சி நிரல்.
10. வருவாய் அல்லாத தண்ணீரை 20%க்குக் குறைத்தல்.
11. மொத்த நகர நீர் தேவையில் குறைந்தது 20% மற்றும் மாநில அளவில் தொழில்துறை நீர் தேவைக்கு 40% பூர்த்தி செய்ய சுத்திகரிக்கப்பட்ட நீரின் மறுசுழற்சி; இரட்டை குழாய் அமைப்பு, மின்சார வாகன சார்ஜிங் புள்ளிகள்.
12. நகரங்களின் ஜிஐஎஸ் அடிப்படையிலான மாஸ்டர் பிளான்கள்; முனிசிபல் பத்திரங்கள் மற்றும் நீர்நிலைகளை புத்துயிர் அளிப்பதன் மூலம் நிதி திரட்டுதல்.

**18. பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா (PMAY)- நகர்ப்புறம்**

**குறிக்கோள்கள்:**

- மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் (UTகள்) மற்றும் மத்திய நோடல் ஏஜென்சிகள் (CNAக்கள்) மூலம் செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு மத்திய உதவியை வழங்குதல், தகுதியான குடும்பங்கள்/

பயனாளிகள் அனைவருக்கும் வீடுகளுக்கான சரிபார்க்கப்பட்ட தேவைக்கு எதிராக சுமார் 1.12 கோடிக்கு வீடுகளை வழங்குதல்.

**நோக்கம் கொண்ட பயனாளிகள்:**

- பயனாளிகளில் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினர் (EWS), குறைந்த வருமானம் கொண்ட குழுக்கள் (LIGs) மற்றும் நடுத்தர வருவாய் குழுக்கள் (MIGs) அடங்குவர். ஆண்டு வருமான வரம்பு EWSக்கு ரூ.3 லட்சம், எல்ஐஜிக்கு ரூ.3-6 லட்சம் மற்றும் எம்ஐஜிக்கு ரூ.6 முதல் 18 லட்சம் வரை.
- பயனாளி குடும்பம் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் அவர்/அவள் பெயரிலோ அல்லது அவரது/அவரது குடும்ப உறுப்பினர்களின் பெயரிலோ பக்கா வீடு வைத்திருக்கக் கூடாது.

**முக்கிய அம்சங்கள்:**

- கிரெடிட் இணைக்கப்பட்ட மானியக் கூறுகள் மட்டுமே மத்தியத் துறைத் திட்டமாகும், மற்ற மூன்று கூறுகள் மத்திய நிதியுதவித் திட்டமாக (CSS) செயல்படுத்தப்படும்.
- இது மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBs) மற்றும் பிற செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு மத்திய உதவியை வழங்குகிறது:
  - ✓ ISSR (இன்-சிட்டு சேரி மறுமேம்பாடு)
  - ✓ CLSS (கடன் இணைக்கப்பட்ட மானியத் திட்டம்)
  - ✓ AHP (கூட்டுடன் கூடிய மலிவு வீடு)
  - ✓ BLC (பயனாளிகள் தலைமையிலான கட்டுமானம்)
- EWS வகைப் பயனாளிகள் பணிகளின் நான்கு செங்குத்துகளிலும் உதவி பெறத் தகுதியுடையவர்கள், அதேசமயம் LIG மற்றும் MIG பிரிவுகள் மிஷனின் கிரெடிட் இணைக்கப்பட்ட மானியத் திட்டத்தின் (CLSS) கூறுகளின் கீழ் மட்டுமே தகுதியுடையவை.
- திட்டத்தின் கீழ், பயனாளிகள் ஒரு கூறுகளின் கீழ் மட்டுமே பயன்பெற முடியும்.
- பணியின் கீழ் மத்திய உதவியுடன் கட்டப்படும்/பெறப்பட்ட வீடுகள் பெண் குடும்பத் தலைவரின் பெயரிலோ அல்லது ஆண் குடும்பத் தலைவர் மற்றும் அவரது மனைவியின் கூட்டுப் பெயரிலோ, வயது வந்த பெண் இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டுமே இருக்க வேண்டும். குடும்பத்தில் உள்ள உறுப்பினர், வீடு குடும்பத்தின் ஆண் உறுப்பினரின் பெயரில் இருக்கலாம்.
- மாநிலங்களுக்கு தங்கள் மாநிலங்களில் வீட்டு தேவையை பூர்த்தி செய்ய சிறந்த விருப்பங்களை தேர்வு செய்வதற்கான நெகிழ்வுத்தன்மை
- மத்திய மானியம் ரூ. குடிசை மறுவாழ்வு திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கு சராசரியாக ஒரு லட்சம் கிடைக்கும்.
- தேசிய வீட்டுவசதி வங்கி (NHB) மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (HUDCO) ஆகியவை CLSS ஐ செயல்படுத்துவதற்கான மத்திய நோடல் ஏஜென்சியாக நியமிக்கப்பட்டுள்ளன.
- வீடுகளின் கட்டுமானத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கான புவி-குறியிடல், மின்னணு நிதிப் புழக்கத்தை உறுதி செய்வதற்கான பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) மற்றும் புதிய கட்டுமானத் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப துணைப் பணி ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- மலிவு விலை வீட்டுத் துறைக்கான 'உள்கட்டமைப்பு அந்தஸ்தை' அரசாங்கம் அனுமதித்துள்ளது, இது PMAYக்கு ஊக்கமளிக்கிறது.

- மலிவு வாடகை வீட்டு வளாகங்கள் (ARHCs)
  - ARHC கள் நகர்ப்புற புலம்பெயர்ந்தோர்/ஏழைகள் தங்களுடைய பணியிடத்திற்கு அருகாமையில் கண்ணியமான மலிவு வாடகை வீடுகளை அணுகுவதற்கு எளிதாக வாழ்வதை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - இலக்கு பயனாளிகள்: பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவு (EWS)/ குறைந்த வருமானம் கொண்ட குழு (LIG) நகர்ப்புற புலம்பெயர்ந்தோர்/ஏழைகள். இதில் தொழிலாளர்கள், தொழில்துறை தொழிலாளர்கள், தெருவோர வியாபாரிகள், ரிக்ஷா இழுப்பவர்கள், மாணவர்கள் போன்றவர்கள் அடங்குவர்.
  - **இரண்டு மாதிரிகள் மூலம் செயல்படுத்துதல்:**
    - தற்போதுள்ள அரசு நிதியுதவி பெறும் காலி வீடுகளைப் பயன்படுத்தி, பொது தனியார் கூட்டாண்மை அல்லது பொது முகமைகள் மூலம் ARHC களாக மாற்றுதல்
    - பொது/தனியார் நிறுவனங்கள் தங்கள் சொந்த காலி நிலத்தில் ARHC களின் கட்டுமானம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு.
  - மலிவு வீட்டு நிதி (AHF) மற்றும் முன்னுரிமைத் துறை கடன் (PSL), வருமான வரியில் விலக்கு மற்றும் ARHC களில் புதுமையான தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கு GST மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மானியத்தின் கீழ் மத்திய அரசு சலுகை திட்ட நிதியை வழங்கும்.

இந்த திட்டம் அனைத்து சட்டப்பூர்வ நகரங்கள், அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதிகள் மற்றும் வளர்ச்சி/சிறப்பு பகுதி மேம்பாடு/தொழில்துறை மேம்பாட்டு அதிகாரிகளின் பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

**19. தீன் தயாள் அந்த்யோதயா யோஜனா– நகர்ப்புற (தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம்)**

**குறிக்கோள்கள்:**

- திறன் மேம்பாடு மூலம் நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதன் மூலம் நகர்ப்புற ஏழை குடும்பங்களை மேம்படுத்துதல்.

**முக்கிய அம்சங்கள்:**

- தற்போதுள்ள ஸ்வர்ண ஜெயந்தி ஷஹாரி ரோஸ்கர் யோஜனா (SJSRY) க்கு பதிலாக NULM 2013 இல் தொடங்கப்பட்டது.
- 75:25 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே நிதி பகிர்ந்து கொள்ளப்படுகிறது. வடகிழக்கு மற்றும் சிறப்பு வகை மாநிலங்களுக்கு, இந்த விகிதம் 90:10 ஆகும்.
- நோக்கம் கொண்ட பயனாளி: நகர்ப்புற ஏழைகள் (தெரு வியாபாரிகள், குடிசைவாசிகள், வீடற்றவர்கள், கந்தல் பிடுங்குபவர்கள்), வேலையில்லாதவர்கள், மாற்றுத் திறனாளிகள்.

**திட்டம் வழங்குகிறது:**

- திறன் பயிற்சி மூலம் வேலைவாய்ப்பு மற்றும் நகர வாழ்வாதார மையங்கள் மூலம் வேலை வாய்ப்பு.
- சமூக அணிதிரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு மூலம் சுயஉதவி குழுக்களை (SHG) அமைப்பதன் மூலம் உறுப்பினர்களை பயிற்றுவிப்பதற்காகவும், கைகளை வைத்திருப்பதற்காகவும், ஒவ்வொரு குழுவிற்கும் 10,000 ஆரம்ப ஆதரவு வழங்கப்படுகிறது.
- நகர்ப்புற ஏழைகளுக்கு மானியம் - 2 லட்சம் வரை கடனுடன் தனிநபர் குறுந்தொழில்களை அமைப்பதற்கு 5% - 7% வட்டி மானியம் மற்றும் ரூ.10 லட்சம் வரை கடன் வரம்பு கொண்ட குழு நிறுவனங்களுக்கு.

- நகர்ப்புற வீடற்றவர்களுக்கான தங்குமிடங்களை நிர்மாணிப்பதற்கான செலவு இத்திட்டத்தின் கீழ் முழுமையாக நிதியளிக்கப்படுகிறது.
- விற்பனையாளர் சந்தைகளை மேம்படுத்துதல் மற்றும் கந்தல் எடுப்பவர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கான உள்கட்டமைப்பு மற்றும் சிறப்புத் திட்டங்களை அமைப்பதன் மூலம் விற்பனையாளர்களுக்கான திறன்களை மேம்படுத்துதல்.
- PAiSA (மலிவு கடன் மற்றும் வட்டி மானியம் அணுகலுக்கான போர்ட்டல்) பயனாளிகளுக்கு வங்கிக் கடன்களுக்கான வட்டி மானியத்தை செயலாக்குவதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட மின்னணு தளம்.

**20. தேசிய பாரம்பரிய நகரத்தின் வளர்ச்சி மற்றும் பெருக்க யோஜனா (HRIDAY)***

**குறிக்கோள்கள்:**

- பாரம்பரிய நகரங்களின் முழுமையான வளர்ச்சியில் கவனம் செலுத்துதல்
- அழகியல் கவர்ச்சிகரமான, அணுகக்கூடிய, தகவல் மற்றும் பாதுகாப்பான சூழலை ஊக்குவிப்பதன் மூலம் நகரத்தின் தனித்துவமான தன்மையை பிரதிபலிக்கும் வகையில் பாரம்பரிய நகரத்தின் ஆன்மாவைப் பாதுகாத்தல் மற்றும் புத்துயிர் பெறுதல்

**முக்கிய அம்சங்கள்:**

- இது ஒரு மத்திய துறை திட்டமாக தொடங்கப்பட்டது மற்றும் திட்டம் மார்ச் 31, 2019 அன்று முடிவடைந்தது.
- அஜ்மீர், அமராவதி, அமிர்தசரஸ், பாதாமி, துவாரகா, கயா, காஞ்சிபுரம், மதுரா, பூரி, வாரணாசி, வேளாங்கண்ணி மற்றும் வாரங்கல் ஆகிய 12 அடையாளம் காணப்பட்ட நகரங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் பணி முறையில் செயல்படுத்தப்படுகிறது.
- நான்கு தீம் பகுதிகள்: உடல் உள்கட்டமைப்பு, நிறுவன உள்கட்டமைப்பு, பொருளாதார உள்கட்டமைப்பு & சமூக உள்கட்டமைப்பு.
- நகரங்களின் பாரம்பரியம், மதம், கலாச்சாரம் மற்றும் சுற்றுலா சொத்துகளைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பை புத்துயிர் பெறுவது உள்ளிட்ட முக்கிய பாரம்பரியத்துடன் இணைக்கப்பட்ட குடிமை உள்கட்டமைப்பு திட்டங்களின் வளர்ச்சிக்கு இத்திட்டம் துணைபுரிகிறது.

இந்த முயற்சிகளில் நீர் வழங்கல், சுகாதாரம், வடிகால், கழிவு மேலாண்மை போன்றவற்றின் மேம்பாடு அடங்கும்.

**21. கலைஞர் நகர்ப்புரமேம்பாட்டு திட்டம்**

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் உள்ள உட்கட்டமைப்பு இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு "கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தினை (KNMT)" 2021ல் தமிழக அரசு தொடங்கியது. 2021-22 நிதியாண்டில் இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

100% வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள், கழிவுநீர் இணைப்புகள், சுகாதாரம், உட்புறச் சாலைகள், தெருவிளக்குகள், மயானங்ளை நவீனமயமாக்கல் மற்றும் பிற சமூக உட்கட்டமைப்புகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இத்திட்டம் பின்தங்கிய பகுதிகள், குடிசைப்பகுதிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள் ஆகியவற்றில் உள்ள உட்கட்டமைப்பு இடைவெளிகளை நிரப்பும் நோக்கம் கொண்டது. மாணவர்கள் மற்றும் வேலை தேடுபவர்களுக்கு உதவும் வகையில், கணினிகள் மற்றும் அறிவுசார் மையங்களுடன் கூடிய நவீன நூலகங்களையும் இத்திட்டம் பரிந்துரைக்கிறது.

கலைஞர் நகர்புர மேம்பட்டு திட்டமானது, பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் மேம்பாடு, நிழற்குடைகள் மற்றும் சந்தைகளின் கட்டுமானம், நீர்நிலைகளை புனரமைத்தல், திடக்கழிவுகளை அகற்றுவதற்கான மின்-வாகனங்கள் வாங்குதல் மற்றும் பொது கழிப்பறைகள் கட்டுதல் போன்ற எண்ணற்ற நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டங்களை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.975.84 கோடிக்கு மதிப்பிலான 1,293 திட்டங்களுக்கு (கலைஞர் நகர்புர மேம்பட்டு திட்டத்தின் பங்கு ரூ.917.91 கோடி) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அனைத்து திட்டங்களும் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. மேலும், இத்திட்டத்திற்கு 2022-23ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**22. சிங்காரச் சென்னை 2.0**

சென்னை நகரத்தை சிறப்பாக வாழ்வதற்குறிய மற்றும் துடிப்பான நகரமாக மாற்றும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு 2021 ஆம் ஆண்டில் “சிங்கார சென்னை 2.0” என்ற புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தி, இத்திட்டத்திற்காக 2021-22 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.500 கோடியை ஒதுக்கியது. இத் திட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

சிங்கார சென்னை 2.0 இன்கீழ், 2021-22ஆம் ஆண்டில் ரூ.395,32 கோடி மதிப்பிலான சாலை மேம்பாட்டுப் பணிகள், விளையாட்டு மைதானம், தெரு பெயர் பலகைகள், நவீன தகன மேடைகள், மழை நீர் வடிகால், பள்ளி கட்டிடங்களின் கட்டுமானம் / புதுப்பித்தல், தெருக்களை அலங்கரித்தல் போன்ற பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

**23. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பிப்ரவரி 2006-ல் இந்திய அரசால் தொடங்கப்பட்டது. இது ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரக குடும்பங்களுக்கு 100 நாட்கள் வேலைவாய்ப்பை அளிக்கும் திட்டமாகும்.

**திட்டத்தின் சிறப்பம்சங்கள்:**

**பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:**

i. வேலை அட்டை பெறுவதற்கான (Job card) உரிமை
ii. வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
iii. வேலையில்லாப்படி பெறுவதற்கான உரிமை
iv. தேவையான பணிகளைத் தேர்ந்தெடுத்து தொகுக்கும் உரிமை
v. 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
vi. பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை
vii. அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை
viii. பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை
ix. காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீடு பெறுவதற்கான உரிமை
x. குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் சமூகத் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல்.

1) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் "பணி வாரம்" என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வரை வேலை நடைபெறுவதாகும். ஊராட்சிகளிலுள்ள தொகுப்புகளில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
2) திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை-I-ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது, ஓர் வயதுவந்த நபர் ஒரு மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய எட்டு மணி நேர வேலைக்கு பெறக்கூடியதற்கு (அதாவது ஏழு மணி நேர செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.
3) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு முறையாக பின்பற்றப்படுகிறது. இவ்வரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான மற்றும் இதர சிறப்பு பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.
4) ஒப்பந்ததாரர்கள் மற்றும் உடல் உழைப்பை தவிர்க்கும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.
5) அனைத்து கட்டுமானப் பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப்புள்ளி பட்டியலையும், பொருள் செலவினக்கூறிற்கு பொதுப் பணித்துறை விலைப்புள்ளி பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.
6) குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் வேலைக்கு விண்ணப்பிக்கவும், அவ்வேலையினைப் பெறுவதற்கும் வேலை அட்டையினைப் பெற உரிமை பெற்றுள்ளனர். வேலை அட்டை ஒவ்வொரு ஐந்து ஆண்டிற்கும் ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. 01.04.2022-லிருந்து ஐந்து வருடங்களுக்குச் செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் அனைத்து செயற்படும் (active) தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
7) 2017-18-ம் ஆண்டிலிருந்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப் பதிவேடு (e-MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.
8) 2021-22-ம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் நாளொன்றுக்கு ரூ.273 ஆக நிர்ணயிக்கப்பட்டது. தற்போது 2022-23-ம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் 01.04.2022 முதல் ஆண்க ள் மற்றும் பெண்கள் என்ற வேறுபாடின்றி தமிழ்நாட்டிற்கு நாளொன்றுக்கு ரூ.281 என திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.
9) பணித்தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வினத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும், தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.
10) பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.
11) கிராம சபையில் "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" அதாவது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களிலிருந்து பயிற்சி பெற்ற கிராம வள நபர்கள் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் சமூகத் தணிக்கை செய்யப்படுகின்றது.
12) கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்தந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

13) வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை (Citizen Information Board) வைக்கப்படுகிறது.

14) 67.69 இலட்சம் ஊரக குடும்பங்களில் உள்ள 79.70 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

**நிதி விடுவிப்பு:**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூன்று முக்கிய நிதிக் கூறுகள் பின் வருமாறு.

1. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியக்கூறு (100% ஒன்றிய அரசு)
2. கட்டுமான பொருட்கள் மற்றும் பணிகளுக்கான பொருட்கூறு (75% ஒன்றிய அரசு மற்றும் 25% மாநில அரசு)
3. அலுவலர்களுக்கான ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கான நிர்வாக செலவின கூறு (100% ஒன்றிய அரசு)

திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி மொத்த செலவினத்தில் பொருட்கூறுக்கான செலவினம் 40%-க்கு மேல் மேற்கொள்ளப்படக்கூடாது.

**குறித்த காலத்திற்குள் வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குதல்:**

2021-22-ம் நிதியாண்டில் 100 சதவிகித ஊதியத் தொகை பதினைந்து நாட்களுக்குள் வழங்கப்பட்டு வருகிறது. குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதலை (நிலை -I) T+8 ஆகவும் மற்றும் (நிலை-II) T9-T15 ஆகவும் ஒன்றிய அரசு வரையறுத்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத் தொழிலாளர்களுக்கு, 07.11.2016 முதல் 100% ஊதியத் தொகை தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் அவர்களது வங்கிக் கணக்குகளில் ஒன்றிய அரசால் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

இதைப் போலவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 01.04.2017 முதல் நிர்வாகச் செலவினம் மற்றும் பொருட்கூறு செலவினமும் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

**அனுமதிக்கப்பட்ட பணிகள்:**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட அட்டவணை-1-ன்படி 4 பிரிவுகளாக அனுமதிக்கப்பட்ட பணிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அட்டவணைப்படி குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பணிகளை அடிப்படையாகக் கொண்டு, மேலாண்மை தகவல் மைய அமைப்பு மூலம் இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 262 பணிகளில் 182 பணிகள் இயற்கை வள மேலாண்மைப் பணிகளாகும். 164 பணிகள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பணிகளாகும்.

**இயற்கை வள மேலாண்மை பணிகள் / விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த செயல்பாடுகள்:**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பசுமை மற்றும் வறட்சி தடுப்பு நடவடிக்கைகளாக பெருமளவு மரக்கன்று நடுதல் மற்றும் சாலையோர மரக்கன்று நடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தடுப்பணைகள், மீள் நிரப்பு குழிகள், கசிவு நீர்க் குட்டைகள், அகழிகள், பண்ணைக் குட்டைகள், உறிஞ்சுக் குழிகள் ஆகிய செயற்கை மீள் நிரப்பு கட்டமைப்புகள் அமைப்பதன் மூலம் நிலத்தடி நீர் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரத்துக் கால்வாய்கள் மற்றும் பாரம்பரிய நீர் நிலைகள் போன்றவை புனரமைக்கப்பட்டு அவை முழு கொள்ளளவை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி மொத்த செலவினத்தில் 65%-க்கு குறையாமல் இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கும் 60%-க்கு குறையாமல் வேளாண்மை மற்றும் சார் பணிகளுக்கு செலவிட வேண்டும். நமது மாநிலம் தனிநபர் மற்றும் சமுதாயம் சார்ந்த இயற்கை வள மேலாண்மை பணிகளை குறிப்பாக நீர் பற்றாக்குறை வட்டாரங்களில் கவனம் செலுத்துகிறது. 2021-22 ஆம் ஆண்டில் 3,38,835 இயற்கை வள மேலாண்மை பணிகள் ரூபாய்.7403.92 கோடியில் எடுக்கப்பட்டு 2,07,119 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது இது மொத்த செலவினத்தில் 78.20% ஆகும்.

**நீர் வள மேலாண்மைக்கான 100 நாள் சிறப்பு முயற்சிகள் (2021)**

அதிக அளவில் நீர் சேமிப்பு பணிகளை மேற்கொள்ளும் விதமாக செப்டம்பர்-நவம்பர் 2021-ல் 100 நாள் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக 4,057 தடுப்பணைகள், 16,784 பண்ணைக்குட்டைகள், 1,562 கசிவு நீர்குட்டைகள்,

5,681 நீர் அகழிகள், 6,283 அமிழ்ந்த நீர்குட்டைகள் போன்ற 27,973 பணிகள் சிறப்பு முயற்சியாக மாநிலம் முழுவதும் செய்து முடிக்கப்பட்டது. இம்முயற்சி ஒன்றிய அரசின் 'ஜல் சக்தி அபியான்-மழை நீர் சேகரிப்பு' திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டது.

**நீர் வள மேலாண்மைக்கான 75 நாள் சிறப்பு முயற்சிகள் (2022)**

2022-23 ஆம் ஆண்டில், மார்ச் 22, 2022 (உலக நீர் தினம்) முதல் ஜூன் 5, 2022 (உலக சுற்றுச்சூழல் தினம்) வரையிலான காலத்தில் 75 நாள் சிறப்பு முயற்சியாக 2 குறிக்கோள்களுடன் நீர் வள பணிகள் **எடுக்கப்படும்:**

1. தமிழ்நாட்டில் பருவ மழை காலம் தொடங்கும் முன் 2,000 தடுப்பணைகள், 2,500 பண்ணைக்குட்டைகள், 4,500 நீர் அகழிகள், 4,000 மேற்கூரை மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் போன்ற 23,000 பணிகள் முடிக்கப்பட்டு ஊரக பகுதிகளில் ஒவ்வொரு துளி மழை நீரையும் சேகரிப்பது உறுதி செய்யப்படும்.
2. அடுத்த 75 நாட்களில், ஒவ்வொரு வட்டார நாற்றங்கால் பண்ணைகளிலும் 10,000 நாற்றங்கால்கள் வளர்க்கப்படும். இவ்வாறு வளர்க்கப்படும் நாற்றங்கால்களானது 75 நாட்களில் குறைந்தது 3 அடி அல்லது அதற்கு மேற்கொண்டு வளரும் என்பதால், அதன் பிழைக்கும் தன்மை கூடுதலாக இருக்கும். இவ்வாறு மரம் வளர்க்கும் பணியானது தென்மேற்கு பருவ மழை மாவட்டங்களில் ஜூன்-ஜூலை மாதங்களிலும், வடகிழக்கு பருவ மழை மாவட்டங்களில் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களிலும் தொடங்கப்படும்.

இவ்வாறு அறிவியல் முறையில் மரங்கள் வளர்க்கப்படும் போது 38,00,000 மரக்கன்றுகள் அக்டோபர் 2022 ஆம் மாதத்திற்குள் நடவு செய்யப்படும்.

**கண்காணிப்பு முறை தேசிய கைபேசி கண்காணிப்பு முறை (National Mobile Monitoring System)**

தேசிய கைபேசி கண்காணிப்பு செயலி மே 21, 2021 அன்று ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து மாநிலங்களும் தினசரி கட்டாயம் பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளது. மேலும், இச்செயலி மூலம் தினமும் இரு முறை தொழிலாளர்களது வருகையினை பணித்தளத்தில் இருந்து பதிவு செய்வதன் மூலம் ஓர் வெளிப்படை தன்மை ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்ட தொழிலாளர்களின் தினசரி வருகைப்பதிவினை இச்செயலி மூலம் மாநில அளவில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் எடுக்கப்படுவதைக் கண்காணித்து உறுதிசெய்யும் பணியில் களநிலை அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அனைத்து

பணித்தள பொறுப்பாளர்களுக்கும் உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளதோடு வட்டார / மாவட்ட அளவிலாள அலுவலர்கள் தினசரி முன்னேற்றத்தினை கண்காணிக்க உணர்த்தப்பட்டுள்ளனர்.

**பகுதி அலுவலர் ஆய்வு செயலி:**

பகுதி அலுவலர்கள் ஆய்வு செயலி 21.05.2021 அன்று ஊரக வளர்ச்சித் திட்டங்களை திறம்பட கண்காணிப்பதற்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது.

இச்செயலி மாநில அலுவலர்கள் தங்களது கள ஆய்வு முடிவுகளை இணையதளம் மூலம் பதிவு செய்ய வழிவகுக்கும். இது ஊரக வளர்ச்சித் துறையால் தொடங்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கும் நேரம் முத்திரையிடப்பட்ட மற்றும் புவிக்குறியீடு செய்யப்பட்ட புகைப்படத்தை பதிவு செய்ய அனுமதிக்கும். மேலும் கள ஆய்வு விவரங்களை தங்குதடையின்றி தெரிவிப்பதற்கும் இவ்விவரங்களை உயர் அலுவலர்கள் rural.nic.in இணையதளத்தின் மூலம் காண்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வெளிப்படை தன்மை:**

**சமூக தணிக்கை:**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)-ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், மக்களால் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதி செலவினம் மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கை , தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு ஆகியவற்றின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகப்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளை தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

**சமூக தணிக்கைக்கான நிறுவன அமைப்புகள்:**

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கமானது (SASTA) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு இந்திய அரசின் வழிகாட்டுதல்படி இயங்குகிறது. ஊரக வளர்ச்சி துறை சாராத இயக்குனர் ஒருவர் தலைமையில் இது செயல்படுகிறது. இணை இயக்குநர் மற்றும் மாநில கண்காணிப்பாளர்கள் இந்த சமூக தணிக்கை கிராம அளவில் நடைபெறுவதை ஊக்கப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் உள்ளனர்.

மாவட்ட வள பயிற்றுநர்கள் மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள் ஒவ்வொரு கிராம வள பயிற்றுநர்கள் பயிற்சி அளித்து சமூக தணிக்கை நடைபெற உதவுவார்கள். ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராம வள பயிற்றுநர்கள் கிராம சபையால் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு எதேச்சையாக கிராமங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சமூக தணிக்கை மேற்கொள்வார்கள்.

**சமூக தணிக்கை முறை:**

கிராம வள பயிற்றுநர் குழுவானது வட்டார வள பயிற்றுநர்களால் பயிற்றுவிக்கப்பட்டு வட்டார செயல் அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து பணி வருகை, பண பட்டுவாடா அறிக்கை, அளவீடு புத்தகங்கள் மற்றும் வேலை உத்தரவு ஆகியன பெற்று, பயனாளிகளின் வீடுதோறும் ஆய்வு, பணித்தள ஆய்வு, சொத்துக்கள் உருவாக்கப்பட்டதை உறுதி செய்தல் மற்றும் பணப்பட்டுவாடா செய்யப்பட்டதன் சரித்தன்மை ஆகியற்றை களப்பணியின்போது செய்யும். கிராம வள பயிற்றுநர் குழுவானது அறிக்கை தயார் செய்து சமூக தணிக்கைக்காக கூட்டப்படும் சிறப்பு கிராம சபைக்கு அளிக்கும்.

கிராம சபையால் அங்கீகரிக்கப்பட்ட சமூக தணிக்கை அறிக்கை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான உயர் மட்ட குழுவில் வைக்கப்பட்டு மேல் நடவடிக்கைக்காக உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

**சமூக தணிக்கையின் தாக்கம்:**

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வதால், சமூக தணிக்கையானது திட்டப் பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில் நடைபெறும் விவாதமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால், இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பலன்களை அறிந்துகொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாகவும் சிறப்பு கிராம சபை அமைகிறது. மேலும், வட்டார அளவிலும் கிராம ஊராட்சி அளவிலும் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்படுவதோடு அதன் முக்கியத்துவமும் அறியப்பட்டுள்ளது.

**2021-22-ம் ஆண்டிற்கான சமூக தணிக்கை நடவடிக்கைகள்:**

2020-21-ம் நிதியாண்டில், கோவிட்-19 பெருந்தொற்றால் வழக்கமான சமூக தணிக்கை நடைபெறவில்லை. தற்போது 2021-22-ல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் 2019-20 நிதியாண்டிற்கான செலவினம் தொடர்பாக சமூக தணிக்கை 12,524 கிராம ஊராட்சிகளிலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு வழிகாட்டுதல்களின் அடிப்படையில், தேசிய சமூக பாதுகாப்பு உதவித் திட்டம் (NSAP), பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) (PMAY-G) மற்றும் 15-வது நிதிக்குழு ஆகிய திட்டங்களுக்கு சமூக தணிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**குறைகேள் அலுவலர்:**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் தொடர்பான குறைகள் மற்றும் புகார்களை நிவர்த்தி செய்ய மாவட்ட அளவில் குறை தீர் அலுவலர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. விரிவான தேர்வு முறையின் மூலம் அரசாணை (நிலை) எண்.34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி-1) துறை, நாள் 21.03.2022-ன்படி, 31 மாவட்டங்களுக்கு குறைகேள் அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீடு மற்றும் வேலையில்லா படி வழங்குதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் தொழிலாளர்கள் வேலை கோரிய 15 நாட்களுக்குள் வழங்கப்படாத நிகழ்வுகளில் வேலையில்லா படி வழங்குவதற்கும் வேலை செய்ததற்கான ஊதியத்தினை தாமதமாக வழங்கும் நிகழ்வுகளில் அதற்கான இழப்பீட்டுத் தொகையும் வழங்குவதற்கும் வகை செய்கிறது. 2021-22-ம் ஆண்டில் இவ்விரு நிகழ்வுகளுக்கு காரணமான அலுவலர்களுக்கு பொறுப்பினை நிர்ணயம் செய்து விதிமுறைகளை வகுத்துள்ளது.

2021-22-ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தாமதமாக ஊதியம் வழங்கியதற்கான இழப்பீட்டு விதிமுறைகள் தமிழ்நாடு அரசின் அறிவிக்கை எண்.161, நாள் 11.03.2022-ல் வெளியிடப்பட்டுள்ளது. இதேபோல் வேலையில்லா படி வழங்குவதற்கான விதிமுறைகள் தமிழ்நாடு அரசின் அறிவிக்கை எண்.185, நாள் 25.03.2022-ல் வெளியிடப்பட்டுள்ளது.

**2022-23-ம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு மதிப்பீடு:**

மனித சக்தி நாட்களுக்கான தொழிலாளர் மதிப்பீடு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடிமட்ட தேவையினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. 2022-23-ம் நிதியாண்டிற்கான இம்மதிப்பீடு தயாரிக்கும் பணியில் தொகுப்பு வாரியான தேவைகளை கணக்கில் கொண்டு இறுதி செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், 2022-23-ம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு திட்டத்திற்கு 22 கோடி மனித சக்தி நாட்கள் ஒப்பளித்துள்ளது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு

மாநில அரசின் ஓர் முதன்மை திட்டமாக கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை துவக்கியுள்ளது இது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II செயல்படுத்தப்படவுள்ள அதே ஊராட்சிகளில் செயல்படுத்துவதன் மூலம் புவியியல் சார் ஒருங்கிணைப்பு உறுதி செய்யப்படும். 2021-22 இல் 2,657 கிராம ஊராட்சிகளிலும் 2022-23 இல் 2,544 கிராம ஊராட்சிகளிலும் இவ்விரு திட்டங்கள் இணைந்து செயல்படுத்தப்படும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II-ன் கூறுகளான நீர் நிலைகளை புனரமைத்தல், வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல், பொது உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட நோக்கம் மற்றும் அதன் பலன்களுடன் நேரடியாக ஒருங்கிணைக்கப்படுகிறது. இதே போல் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க பகுதி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட கூறுகளுடன் குறிப்பாக நீர் வள பாதுகாப்பு பணிகளான தடுப்பணைகள் (சிமெண்ட் கான்கிரீட் / கம்பி வலை), பண்ணைக் குட்டைகள், அகழிகள், அமிழ்ந்த குழிகள், மீள் நிரப்புத் தண்டு போன்ற பிற பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்கிறது. கூடுதலாக மண் பாதுகாப்பு பணிகளான மண் வரப்புகள், கல் வரப்புகள் மற்றும் இதர நில மேம்பாட்டு பணிகள் வேளாண் விவசாயிகளுக்காக மேற்கொள்ளப்படுகிறது. இதேபோல், இத்துறை மூலம் அர்ப்பணிக்கப்பட்ட தோட்டக்கலை நாற்றங்கால் (1,500), முருங்கை நாற்றங்கால் (3,500) போன்றவை சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் நடவு செய்ய ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு கிராம ஊராட்சிகளின் தேர்வு மற்றும் திட்ட செயலாக்க கருப்பொருள் இரண்டும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II திட்டங்களின் கீழ் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த பணிக்கூறுகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் சிறப்பு உந்துதல் தரப்படும். ஊரக வளர்ச்சித் துறையின் இத்தகைய முழுமையான அணுகுமுறை ஊரகப் பகுதியின் பலதரப்பட்ட வாழ்க்கைத் தரத்தை குறிப்பிடத்தக்க அளவு உயர்த்துவதோடு தன்னிறைவு அடைவதை உறுதி செய்யும்.

## 24. “அனைவருக்கும் வீடு” (பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் – ஊரகம்)

இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீடு வழங்கும் திட்டத்தில் இருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் அத்திட்டம் சீரமைக்கப்பட்டு பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) என 2016-17-இல் ஒன்றிய அரசால் துவங்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் வாழும் வீடில்லாத ஏழைகளுக்கும், சிதிலமடைந்த வீடுகளில் வசிப்போருக்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலையான வீடுகள் வழங்கி “2022 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு” என்ற நோக்கில் ஒன்றிய அரசு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தினை (ஊரகம்) செயல்படுத்துகிறது. தற்போது ஒன்றிய அரசு இத்திட்டத்தினை 2024 வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

**வீட்டுவசதி திட்டத்திற்கு மாநில அரசின் பங்களிப்பு:**

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசிற்கு இடையேயான நிதிப்பகிர்வு 60:40 ஆகும். ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத்தொகை ரூ.1,20,000/-. ஆனால், 2021-22 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் செந்தர வீதப்பட்டியலின்படி பிரதம மந்திரி குடியிருப்புத்

திட்டத்தின் (ஊரகம்) கீழ் 269 சதுர அடி வீடு கட்டுவதற்கான தொகை ரூ.4.62 இலட்சம் ஆகும். இத்தொகை ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத் தொகையை விட மிகமிக அதிகமாகும்.

தமிழ்நாட்டில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் ஒரு வீடு கட்டுவதற்கான அலகுத் தொகை ரூ.2,76,570/- ஆகும். இதில் ஒன்றிய அரசால் வழங்கப்படுவது ரூ.1,03,770/- ஆகும். இத்தொகையில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் ஒன்றிய அரசின் பங்குத்தொகை ரூ.72,000/-, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் 90 நாட்களுக்கான ஊதியத் தொகை ரூ.24,570/மற்றும் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்குத்தொகை ரூ.7,200/- ஆகியவை அடங்கும்.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் தமிழக அரசின் பங்களிப்பு ரூ.1,72,800/- ஆகும். இதில் மாநில அரசின் பங்குத்தொகை ரூ.48,000/-, வீடுகளுக்கு மேற்கூரை அமைத்திட கூடுதல் தொகை ரூ.1,20,000/- மற்றும் தனிநபர் இல்லக்கழிப்பறை கட்ட மாநில அரசின் பங்குத் தொகை ரூ.4,800/- ஆகியவை அடங்கும்.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ், ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப்பகிர்வு 60:40 என நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், தமிழ்நாட்டில் நிதிப்பகிர்வு 38:62 என்ற விகிதத்தில் நடைமுறையில் உள்ளது.

**முக்கிய அம்சங்கள்:**

1. சுகாதாரமான சமைக்கும் இடத்துடன் கூடிய ஒரு வீட்டின் குறைந்தபட்சம் பரப்பளவு 25 சதுர மீட்டர் (269 சதுர அடி) ஆகும்.
2. பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 60 விழுக்காடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 40 விழுக்காடு இதர இனத்தவருக்கு ஒதுக்கப்படுகிறது. (தகுதி உள்ள சிறுபான்மை குடும்பங்கள் இருக்குமேயானால் அவர்களுக்கு வழங்கப்படும் 15 விழுக்காடு இதில் அடங்கும்) அனைத்து பிரிவுகளிலும் 5 விழுக்காடு ஒதுக்கீடு மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.
3. சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு புள்ளி விவரங்களிலிருந்து பிரதம மந்திரி குடியிருப்பு திட்ட (ஊரகம்) வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ள சேர்த்தல், நீக்கல் காரணிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான காத்திருப்பு பட்டியலிலிருந்து பயனாளிகள் கிராம சபை மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர்.
4. சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்புநிரந்தர காத்திருப்போர் பட்டியலில் விடுபட்டவர்களை கண்டறிய ஒரு விரிவான கணக்கெடுப்பு 2018 இல் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்கெடுப்பு "ஆவாஸ் பிளஸ்" என பெயரிடப்பட்டது.
5. 2021-22 ஆம் ஆண்டிற்கு ஆவாஸ்பிளஸ் புள்ளிவிவர அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்டு வருகிறது. 6. மாநில அளவில் பராமரிக்கப்படும் வங்கி கணக்கிலிருந்து வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் தயாரிக்கப்படும் பட்டியலின்படி பொது நிதி மேலாண்மை முறையில் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக தொகை செலுத்தப்படுகிறது.

**பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள்:**

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் முதல் கட்டமாக 2016-17 முதல் 2018-19 ஆண்டு வரை 3,27,552 வீடுகளும், இரண்டாம் கட்டமாக 2019-20 முதல் 2021-22 ஆம் ஆண்டு வரை 4,89,887 வீடுகளும் ஒன்றிய அரசால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 3,34,699 வீடுகள் கட்டி

முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இவையனைத்தும் மார்ச் 2023-க்கு முன்னர் முடிக்கப்படும்.

**ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி விவரம் (2021-22):**

2018-19 ஆம் ஆண்டிற்கு 07.01.2022-இல் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் ரூ.63 கோடி ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் இரண்டாம் தவணைத் தொகையின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டுள்ளது (ஒன்றிய அரசின் பங்கு ரூ.37.80 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.25.20 கோடி). மேற்படி தொகை முழுமையாக செலவழிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 2021-22 ஆம் ஆண்டில் 2018-19, 2019-20, 2021-22 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீடுகளுக்காக பிரதம மந்திரி குடியிருப்பு திட்டதின் (ஊரகம்) கீழ் ரூ.1485.22 கோடி (ஒன்றிய அரசின் பங்கு ரூ.891.13 கோடி, மாநில அரசின் பங்கு ரூ.594.09 கோடி) முதல் தவணையின் ஒரு பகுதியாக விடுவிக்கப்பட்டுள்ளது. வீடுகள் கட்டும் பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 2021-22-ம் ஆண்டில் 2018-19, 2019-20, 2021-22 ஆம் ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை மொத்தமாக ரூ.1548.22/- கோடி பெறப்பட்டுள்ளது.

**மாநில அரசு 2021-22 ஆம் ஆண்டில் மேற்கொண்டுள்ள முனைப்பான நடவடிக்கைகள்:**

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் வீடுகள் கட்டும் பணிகளை துரிதப்படுத்த தமிழக அரசு கீழ்காணும் முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

1. பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் வீடுகள் கட்டும் பணியின் முன்னேற்றத்தை துரிதப்படுத்திட ஒரு தொழில்நுட்ப உதவியாளருக்கு நிலுவையிலுள்ள 200 வீடுகள் என்ற வீதத்தில் கூடுதலாக தொழில்நுட்ப பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் வெளிச் சந்தையில் இருந்து ஆறு மாதங்களுக்கு தற்காலிகமாக பணி அமர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2. வருவாய் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்டு மாநில பணிக்குழு அமைத்து நிலமற்ற குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிலமற்ற பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் வகையில் ஆட்சேபனை அற்ற அரசு புறம்போக்கு நிலங்களை கண்டறிய வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
3. இத்திட்டத்தின் கீழ் வீடு கட்டும் பணிகளை துரிதப்படுத்திட சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு, நிரந்தர காத்திருப்பு பட்டியலில் உள்ள நிலமற்ற குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட மாநில அளவிலும், வட்டார அளவிலும் கிராம ஊராட்சி அளவிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
4. 20.03.2022 அன்று உள்ளபடி நிலமற்ற 1,280 பயனாளிகளுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மாதாந்திர அடிப்படையில் தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்களை நடத்தி மீதமுள்ளவர்களும் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 25. ஜல் ஜீவன் இயக்கம்

**முன்னுரை:**

ஊரக பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீரினை பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் நீண்ட கால அடிப்படையில் தொடர்ச்சியாக மார்ச் 2024-க்குள் வழங்கிடும் உன்னத எண்ணத்துடன் ஜல் ஜீவன் இயக்கம் 2019-20-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அத்தகைய குடிநீர் குழாய் இணைப்புகள் செயல்பாட்டு வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் என அழைக்கப்படும். திட்டமிடுதலில் சமூகத்தை ஈடுபடுத்தி குடிநீர் வழங்குதலை கண்காணித்தல் மற்றும் நிலைத்த குடிநீர் ஆதாரங்களை நீர்

செறிவூட்டுதல் மூலம் வலுப்படுத்துதல், மறு பயன்பாட்டிற்கு ஊக்குவித்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**திறன் மேம்பாடு மற்றும் தகவல் கல்வி தொடர்பு செயல்பாடுகள்:**

நீரினை சிக்கனமாக பயன்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு, நீர் ஆதார நிலைகளை பாதுகாத்தல், சமுதாய பங்களிப்பு, சொத்துக்களை பராமரித்தல், கழிவு நீர் மேலாண்மை மற்றும் பயனீட்டாளர்களால் செலுத்தப்படும் கட்டணம் தொடர்பாக விழிப்புணர்வுகளை உருவாக்க தகவல், கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

**திட்ட மூலதனத்தில் சமூக பங்களிப்பு:**

ஜல் ஜீவன் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கிராம ஊராட்சியில் உள்ள நீர் விநியோக கட்டமைப்பு மற்றும் மூல ஆதாரத்தை மேம்படுத்த மலைவாழ் / வனப்பகுதிகள், 50% மற்றும் அதற்கு மேல் ஆதிதிராவிடர் / பழங்குடியின மக்களை கொண்ட கிராமங்களில் திட்ட மூலதன தொகையில் 5% மற்றும் இதர கிராம ஊராட்சிகளில் 10% பணமாகவோ / பொருளாகவோ / உடல் உழைப்பாகவோ பொது மக்களிடமிருந்து சமூக பங்களிப்பாக பெறப்பட வேண்டும்.

**ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள்:**

**ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், கீழ்கண்ட கூறுகள் செயல்படுத்தப்படுகின்றன:**

i) கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிட தேவையான உள்ளூர் அளவிலான கட்டமைப்புகளை உருவாக்குதல்.
ii) நிலையான குடிநீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதன் வாயிலாக குடிநீர் விநியோக அமைப்புகளை நீண்ட காலத்திற்கு செயல்பட வைத்தல்.
iii) ஊரகப் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வழங்குவதற்காக தேவைப்படும் இடங்களில் கூட்டு குடிநீர் திட்டங்கள் போன்ற பெருவிநியோக அமைப்புகள் மூலமோ சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமோ தகுந்த விநியோக அமைப்புகளை உருவாக்குதல்.
iv) தற்போது செயல்பாட்டில் உள்ள தனி கிராம மற்றும் கூட்டு குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல் வாயிலாக குறைந்தபட்சம் 55 லிட்டர் நீரினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு குழாய் இணைப்பு மூலம் வழங்கிடுதல்.

**நிதி பகிர்மான முறை:**

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கான நிதியினை ஒன்றிய அரசும் (50%), மாநில அரசும் (50%) வழங்கும். இருப்பினும், ஆதரவு மற்றும் நீர் தர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசிற்கு இடையேயான நிதி பகிர்மான முறை 60:40 ஆகும்.

**செயல்படுத்தும் முறை:**

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தினை செயல்படுத்தும் துறையாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளது. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், ஜல் ஜீவன் இயக்கத்தின் மாநில திட்ட இயக்குநராக உள்ளார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, குடிநீர் ஆதாரம் பாதுகாப்பு மண்டலத்தில் உள்ள வட்டாரங்களின் கிராம எல்லைக்குள் இருந்தால் குக்கிராம திட்டம் மற்றும் ஒற்றை கிராம திட்டத்தை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை திட்டமிட்டு செயல்படுத்தும். இப்பணிகள் நீர் ஆதாரத்தை உருவாக்குதல், நீர் உந்தும் குழாய்கள், மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் இதர நீர் சேமிப்பு அமைப்புகள், தெரு விநியோக அமைப்புகள் மற்றும் வீட்டு குழாய் இணைப்புகள் ஆகியவற்றை

உள்ளடக்கியதாகும். இதுபோன்றே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுக்கப்பட்ட பல் கிராம திட்டங்களில் கிராம உட்கட்டமைப்பு பணிகளை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளுடன் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மேற்கொள்ளும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பல் கிராமங்களுக்கான திட்டத்தினை ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில், குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்கு வெளியே இருந்தால், மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி வரை மொத்தமாக நீரினை வழங்கிட செயல்படுத்துகிறது.

**இத்திட்டத்தின் இதர முக்கிய அம்சங்கள்:**

- மூன்றாம் தரப்பு ஆய்வு – பணிகளின் தரத்தினை ஆய்வு செய்ய மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளது.
- ஊரக பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் நீரின் தரம், அளவு மற்றும் நீண்ட கால அடிப்படையில் குடிநீர் வழங்குதல் ஆகியவற்றை கொண்டு செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.
- ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் மூலம் வழிமுறைகள், பணிகளை நிறைவேற்றுதல், பராமரித்தல் மற்றும் திட்டத்தின் செயல்பாடு ஆகியவை பதிவு செய்யப்படும்.
- கள ஆய்வு உபகரணங்களின் மூலம் நீரின் உறுதி செய்தல். நீரின் தரம் கார-அமில தன்மை (pH), கடினத்தன்மை, ப்ளூரைடு, க்ளோரைடு, சல்பேட்டு மற்றும் பாக்டீரியாக்களின் அளவு ஆகிவற்றின் அனுமதிக்கப்பட்ட அளவின் அடிப்படையில் நீரின் தரத்தினை உறுதி செய்தல்.

**இயக்குதல் மற்றும் பராமரித்தல்:**

குடிநீர் வழங்கல் பணிகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சியின் பொறுப்பாகும். பயனீட்டாளர்களுக்கான குறைந்தபட்ச குடிநீர் கட்டணம் ரூ.30/- ஆக குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை எண்.260, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 09.12.1998 பின்பற்றப்படுகிறது. அரசால் நிர்ணயிக்கப்பட்ட மொத்த நீர் அளவு பரிமாற்ற கட்டணம், சம்பந்தப்பட்ட ஊராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது.

15-வது ஒன்றிய நிதிக்குழு மானியம் மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல்

15-வது ஒன்றிய நிதிக்குழு மானியத்தின் வரையறுக்கப்பட்ட நிதியில் 50% மற்றும் 5-வது மாநில நிதிக்குழு மானியத்தின் கீழ் மாவட்ட ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் மூலம் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் கிராம உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**ஜல் ஜீவன் இயக்கத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள்:**

ii. 2020-21-ம் ஆண்டு, ரூ.2006.06 கோடி மதிப்பீட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 35 மாவட்டங்களில் 15860 குக்கிராமங்களுக்கு 19,74,985 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

iii. 25.03.2022 வரை ரூ.1301.27 கோடி செலவினத்தில் 16,00,983 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

**ஜல் ஜீவன் இயக்கத்தில் 2022-23-ம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கபட்டுள்ள பணிகள்:**

i. ஜல் ஜீவன் இயக்க நிதியின் மூலம் 30 மாவட்டங்களில் 6328 குக்கிராமங்களுக்கு 6 இலட்சம் குடிநீர் குழாய் இணைப்புகள் ரூ.500 கோடி மதிப்பீட்டில் வழங்க உத்தேசிக்கபட்டுள்ளது.

ii. 15-வது ஒன்றிய நிதி குழு மானியத்தின் வரையறுக்கப்பட்ட நிதியில் 37 மாவட்டங்களில் 15,400 குக்கிராமங்களுக்கு 6.50 லட்சம் குடிநீர் குழாய் இணைப்புகள் ரூ.761.46 கோடி மதிப்பீட்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1.26 கோடி ஊரக வீடுகளில் 52.51 லட்சம் ஊரக வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 74.37 லட்சம் வீடுகளுக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும். 2022-23 ஆம் ஆண்டு ஜல் ஜீவன் இயக்கத்தினை செயல்படுத்த ரூ.3,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**26. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS)**

1993-ம் ஆண்டு ஒன்றிய அரசால் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது தொடங்கப்பட்டு, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளியினை நிரப்பிட இத்திட்டம் வழிவகை செய்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப்பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசு (புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம்) இத்திட்டத்தினை நவம்பர் 2021-ல் மீள துவங்கி 2021-22-ம் ஆண்டிற்கு மீதமுள்ள மாதங்களுக்கு ஒரு தொகுதிக்கு ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**27. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY)**

11.10.2014-ல் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டத்தின் நோக்கமானது, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களை திறம்பட ஒருங்கிணைத்து கூடுதல் நிதி ஒதுக்கீடு ஏதுமின்றி கிராம ஊராட்சியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிவகை செய்வதே ஆகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில், 3,000 முதல் 5,000 வரை மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும் மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை 1,000 முதல் 3,000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது அல்லது தனது மனைவியின் / கணவரின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புர தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள்

இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். 2024-க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

**28. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்**

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–I**

இணைப்புச் சாலை வசதி இல்லாத 500-க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்புடைய இணைப்புச் சாலை வசதி வழங்குவதே பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-I-ன் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில், இத்திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலை வசதி இல்லாத 1,986 குக்கிராமங்கள் (500-க்கும் மேல் மக்கள் தொகை) இணைக்கப்பட்டுள்ளன. கட்டம் I முதல் XI வரை 16,296 கி.மீ நீளமுள்ள 7,678 ஊரக சாலைகள் மற்றும் 8 பாலங்கள் ரூ. 4,586 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II**

ஊரக வணிக சந்தை மற்றும் வளர்ச்சி மையங்களுக்கு செல்லும் சாலைகளை மேம்படுத்துவதற்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-II, ஒன்றிய அரசால் 2013-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டிற்கு, இத்திட்டத்தின் கீழ் 2,940 கி.மீ நீளமுள்ள 860 சாலைப்பணிகள் மற்றும் 34 பாலங்கள் ரூ.1,434 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–III**

குக்கிராமங்களை அருகில் உள்ள சந்தை, உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றுடன் இணைக்கும் பிரதான சாலைகள் மற்றும் முக்கிய ஊரக இணைப்பு சாலைகளை மேம்படுத்துவதற்கு, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-III அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கான ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி பகிர்வு 60:40 ஆகும்.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-III-ன் கீழ், தமிழ்நாட்டிற்கு 7,375 கி.மீ நீளமுள்ள ஊரக சாலைகளை மேம்படுத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கபட்டுள்ளது. 2019-20 மற்றும் 2020-21 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 3,198 கி.மீ நீளமுள்ள 880 சாலைப் பணிகள் ரூ.1,817 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2021-22-ம் ஆண்டில், 2017 கி.மீ நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன மற்றும் ரூ.1054 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது. 2021-22-ம் ஆண்டில், 1253.52 கி.மீ நீளமுள்ள சாலைப்பணிகளை மேம்பாடு செய்ய 275 ரூ.745.22 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஊரகச் சாலைகளைப் பராமரித்தல்:

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, இச்சாலைகள் 5 ஆண்டுகால தொடர் பராமரிப்பு, இச்சாலைகளை அமைத்த அதே ஒப்பந்ததாரரால் செய்யப்பட வேண்டும். 5 ஆண்டுகால தொடர் பராமரிப்புக்கான நிதி மாநில அரசால் வழங்கப்பட வேண்டும். மேலும் 5 ஆண்டுகால தொடர் பராமரிப்பு முடிவுற்ற பிறகு, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஊரகச் சாலைகள், மாநில அரசின் இதர திட்டங்களின் கீழ் காலமுறை பராமரிப்பு செய்யப்படுகின்றன.

**தரக்கட்டுப்பாடு:**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், மாநில அளவில் தரக்கட்டுப்பாட்டு பிரிவு கண்காணிப்பு பொறியாளர் (தரக்கட்டுப்பாடு) அவர்களின்

தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நியமித்த தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (NQMS) மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (SQMs), பணிகளின் அனைத்து நிலைகளிலும் தரக்கட்டுப்பாட்டு சோதனைகளை மேற்கொள்கின்றனர். இத்துறையில் பணிபுரியும் களப்பொறியாளர்களின் திறனை மேம்படுத்த, பல்வேறு திறன் மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாட்டு பயிற்சிகள் பல்வேறு தேசிய மற்றும் மாநில அளவிலான சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

**தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் (R & D Initiatives):**

நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய சாலைகளை குறைந்த செலவில் அமைப்பதற்காக, தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சியாக, தமிழக அரசு நிரூபிக்கப்பட்ட மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் மூலம் ஊரகச் சாலைகளைக் கட்டமைக்க உறுதி ஏற்றுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், புதிய தொழில்நுட்ப முயற்சிகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட சாலைகளுக்கான நீளங்களின் விவரங்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த புதிய தொழில்நுட்ப முயற்சிகளைப் பின்பற்றுவதால் உள்ளூரில் கிடைக்கும் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது, அதன்மூலம் கட்டுமான செலவு, நேரம் குறைக்கப்படுவதோடு சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது.

**29. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)**

"தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" 2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டு, மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் சுகாதார வசதிகள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைவதை 2019 ஆம் ஆண்டுக்குள் உறுதி செய்யும் பொருட்டு, இது தொடர்பான அனைத்து முயற்சிகளும் துரிதப்படுத்தப்பட்டது. இவ்வியக்கம் தற்போது பகுதி-II ஆக நீட்டிக்கப்பட்டு தொடர் நடத்தை மாற்றம் மற்றும் தகவல் தொடர்பு மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையின் கூடுதல் நடவடிக்கைகளான எந்த ஒரு குடும்பமும் கழிப்பறை வசதி பெறுவதில் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல் மற்றும் ஊரகப் பகுதிகளில் சுகாதார நிலையினை மேம்படுத்திட, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஊரகத் தூய்மை பாரத இயக்கத்தின் கூறுகள்:

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமுதாய சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை ஊரகத் தூய்மை பாரத இயக்கத்தின் முக்கிய கூறுகளாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி II-ன் செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் தவிர ஏனைய கூறுகள் அனைத்தும் 15-வது நிதிக் குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.

**அ) தனி நபர் இல்லக் கழிப்பறைகள்**

அனைத்து ஊரகக் குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். முழுமையாக முடிக்கப்பட்ட தனி நபர் இல்ல கழிப்பறையானது, அடித்தளக் கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். கண்டறியப்பட்ட தகுதி வாய்ந்த குடும்பத்திற்குத் தனி நபர் இல்ல கழிப்பறைக் கட்ட ரூ.12,000/- ஊக்க நிதியாக வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டில் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் 19,669 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**ஆ) சமுதாய சுகாதார வளாகங்கள்**

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையின் கூடுதல் நடவடிக்கைகளில் நிறைவுற்ற ஊராட்சி என்ற நிலையினை பெறுவதற்கு, அங்கு வந்து செல்லும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக, குறைந்தபட்சம் ஒரு சமுதாய சுகாதார வளாகம் இருத்தல் அவசியமானதாகும். ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித் தனியாக போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு கழிப்பறையும், குளியலறைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமுதாய சுகாதார வளாகங்கள், கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டில் ரூ.5.46 கோடி மதிப்பீட்டில் 104 சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**இ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை**

திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, இத்திட்டத்தின் ஒரு முக்கியக் கூறாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி-II திட்டத்தின் கீழ், திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை அடிப்படையில் கணக்கிடப்படும். அனைத்துப் பணிகளும் 15-வது நிதிக் குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.

**ஈ) திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகள்**

தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும், சிறந்த முறையில் திடக்கழிவுகளை மேலாண்மை செய்திடும் பொருட்டு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ‘திடக்கழிவுத் தணிக்கை’ நடத்தப்பட்டு அந்த ஊராட்சியில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளின் வகைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியாகும் கழிவுகளில், 70 விழுக்காட்டிற்கும் மேலாக மக்கும் தன்மை உடைய கழிவுகளே காணப்படுகிறது. அவற்றை சிறந்த முறையில் உரமாக்க ஏதுவாக குப்பையை வீட்டிலேயே தரம் பிரித்து வழங்கிட பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகிறது.

நகர்ப்புரத்தை ஒட்டிய பெரிய கிராம ஊராட்சிகளில் உற்பத்தியாகும் திடக் கழிவுகளை சிறந்த முறையில் கையாள வேண்டி, 2020-21 ஆம் ஆண்டில் 287 நுண் உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

**உ) நெகிழிக் கழிவு மேலாண்மை**

ஊராட்சி ஒன்றிய அளவில் நெகிழிக் கழிவு மேலாண்மை அலகு அமைக்க ரூ.16 லட்சம் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி-II திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் இந்த அலகுகளில் இருந்து பெறப்படும் துகள்களாக்கப்பட்ட நெகிழிக் கழிவுகள், சாலைகள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும். சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் அலகுகளில் நெகிழிக் கழிவுகளை பயன்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான நடைபாதை அமைக்க பயன்படுத்தப்படும் பேவர்பிளாக், பூங்காக்களில் அமைக்கப்படும் இருக்கைகள் போன்ற பொருட்கள் தயாரிக்க தேவைப்படும் வசதிகள் ஏற்படுத்தித்தரப்படும். வீடுகளில், மறுசுழற்சி செய்யக்கூடிய நெகிழிப் பொருட்களை தரம் பிரிப்பதை ஊக்குவிக்கும் வகையில், நேரடி ‘நெகிழி மீள வாங்கும் கொள்கை’ அறிமுகப்படுத்தப்பட்டு நெகிழி பொருட்களை மீள வாங்கும் மையங்கள் (Direct Plastic Buyback Centres) கிராம ஊராட்சிகளில் அமைக்கப்படும். 2021-22 ஆம் ஆண்டில் ரூ.5.28 கோடி மதிப்பீட்டில் 33 நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் அமைக்கப்பட்டுள்ளது.

**ஊ) திரவக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகள்**

ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு கிராம ஊராட்சிகள் வீதம், மொத்தம் 776 கிராம ஊராட்சிகள் முன்மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கழிவு நீர் மேலாண்மையில் நிறைவுற்ற (Saturation) நிலையினை அடைந்திட, சுகாதார நடை பயணம், அடிப்படை உட்கட்டமைப்புகள் அடங்கிய குக்கிராம வாரியான வரைபடம், தேவைப்படும் கழிவு நீர் மேலாண்மை வசதிகள் மற்றும் அதற்கான நிதி ஆதாரம் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கழிவு நீரை திறம்பட கையாளவும், அவை சாலைகள் / தெருக்கள் மற்றும் பொது இடங்களில் தேங்குவதைத் தடுக்கும் நோக்குடன், சமுதாய உறிஞ்சுக்குழிகள், கிடைமட்ட / செங்குத்து வடிகட்டிகள் அமைத்தல், ஆகியவை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி-II-திட்டத்தின் கீழ் 15-வது நிதிக் குழு மானியத்துடன் ஒருங்கிணைந்து எடுத்துச்செய்யப்படுகிறது.

**எ) மலக்கழிவு மேலாண்மை**

நகர்ப்புரத்தை ஒட்டிய பெரிய கிராம ஊராட்சிகளிலும், கழிவு நீர்த் தொட்டிகள் (Septic tanks) அதிகம் உள்ள கிராம ஊராட்சிகளிலும், கழிப்பறையில் இருந்து வெளியேறும் கருப்பு நீர், நீர் நிலைகளை மாசுபடுத்தாத வகையில் திறம்பட மேலாண்மை செய்திட மலக்கழிவு மேலாண்மை அலகுகள், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி-II திட்டத்தின் கீழ் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிலிருந்து 10 கி.மீ. சுற்றளவில் உள்ள நகர்ப்புர பகுதிக்குட்பட்ட மலக்கழிவு மேலாண்மை அலகில் போதிய கூடுதல் கொள்ளளவு இருப்பின் அவற்றுடன் இணைந்து மலக்கழிவுகளை மேலாண்மை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**ஏ) சாண எரிவாயு கலன் (GOBAR-dhan)**

விவசாயக் கழிவுகள் மற்றும் கால்நடை சாணக் கழிவுகளை வளமாக மாற்றுதல் மற்றும் கழிவுகளை மேலாண்மை செய்வதன் மூலம் கிராமத்தின் சுகாதாரத் தரத்தை மேம்படுத்துவது என்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழகத்தில் புதுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டங்களில் 2 சாண எரிவாயு கலன்கள் அமைக்கும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது,

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி-II-திட்டத்தின் கீழ், முழு திட்ட காலத்திற்கும், ஒரு மாவட்டத்திற்கு ரூ.50 இலட்சம் வரை சாண எரிவாயு திட்டத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**ஐ) நேரடி தகவல் பரிமாற்றத்தில் ஊக்குநர்களை ஈடுபடுத்துதல்**

சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து கண்டறியப்பட்ட சுமார் 12,000 ஊக்குநர்களுக்கு, கள அளவில் நேரடி தகவல் பரிமாற்றத்தை பயனுள்ள வகையில் மேற்கொள்வதை உறுதிசெய்திட, திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடைதல் மற்றும் அது தொடர்பான கூடுதல் நடவடிக்கைகளில் (ODF Plus) அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள், பெண்கள் மற்றும் பொது மக்களிடையே கழிப்பறை பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடுகிறார்கள். மேலும், பிற துறைகளைச் சார்ந்த களப்பணியாளர்களுடன் இணைந்து கூட்டு முயற்சியாக பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இடங்களுக்கு சென்று சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்றனர். ஊக்குநர்களின் செயல்பாடுகள் 'தூய்மை தமிழகம்' கைப்பேசி செயலி மூலம் கண்காணிக்கப்படுகிறது. மேலும் அவர்களுக்கு அதற்கேற்ப ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

### 30. ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்

கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தவும், அடிப்படை சேவைகளை மேம்படுத்தவும் மற்றும் நகர்ப்புரங்களுக்கு இணையான வளர்ச்சி உடையதாக சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய "ரூர்பன் தொகுப்பினை" உருவாக்குவதே ஷியாம் பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டிற்கு மூன்று கட்டங்களாக 11 பழங்குடியினர் அல்லாத தொகுப்புகள் ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவையான நிதியினை ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் ஒருங்கிணைக்கப்படுகிறது. ஷியாம் பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டத்தின் கீழ் 14 கூறுகள் விரும்பத்தக்கதாக கருதப்படுகின்றன. இதில் பொருளாதார நடவடிக்கையுடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சியும் அடங்கும். இடைநிரவல் நிரப்பு நிதியின் (CGF) கீழ் ரூ.330 கோடி மதிப்பீட்டில் 976 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 734 பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 242 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஒருங்கிணைப்பு நிதியின் (Convergence) கீழ் ரூ.799.88 கோடி மதிப்பீட்டில் 874 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 862 பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 12 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 31. தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி நிர்வாகம் உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதை உறுதி செய்யவும் ஒன்றிய அரசானது சீரமைத்த தேசிய கிராம சுயாட்சி திட்டத்தினை 2018-ல் அறிமுகப்படுத்தியது. மேலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களை திறமையாக பயன்படுத்தி நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய உள்ளூர் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030-க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**நோக்கங்கள்:**

- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய ஊராட்சி நிறுவனங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்துதல்.
- அனைவரையும் உள்ளடக்கிய உள்ளாட்சி நிர்வாகத்தை அளித்திடவும், உள்ளூர் வளங்களை தேவையான அளவு பயன்படுத்தி மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைந்து ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்.
- கூடுதல் வருவாய் ஆதாரங்களை திரட்டும் வண்ணம் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்.
- ஊராட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்களிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையுடன் செயல்பட கிராம சபைகளை வலுப்படுத்துதல்.
- ஊராட்சிகளின் திறன் மேம்பாடு மற்றும் அதனை வழி நடத்துவதற்காக கல்வி மற்றும் சீர்மிகு நிறுவனங்களை ஒன்றிணைத்தல்.
- ஊராட்சி நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு நிலைகளில் நிறுவனங்களை வலுப்படுத்துதல்.
- நிர்வாகத்திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் வகையில் ஊராட்சிகளில் மின்ஆளுமை மற்றும் இதர தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல். செயல்திறன் அடிப்படையில் ஊராட்சி நிறுவனங்களை அங்கீகரித்து ஊக்குவித்தல்.

**நிதி ஒதுக்கீடு**

தேசிய கிராம சுயாட்சி திட்டமானது (RGSA) ஒன்றிய மற்றும் மாநில அரசு 60:40 என்ற நிதி விகிதாச்சார முறையில் செயல்படுத்தப்படுகிறது. ஒன்றிய அரசானது பயிற்சி, பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிர்வாகம் மற்றும் நிதி தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப் பிரிவு, ஊராட்சி கட்டடம் மற்றும் சமுதாயகூடம், ஊராட்சி மின்னணு செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல், கல்வி மற்றும் தொடர்பு (2%) மற்றும் திட்ட மேலாண்மை (5%) ஆகியவைகளுக்கு நிதி அளிக்கிறது.

மேலும் 2021-22-ம் ஆண்டு வருடாந்திர செயல் திட்டத்திற்கு தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் பல்வேறு பயிற்சிகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளத்தை மேம்படுத்தல் ஆகியவைகளுக்கு ஒன்றிய அரசு 307.371 கோடி ரூபாய் ஒப்புதல் அளித்துள்ளது. ஒன்றிய அரசின் பங்கு 39.89 கோடி ரூபாய் மற்றும் மாநில அரசின் பங்கு 26.59 கோடி ரூபாய் சேர்த்து 66.48 கோடி ரூபாய் அரசு விடுவித்துள்ளது.

**பயிற்சி கூறுகள்**

தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ், பல்வேறு தலைப்புகளில் கீழ்க்கண்டவாறு பயிற்சிகள் நடத்தப்படுகின்றன:

அ) பயிற்சி நிறுவனங்களின் மூலம் கிராம ஊராட்சியின் வளர்ச்சித் திட்டம், வட்டார ஊராட்சியின் வளர்ச்சித் திட்டம், மாவட்ட ஊராட்சியின் வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.

ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் பராமரிப்பு, தணிக்கை , சமூக தணிக்கை , ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்கள் குறித்த பயிற்சி.

இ) இ-கிராம சுவராஜ், தகவல் தொடர்பு, புவி இடம் சார்ந்த தொழில்நுட்பம், கட்டட தொழில்நுட்பம், தரக் கட்டுப்பாடு ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது சமூக பாதுகாப்பு, ஆரோக்கியம், சத்துணவு, குடிநீர், பல்லுயிர், சுகாதாரம், கழிவு மேலாண்மை , பாலின சமத்துவம், குழந்தை நட்பு ஊராட்சிகள், பேரிடர் மேலாண்மை, கல்வி, ஆளுமை வளர்ச்சி போன்ற சிறப்பு பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

**32. நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டம்**

நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களைக் கொண்ட மண்டலம்-4 (தண்டையார்பேட்டை) மற்றும் மண்ட லம்-6 (திரு.வி.க. நகர்) ஆகிய இரண்டு மண்டலங்கள் முன்மாதிரியாக இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலா ரூ.5 கோடி வீதம் மொத்தம் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்ற தினக்கூலியாக ரூ.382/நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் இரு மண்டலங்களிலும் இதுவரை 1,97,000 வீடுகள் ஆய்வு செய்து 57,000 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இத்திட்டத்தின் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிய விருப்பமுள்ள பயனாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் 28,000 பயனாளிகளுக்கான வேலை அட்டை (Job Card) வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை மண்டலம்-4 மற்றும் மண்டலம்-6ல் மழைநீர் வடிகால்களை தூர்வாருவதற்கு ரூ.16.50 லட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

### 33. வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

சட்டமன்றத்தில் ஜுன் 21, 2021 அன்று ஆற்றிய ஆளுநர் உரையின் அடிப்படையில் தமிழ் நாடு அரசு, தேசிய பேரிடர் மேலாண்மை குழுவின் முன்னாள் கூடுதல் செயலாளர் / ஆலோசகர் திரு.V.திருப்புகழ் (IAS Retd), அவர்கள் தலைமையில் வல்லுநர்கள் அடங்கிய ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. சென்னை மாநகரில் வெள்ள அபாயத்தினை தடுக்கும் பொருட்டு உரிய பரிந்துரைகளை அளிக்கும் பொறுப்பு இக்குழுவிற்கு அளிக்கப்பட்டது.

2021-ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது சென்னை மாநகரில் உள்ள பெரும்பாலன இடங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து பொதுமக்கள் மற்றும் சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடினார். மேலும் சென்னை மாநகரில் வெள்ளம் பாதிக்கா வண்ணம் நிரந்தர தீர்வை அளிக்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்துரையாடல் மேற்கொண்டார். ஆலோசனைக் குழு 03.01.2022 அன்று அரசிற்கு தனது இடைக்கால அறிக்கையினை அளித்தது. 2021- ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினால் கடுமையாக பாதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளை இவ்வாலோசனைக் குழு வழங்கியது. இவ்வாலோசனைக் குழு வழங்கிய பரிந்துரைகளை தொடர்ந்து, கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. முதற்கட்டமாக, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 40.80 கி.மீ. நீளத்தில் ரூ.184.67 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் இந்த நிதியாண்டிலேயே முடிக்கப்படும்.

இரண்டாம் கட்டமாக, ரூ.70 கோடி மதிப்பீட்டில் 20.03 கி.மீ. நீளத்திற்கு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒருங்கிணைப்பாளரான தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) பரிசீலனையில் உள்ளது.

மேலும் கடந்த பருவமழையின் போது மழைநீர் வெளியேற்ற மோட்டார் பம்புகள் வைக்கப்பட்ட இடங்களில் புதிதாக மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி வரவு-செலவு 2022 -23ல் தமிழ்நாடு அரசின் வெள்ளத்தடுப்பு பணிக்காக ஒதுக்கப்பட்ட சிறப்பு நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும்.

விரிவான முறையில் சென்னை மாநகரில் வெள்ள தடுப்பிற்கான உட்கட்டமைப்பை உருவாக்க பெருநகர சென்னை மாநகராட்சி நீர் ஆதாரத்துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஏனைய துறையினரோடு ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

### 34. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழகத்தில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்திடவும், பராமரித்திடவும் மற்றும் நகர பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்திடவும் சட்ட வடிவின் மூலம் 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாள், ஒரு சட்டபூர்வ அமைப்பாக உருவாக்கப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கண்ட பணிகளை செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

**தொலைநோக்குப் பார்வை:**

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் தனிக் குடிநீர்த் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்.

- ஒன்றுக்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை பயனாளிகளாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை பராமரித்து, தேவையான குடிநீரை ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மக்களுக்கு வழங்குதல்.
- குடிநீர் திட்டங்களின் நீடித்த நிலைத்தன்மையை உறுதி செய்ய, நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் மூலம் நீராதாரங்களை வலுப்படுத்துதல்.

**செயல்பாடுகள்:**

- தமிழ்நாட்டில் உள்ள ஊரக மற்றும் நகர பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.
- நகர பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல்.
- கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.
- வழங்கப்படும் குடிநீரின் தரத்தினை பரிசோதித்தல் மற்றும் கண்காணித்தல்.
- நீராதாரங்களின் நீடித்த நிலைத்த தன்மையை உறுதி செய்யும் பொருட்டு நீர்செறிவூட்டும் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.
- ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அளித்தல்.

### 35. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 1992-இல் தமிழக அரசால் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்துவதற்கு உரிய வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பு மூலம் கல்வித் திட்டங்களை இம்மன்றம் செயல்படுத்தி வருகிறது.

**மன்றத்தின் செயல்பாடுகள்:**

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் 24 அரசு கல்லூரிகளில் "மெதுவாக கற்கும் கல்லூரி மாணாக்கர்களின் இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு சிறப்பு கவனம்" அளிக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கென ஒவ்வொரு ஆண்டும் ரூ.30.00 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் "மென்திறன் பயிற்சி மையங்கள்" உருவாக்கப்பட்டுள்ளன. இந்த "மென்திறன் பயிற்சி மையங்கள்" வாயிலாக ஒரு கல்லூரிக்கு 500 மாணாக்கர்கள் வீதம் பயிற்சி அளிக்க ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.55 கோடி தொகை செலவிடப்பட்டு வருகிறது.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களிடையே ஆராய்ச்சித் திறனை ஊக்குவிக்கும் வகையில், 'சிறு ஆராய்ச்சி ஆய்வு' திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 25 ஆய்வுத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசிரியர் ஒருவருக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 117 திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களில் "சிறு ஆய்வு திட்டத்தின்" கீழ் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணாக்கருக்கும் அவர்களின் ஆராய்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆராய்ச்சி திட்டத்திற்கும் ரூ.15,000/- வழங்கப்படுகிறது. இதுவரை 230 ஆய்வுத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆய்வரங்கம் / பட்டறைகள் / தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்கு நடத்துவது தொடர்பாக 194 கருத்துருக்களுக்கு பகுதி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இம்மன்றம் பல்வேறு பட்டப்படிப்புகளுக்கு இடையே இணைத்தன்மை முடிவை வழங்குவதற்கு பல்வேறு பாடத்திட்டக் குழுக் கூட்டங்களை நடத்தி வருகிறது.

“மானுடவியல், சமூக அறிவியல்” மற்றும் “நவீன அறிவியல்” ஆகிய தலைப்புகளில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆய்வு கட்டுரைகளை வருடத்திற்கு இரண்டு முறை வெளியிடுவதன் மூலம் மாணாக்கர்களும், ஆராய்ச்சியாளர்களும் தற்போதைய ஆராய்ச்சிகளை பற்றி அறிந்து கொள்ளவும், தங்களது புலமை மற்றும் சிறப்பறிவுத் திறனை இக்கட்டுரைகள் மூலமாக வெளிப்படுத்தவும் உதவுகிறது.

தொழில் நிறுவனங்களின் பங்கேற்பை வளர்ப்பதற்கும், வேலை வாய்ப்பினை உயர்த்துவதற்கும், ஆறு பல்கலைக்கழகங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ள “பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டிணைவு மையங்களின்” இணைப்பு மையமாக தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் செயல்படுகிறது.

**2022-23 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்:**

மாணாக்கர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்க தொழில்துறை பங்கேற்பாளர்களுடன் கலந்தாலோசித்து மாநிலப் பல்கலைக்கழகங்கள்/ கல்லூரிகளில் வழங்கப்படும் படிப்புகளை மறுசீரமைத்தல்.

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தின் 28.4.2017 நாளிட்ட அறிவிக்கையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட பட்டப் படிப்புகளை விரிவாக தொகுத்து வழங்குவதன் மூலம் பாடங்களுக்கான இணைத்தன்மை செயல்முறையினை எளிதாக்கி பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கும், உயர் கல்வியினை தொடரவும் வழிவகை செய்தல்.

நாட்டின் 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தை முன்னிட்டு தமிழ்நாட்டின் சுதந்திர போராட்ட வரலாற்றின் 75 முக்கிய கட்டங்களை ஒருங்கிணைக்கும் சிறப்பு ஆவணத்தைத் தயாரித்தல்.

உயர்கல்வியின் வளர்ச்சியில் 75 முக்கிய கட்டங்களைக் குறிக்கும் சிறப்பு ஆவணத்தைத் தயாரித்தல் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பங்களிப்புகளின் அடிப்படையில் 75 மிக முக்கியமான உயர்கல்வி நிறுவனங்களின் அட்டவணைப் பட்டியலைத் தயாரிக்க ஆதாரங்கள், தரவுகளைச் சேகரித்தல்.

இம்மன்றம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து தேர்வு சீர்திருத்த பட்டறைகளை அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளின் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்களுக்கு நடத்த திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பினை போல மாநில அளவிலான தரநிர்ணய விதிமுறையினை வகுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முக்கிய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உள்தர நிர்ணய பிரிவு மற்றும் தேசிய நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பு / தேசிய தரமதிப்பீட்டுக்குழு (IQAC மற்றும் NIRF / NAAC) மைய அதிகாரிகளுடன் ஒன்பது ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

சீர்மைப் பயிற்சியினை (Bridge Course) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதலாமாண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு மீண்டும் செயல்படுத்துதல்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள், மின் ஆளுகை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்தி உயர்கல்வியின் தரத்தை சர்வதேச அளவிற்கு மேம்படுத்துவதன் மூலம் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயின்று உலகின் பல்வேறு இடங்களில் வசிக்கும் முன்னாள் மாணாக்கர்களை ஒருங்கிணைக்க புதிய திட்டம் ஒன்று 2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**36. தேசிய உயர்கல்வி திட்டம் (ரூசா)**

தேசிய உயர்கல்வி திட்டம் (ரூசா) என்பது 40% மாநில அரசின் பங்குடன் மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஒன்றிய நிதியுதவித் திட்டமாகும், உயர்கல்வியில் தொலை நோக்குப் பார்வையுடன் கூடிய அதிகமான செயல்திறன், சமத்துவம் மற்றும் சிறப்பினை அடைய திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 172 நிறுவனங்கள் நேரடியாகவும் மற்றும் பல உயர்கல்வி நிறுவனங்களுக்கும் (HEIs) பல்வேறு கூறுகளின் கீழ் நிதியளிக்கப்பட்டு உயர்கல்வித் துறையில் பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ள காரணத்தால், ரூசா 3.0 திட்டம் விரைவில் அமலாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரூசா 1.0 மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புயுடையேயான வகுப்பறைகள், ஆய்வகங்கள், விளையாட்டு வசதிகள், திறன் வகுப்பறைகள் மற்றும் தொழில் நுட்பம் நிறைந்த கற்றல் ஆகியவை ரூசா 1.0 திட்டம் சிறப்பாக அமல்படுத்தப்பட்டதற்கு சான்றாகத் திகழ்கிறது.

**ரூசா 2.0**

ரூசா 1.0 வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு, திட்டத்தின் திருப்திகரமான விளைவுகள் காரணமாக, ரூசா திட்டம் 2.0, ஒன்றிய கல்வி அமைச்சகம் (Ministry of Education) மூலம் 2018 ஆம் ஆண்டில் ரூ.615.78 கோடி அனுமதிக்கப்பட்டது. உள்கட்டமைப்பு கூறுகளின் கீழ், முதல் கட்டத்தில் நிதி பெறாத நிறுவனங்கள் விதிமுறைகளுக்கு இணங்க ரூசா 2.0 திட்டத்தின் கீழ் நிதி பெறுவதற்கு தகுதி உடைய நிறுவனங்களாக கருதப்பட்டு நிதியுதவி அளிக்கப்பட்டது. தேசிய தர நிர்ணயக் குழுவின் அங்கீகாரம், ரூசா 2.0-இன் கீழ் நிதியளிப்பதற்கான கட்டாய தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூசா 2.0-இன் கீழ் மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளில் தரம் மற்றும் சிறப்பை மேம்படுத்துவதற்கான இரண்டு புதிய கூறுகளை அறிமுகப்படுத்தியுள்ளதன் மூலம் மொத்தம் 14 கூறுகள் ரூசா 2.0-இன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. தமிழகத்திற்கு ரூ.492.00 கோடி (ஒன்றிய அரசின் பங்கு ரூ.295.00 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.197.00 கோடி) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பல்கலைக்கழகங்களில் தரம் மற்றும் சிறப்பை மேம்படுத்துதல்.

இந்த அங்கத்தின் கீழ் ரூ.100.00 கோடி அங்கீகரிக்கப்பட்டு இதில், ஒரு தொழில் முனைவோர் மையத்தை உருவாக்க ரூ.15.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் ரூ.85.00 கோடி, ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, தரமேம்பாடு மற்றும் சிறப்பான செயல்பாடு ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மிச்சிகன் பல்கலைக்கழகம், சிகாகோ பல்கலைக்கழகம் மற்றும் கார்னெல் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து ஆய்வு அடிப்படையிலான ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்கிறது. மேம்பட்ட ஆராய்ச்சிக்காக அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகத்துடன் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது. திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் சுமார் 7,700 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

மூன்று பல்கலைக்கழகங்கள் மற்றும் 10 கல்லூரிகளுக்கு, உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கென ரூ.80.00 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதன் மூலம், உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்கான பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமத்துவ செயல்பாடுகள் அடிப்படையில் திருநெல்வேலி மற்றும் மதுரையில் உள்ள இரண்டு கல்லூரிகளுக்கு தலா ரூ.2.50 கோடி வீதம் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு ஆசிரியர் மேம்பாட்டிற்காக மனிதவள மேம்பாட்டு மையங்களை (HRDC) அமைக்க தலா ரூ.3.5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**ரூசா–வின் செயல்பாடுகள்:**

ஆராய்ச்சி திட்டத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 4 தொழில்நுட்ப தொடர் வகுப்புகளுடன் கூடிய தேசிய மாநாடு 2019–இல் நடத்தப்பட்டது. இதில் 20 தலைசிறந்த பேச்சாளர்களும், 300 பங்கேற்பாளர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் 19 அரசு கலை மற்றும் அறிவியல் (தன்னாட்சி) கல்லூரிகளில் 13,159 மாணாக்கர்களுக்கு தொழிற்பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்போது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மூலம் மாநிலத்தில் உள்ள 48 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.3.32 கோடியில் தொழிற்கல்வித் திட்டங்களை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி மூலம் தொழிற்கல்வி கூறுகளின் கீழ் வாழ்க்கைத் திறன்கள் மற்றும் மேம்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. தலைமைத்துவம், தனிப்பட்ட திறன்கள், வளர்ந்து வரும் தொழில்நுட்பம் போன்றவற்றில் சுமார் 2,800 மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

வாராந்திர இயங்கலை பயிலரங்கம் (Wow), மூலம் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த கருப்பொருள்களை உள்ளடக்கிய நவீன புதுப்பிப்புகளுடன் மாநிலத்திலுள்ள அனைத்து அரசு உயர்கல்வி நிறுவனங்களுக்கும், ஒரு நிகழ்நிலை தொடர் வகுப்பு நடத்தப்படுகிறது. ஏறக்குறைய 500 மாணவர்கள் நேரலை (LIVE), திட்டத்தில் பங்கேற்கின்றனர், மேலும், மாணவர்கள் பயன்பெறும் வகையில் வகுப்புகள் “TNRUSA Youtube” என்ற வலையொளி அலைவரிசையிலும் ஒளிபரப்பாகிறது.

**37. அறிவியல் நகரம்**

1998 ஆம் ஆண்டில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு, விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் அறிவியல் கண்காட்சி மூலம் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கிடையே அறிவியலை பிரபலப்படுத்துவதன் மூலம் அறிவியல் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதை முதன்மையான நோக்கமாக கொண்டு அறிவியல் நகரம் உருவாக்கப்பட்டது. அறிவியலை பிரபலப்படுத்தும் நோக்கத்தில் பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்திற்கு நடமாடும் கோளரங்கம் அமைப்பதற்கு ரூ.9.00 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**விருதுகள் வழங்கும் திட்டம்:**

**தமிழ்நாடு வாழ்நாள் அறிவியல் சாதனையாளர் விருது:**

முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 60 வயது மேற்பட்டவர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியினை அங்கீகரிக்கும் மற்றும் கௌரவிக்கும் விதமாக இவ்விருது கடந்த 2000–ஆம் இவ்விருதிற்கான பரிசுத்தொகை ரூ.25,000/–க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

**தமிழ்நாடு முதுநிலை அறிவியலாளர் விருதுகள்:**

முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 45 வயது முதல் 60 வயதிற்குட்பட்டவர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியினை அங்கீகரிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் விதமாக இவ்விருது கடந்த 2016–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத்தொகை ரூ.20,000/–க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

**தமிழ்நாடு இளம் அறிவியலாளர் விருது:**

இவ்விருது, முனைவர் பட்டம் பெற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள 45 மற்றும் 45 வயதிற்கு உட்பட்ட அறிவியலாளர்கள் / கல்வியாளர்களுக்கு அவர்களது ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக 2000 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத் தொகை ரூ. 20,000/–க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

**சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது:**

இளம் மாணாக்கர்களை எந்தவொரு கல்வி முறையின் தூண்களாக வடிவமைப்பதில் ஆசிரியர்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஆகவே, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் சமுதாயத்தை அங்கீகரிக்கும் மற்றும் கௌரவிக்கும் விதமாக இவ்விருதினை அறிவியல் நகரம் வழங்கிவருகிறது. இவ்விருதிற்கான பரிசுத்தொகை ரூ. 25,000/-க்கான காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

**ஊரக கண்டுபிடிப்பாளர் விருது:**

கிராமப்புற மக்களால் சமூகத்தின் நலனுக்காக குறைந்த பொருட்செலவில் பல கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, அறிவியல் நகரம் மேற்படி கண்டுபிடிப்பாளர்களை கௌரவிக்கும் விதமாக இவ்விருதினை வழங்கி வருகிறது. இவ்விருதிற்கான பரிசுத்தொகை ரூ. 1,00,000/- காசோலை மற்றும் சான்றிதழ் ஆகும்.

**வருங்காலங்களில் செயல்படுத்தப்படும் செயற்பாடுகள் / திட்டங்கள்:**

**சென்னை அறிவியல் விழா:**

மாநில அளவில் சென்னை அறிவியல் விழா நடத்தப்படும். இதன் அங்கமாக அறிவியல் கண்காட்சி, குழு விவாதங்கள், பிரபல விரிவுரைகள், அறிவியல் செயல்முறை சோதனைகள், மற்றும் அறிவியலில் பொழுதுபோக்கு அம்சமாக பொம்மலாட்டம், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்காக வினாடி-வினா, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி ஆகியவைகளும் நடத்தப்படவுள்ளன.

**கோடைக்கால பயிற்சி முகாம்:**

முதுநிலை அறிவியல் பயிலும் மாணாக்கர்களுக்கிடையே ஆய்வு மனப்பான்மையை உருவாக்கி ஊக்குவிக்கும் விதமாக தமிழக அளவில் கணிதவியல், வேதியியல் மற்றும் உயிரியல் துறைகளில் கோடைக்கால பயிற்சி முகாம்கள் நடத்தப்படவுள்ளன. மாணாக்கர்கள் 75% ஊரகப்பகுதிகளிலிருந்தும், மீதமுள்ள 25% நகர்புறங்களிலிருந்தும் தேர்வுச் செய்யப்பட்டு 21 நாட்கள் இம்முகாம்கள் நடைபெறும்.

**38. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்**

அறிவியல் மைய செயல்பாடுகள் மூலம் பொதுமக்களிடையே அறிவியல் தொழில்நுட்பம் குறித்த புரிதல்களையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தவும், நமது மாநிலத்தில் அறிவியல் மையங்களை நிறுவும் நோக்கிலும், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையமானது நிறுவப்பட்டது. இயக்கிப் பார்க்கக் கூடிய ஆக்கப்பூர்வமான காட்சிப்பொருட்களுடன் சென்னையில் பி.எம்.பிர்லா கோளரங்கத்துடன் பெரியார் மையத்தையும், அறிவியல் தொழில்நுட்ப திருச்சிராப்பள்ளியில் அண்ணா அறிவியல் மையம் கோளரங்கத்தையும், வேலூரில் மாவட்ட அறிவியல் மையத்தையும், கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையத்தையும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் நிறுவியுள்ளது. வருகையாளர்களின் அறிவியல் புரிதல்களை மேம்படுத்துவது, அறிவியலின் மேன்மை செயல்முறை மற்றும் கொள்கைகளை பற்றி விளக்குதல் போன்ற சிறந்த குறிக்கோள்களுடன் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

வானவியல் கல்வி மற்றும் விண்வெளி குறித்த அறிவாற்றலை மாணவர்களுக்கு வழங்க சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மையங்களில் கோளரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அறிவியல் மையங்களை நிறுவுதல், அறிவியல் காட்சிக்கூடங்கள், கோளரங்கங்கள் அமைத்தல், செயல்முறை அறிவியல் காட்சிப் பொருட்களின் மேம்பாடு பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் மற்றும் மாநிலம் தழுவிய அறிவியல் தொடர்பிலான நிகழ்ச்சிகள் நடத்துதல் ஆகியன தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் முக்கிய செயல்பாடுகளாகும்.

**திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் அறிவியல் மையங்களில் புத்தாக்க மையங்கள்:**

கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையம், மற்றும் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையத்திலும் நிறுவப்பட்டுள்ள புத்தாக்க மையங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 28.10.2021 அன்று திறந்து வைத்தார்.

**மேற்கொள்ளப்பட்டுவரும் செயல்பாடுகள்:**

திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தை நவீனமயமாக்குதல் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்றவாறு அற்புதமான படக்காட்சிகளைத் தரவல்ல எண்ணிலக்க ஒளிப்படக்கருவிகளுடன் கோளரங்கம் ரூ.3.00 கோடி நிதியில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. எண்ணிலக்கக் கோளரங்கக் கருவிகளை அமைக்கும் பணிகள் நடைப்பெற்று வருகின்றன. இந்த வசதி 2022-23 ஆம் ஆண்டில் திறந்துவைக்கப்படும்.

**நடமாடும் அறிவியல் கண்காட்சி பேருந்து:**

அறிவியல் கருத்துக்களை கிராமப்புறங்கள் மற்றும் தொலைதூர பகுதிகளில் பரவரலாக்குவதற்காக சிறிய கோளரங்கம் மற்றும் பலவகை இயக்கியறியும் வகையிலான காட்சிப்பொருட்களுடன் நடமாடும் அறிவியல் கண்காட்சிப் பேருந்து 1990 ஜனவரி முதல் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. கிராமப்புற மாணாக்கர்களின் பயன்பாட்டிற்காக நடமாடும் அறிவியல் கண்காட்சிப் பேருந்தில். எண்ணிலக்கக் கோளரங்கக் கருவிகளுடன் 5 மீட்டர் விட்டம் கொண்ட நடமாடும் கோளரங்க அரைக்கோள அமைப்பு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் (சென்னை, அறிவியல் நகரத்தின் நிதியுதவி) வாங்கப்படவுள்ளது.

**புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம்:**

புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுத் திட்டம் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 10 முதல் 15 வயதிற்குட்பட்ட மாணவர்களை எதிர்காலத்தில் அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். 2021-22 ஆம் ஆண்டுக்கு 1,596 மாணாக்கர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு, புத்தாக்க விருதுகளும், தலா ரூ.10,000/- பணப்பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

**45 ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியில் பங்கெடுத்தல்:**

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் நடத்திய 45 ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது, இதில் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம், 16 பிப்ரவரி, 2022 முதல் மார்ச் 6-ஆம் தேதி வரை நடமாடும் அறிவியல் பேருந்து மூலம் அறிவியல் காட்சிப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டது.

**பாதுகாப்பு துறையின் தற்காப்பு தொழில்நுட்பத்தில் சுயசார்பு கண்காட்சி:**

சென்னை, ஆவடியிலுள்ள போர் ஊர்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் சுயசார்பு என்ற பெருமைமிகு வாரக் கொண்டாட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

**39. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்**

தமிழக அரசால் ஒரு தன்னாட்சி பெற்ற தலைமை நிறுவனமாக தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம், 1984ம் ஆண்டு உருவாக்கப்பட்டு, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. இம்மன்றம் நமது மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் களப்பணிகள் சார்ந்த பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில் ஆய்வாளர்கள், அறிவியலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பயன்பெறும் வண்ணம் பல்வேறு

வகையான 15 அறிவியல் தொழில்நுட்ப திட்டங்கள் ரூ.345.79 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கூடுதலாக, ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறை மூலம் ரூ.90.93 இலட்சம் மன்றத்தின் நிர்வாக செலவினங்கள் மற்றும் குறிப்பிட்ட அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களுக்காகவும் பெறப்பட்டுள்ளது.

**மன்றத்தின் செயல்பாடுகள்:**

**மாணவர் ஆராய்ச்சித் திட்டம்:**

2021-22 ஆம் ஆண்டு ரூ. 80.32 இலட்சம் செலவில், பல்வேறு துறைகளை சேர்ந்த 2,618 இறுதியாண்டு மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், 1,071 மாணவர் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கான அமைப்பு:**

இம்மன்றத்தில் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கான அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஒன்றிய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையால் ரூ.2.16 கோடி நிதி 2021–22 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை, அறிவியல் தொழில்நுட்ப புதுமைகளை பரப்புவதன் மூலம் உயர்த்துவதும், அறிவியல் மனப்பாங்கினை வளர்த்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுத் திட்டங்கள்:**

பல்வேறு பிரிவுகளில் ஆய்வுகள் மேற்கொள்ள அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டு ரூ.41.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 15 ஆய்வுத் திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் மாவட்டந்தோறும் 9 ஆம் வகுப்பு பயிலும் 40 மாணவர்களுக்கு பல்வேறு ஆராய்ச்சி மற்றும் அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 16 மாவட்டங்களிலிருந்து 640 மாணவர்கள் பயனடைவர்.

**இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்:**

இத்திட்டத்தின் மூலம் நமது மாநிலத்தின் 40 வயதுள்ள ஆய்வாளர்கள் புதிய ஆய்வு மற்றும் தொழில்நுட்பங்களை இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு கற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கப்படுவதுடன், மாதமொன்றுக்கு உதவித்தொகையாக ரூ.10,000 வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.3.50 இலட்சம் செலவில் 12 ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறுகின்றனர்.

கருத்தரங்கு, அறிவியல் மாநாடு மற்றும் பயிற்சி பட்டறை நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்

நமது மாநிலத்திலுள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வு குறித்து பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும் பகுதி நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் செலவில் 9500 மாணாக்கர்கள் பயனடையும் வகையில் 125 நிகழ்வுகளுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

**அறிவியல் தொழில்நுட்பத்தை பரப்புதல்:**

அறிவியல் தொழில்நுட்பத்தை பரப்பும் நோக்கில், அறிவியல் கண்காட்சிகள், பயிற்சி முகாம்கள், விரிவுரைகள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், அரசு சாரா தன்னார்வ அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.10.00 இலட்சம் செலவில் சுமார் 50 நிகழ்வுகள் மூலம் 4,000 பேர் பயனடைகின்றனர்.

**இளம் அறிவியலறிஞர்களுக்கு பயண நிதியுதவி அளித்தல்:**

இளம் அறிவியலறிஞர்கள் தமது ஆராய்ச்சிகளின் முடிவுகளை பன்னாட்டு மற்றும் உள்நாட்டு கருத்தரங்குளில் பகிர்ந்து கொள்ள இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. ஆண்டுதோறும் ரூ.2.50 இலட்சம் செலவில் 10 அறிவியலறிஞர்கள் பயன்பெறுவர்.

**அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்:**

இத்திட்டம் அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளை தமிழில் வெளிக்கொணர ஊக்கமளிக்கிறது. ஆண்டுதோறும் ரூ.3.00 இலட்சம் செலவில் 15 அறிவியல் வெளியீடுகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

**தமிழக அறிவியலறிஞர்கள் விருது (TANSA):**

பத்து துறைகளில் அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு ரூ.50,000/- ரொக்கமும், சான்றிதழும் வழங்கி தமிழக அறிவியலறிஞர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் ரூ.7.00 இலட்சம் செலவில் 10 அறிவியலாளர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

**புத்தாக்கம் மற்றும் பொருள் உருவாக்கம்:**

அடையாளம் காணப்பட்ட புதுமையாக்க கண்டுபிடிப்புக்கு நிதி உதவியாக ரூ.50,000 முதல் ரூ.1,00,000 வரை வழங்கும் வகையில் ரூ.10.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**கிராமப்புற பள்ளிகளில் அறிவியல் கல்வியின் தரத்தை உயர்த்துதல்:**

ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பாடங்களை நடத்தும் அரசுப் பள்ளி அறிவியல் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.9.00 இலட்சம் செலவில் 500 அறிவியல் ஆசிரியர்கள் பயனடைவர்.

**புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்:**

பொதுமக்களின் வாழ்வாதார திறன்களை மேம்படுத்துவதற்கு இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 18 பயிற்சிகள் ரூ.9.00 இலட்சம் செலவில் 480 பயனாளிகள் பயன்பெறும் வகையில் நடத்தப்படுகிறது.

தொழில்துறைக்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்

ஆண்டுதோறும் ரூ.22.50 இலட்சம் செலவில் இறுதியாண்டு பட்டயம் மற்றும் பொறியியல் பயிலும் மாணாக்கர்களின் திறமைகளை தொழில்துறைக்கேற்றவாறு மேம்படுத்துவதும், அவர்கள் பயிற்சி சுயதொழில் தொடங்குவதற்கும் அளிக்கப்படுகிறது.

**ஆய்வு கட்டமைப்பை மேம்படுத்துதல்:**

நமது மாநிலத்திலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அறிவியல் ஆய்வுக் கட்டமைப்புகளான ஆய்வு கூட வசதி மற்றும் ஆய்வு உபகரண வசதி ஆகியவை மேம்படுத்தப்பட இத்திட்டத்தின் வாயிலாக நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.15.00 இலட்சம் செலவில் 3 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆய்வுக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படுகிறது.

**காப்புரிமை தகவல் மையம்:**

மன்றத்திலுள்ள காப்புரிமை தகவல் மையம் மூலம் 22 அறிவுசார் சொத்துரிமை பிரிவுகள் தமிழகத்திலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் அறிவுசார் சொத்துரிமை பதிவுகளை ஊக்குவிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உடன்குடி பனங்கருப்பட்டிக்கு புவிசார் குறியீடு பெற திருநெல்வேலி மாவட்ட பனைப் பொருள் கூட்டுறவு சம்மேளன நிறுவனம் மற்றும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் இம்மையத்தின் மூலம் பதிவு செய்வதற்காக அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

**பள்ளி மாணவர்களுக்கான கணிதம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் செயல்பாடுகள்:**

இத்திட்டத்தின் கீழ், 6 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளி மாணவர்களுக்கு அறிவியல், தொழில்நுட்பம் பொறியியல் மற்றும் கணிதம் செயல்பாடுகளை அறிந்துகொள்ள செயல் ரூ.19.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**40. தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்**

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் ட்ரோன் அடிப்படையிலான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அண்ணா பல்கலைக்கழகத்தின் மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரியுடன் (M.I.T.) இணைந்து "தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்" நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கழகம் சட்ட அமலாக்கம், சுரங்கம், வருவாய் மற்றும் நகராட்சி நிர்வாகம், நகர்ப்புற மேம்பாடு, நீர் மேலாண்மை, விவசாயம் மற்றும் அவை சார்ந்த பிரிவு, பேரிடர் மேலாண்மை, சுகாதாரம், வனவியல், தொல்லியல், GIS மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகள் போன்றவற்றில் ட்ரோன் அடிப்படையிலான தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 25.1.2022 அன்று தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகத்தைத் தொடங்கி வைத்தார். இந்தக் கழகம் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 100% அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து வகையான ட்ரோன்களை வடிவமைத்தல், உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல் தவிர விவசாய பூச்சிக் கொல்லி தெளித்தல், கண்காணிப்பு, தேடல் மற்றும் மீட்பு, அளவீட்டு பகுப்பாய்வு போன்ற ட்ரோன் அடிப்படையிலான ஏராளமான சேவைகளையும் இந்த கழகம் வழங்கும். பல்வேறு முகமைகளுக்கு இக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் தீர்வுகள் / சேவை மற்றும் தயாரிப்புகள் இம்மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

தற்போது, சென்னையின் முக்கிய நீர்நிலைகளில் கொசுபுழு நாசினி (Larvicide) தெளிக்க, சென்னை பெருநகர மாநகராட்சிக்கு தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக்கழகத்தின் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கிரிஷி வித்யான் கேந்திராவிற்கு வேளாண் பணிகளுக்கான ட்ரோன் தெளிப்பான் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளுக்கு 50 கண்காணிப்பு ட்ரோன்களை வழங்குவதற்கும், தமிழ்நாடு காவல் துறையின் கடலோரப் பாதுகாப்புக் குழுவிற்கு ட்ரோன் வழங்குவதற்கும், சென்னை பெருநகர மாநகராட்சிக்கு கொசுபுழு நாசினி தெளிப்பு ட்ரோன் வழங்குவதற்கும் வழங்கல் ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

**41. இல்லம் தேடிக்கல்வித்திட்டம்**

பெருந்தொற்றுக் காலத்திற்குப் பின் கற்றல் இழப்பை ஈடுசெய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு சிறப்புத் திட்டம் இல்லம் தேடிக் கல்வி ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அக்டோபர் 2021இல் இத்திட்டம் தொடங்கப்பட்டது. 1 முதல் 8 வகுப்புகள் வரை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி, கற்றல் இழப்புகளை ஈடுசெய்வது மற்றும் இடைநின்ற மாணவர்களை மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பது என்ற உயரிய நோக்கங்களுடன் 1.81 இலட்சம் தன்னார்வலர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை சீரிய முறையில் வழிநடத்துவதற்காக மாநிலம், மாவட்டம் மற்றும் பள்ளி ஆகிய மூன்று அடுக்கு நிலைகளில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் இத்திட்டம் சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, தன்னார்வலர்கள் தாமே முன் வந்து இதற்கு ஆதரவு அளிக்குமாறு அரசால் அழைப்பு விடுக்கப்பட்டது. இணையவழியில் 6.72 இலட்சம் தன்னார்வலர்கள் இந்நாள் வரையில் கல்வி கற்பிக்க பதிவு செய்துள்ளனர். இத்திட்டம் முதற்கட்டமாக நவம்பர் 26, 2021 அன்று 12 மாவட்டங்களில்

தொடங்கப்பட்டது. அம்மாவட்டங்களில் கிடைக்கப்பெற்ற நல்ல வரவேற்பின் அடிப்படையில் மீதமுள்ள 26 மாவட்டங்களிலும் ஜனவரி 1, 2022 முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் தினமும் 14 மணிநேரம் மாலை 5.00 மணி முதல் 6.30 மணி வரை மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் நடைபெற்று வருகிறது. இல்லம் தேடிக் கல்வி மையங்களில் மாணவர்கள் மகிழ்வுடன் வந்து கற்றலின் இனிமையை உணர்கிறார்கள். அரசால் அளிக்கப்பட்ட மாபெரும் விழிப்புணர்வால் பெண்கள் முதல்முறையாக தங்கள் குடியிருப்பு பகுதியிலுள்ள மாணவர்களுக்கு கல்வியில் உதவுவதற்கு முன்வந்துள்ளார்கள். தன்னார்வலர்களுக்கு அவர்களின் சமூகக் கடமை, சமூகப் பங்களிப்பு மற்றும் மாணவர்களைக் கையாளும் திறன் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இல்லம் தேடிக் கல்வி மையங்கள் தன்னார்வலர்களுக்கு தோழமையுடன் சமூகக் கடமையாற்றும் வாய்ப்பு அளிக்கக் கூடிய இடமாகத் திகழ்கின்றன.

இத்திட்டத்தின் சிறம்பு அம்சம் இல்லம் தேடிக் கல்வி மையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கற்றல் அணுகுமுறையே ஆகும். இங்கு சூழல்சார்ந்த மற்றும் குழந்தைகள் எளிமையாகப் பங்கேற்கும் வகையில் அடிப்படை எண்ணறிவிற்கும் எழுத்தறிவிற்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. செயல்வழிக் கற்றல் முறை பின்பற்றப்படுகிறது. உதாரணமாக பாடல்கள், நடனம், பொம்மலாட்டம், கதை சொல்லுதல் போன்றவை மூலம் கற்பிக்கப்படுகிறது. இதற்கான பாடப்பொருள், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வல்லுநர்களால் உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு தன்னார்வலர்களுக்கும் எளிதாகக் கற்பிப்பதற்கு ஏதுவாக பயிற்சி கையேடு, கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. தன்னார்வலர்கள், மாணவர்களின் கற்றல் நிலைகளைத் தெரிந்துகொள்வதற்காக ‘கைப்பேசி செயலி’ மூலம் மதிப்பீடு மேற்கொள்ளும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

தன்னார்வலர்கள், 1 முதல் 5 ஆம் வகுப்பு மற்றும் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை என இரு பிரிவுகளாக மாணவர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாகக் கற்பிப்பதில் ஏற்பட்டுள்ள அனுபவத்தின் அடிப்படையில், அவர்கள் தாங்களாகவே புதுமையாக கற்பித்தல் கற்றல் பொருள்களை உருவாக்கியுள்ளார்கள். இவை மாணவர்களின் கற்றல் வேகம் மற்றும் சூழலுக்குப் பொருத்தமானதாகவும், அவர்கள் ஆழமான கற்றலில் ஈடுபடவும் உதவுகின்றன. தன்னார்வலர்கள், மாணவர்களின் கற்றலில் துணை நிற்பதுடன், மாணவர்கள் சுயமாக இயங்குவதற்கும், அவர்கள் அனுபவங்கள் மூலமாக கருத்துக்கள், நிகழ்வுகள், சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வதற்கும் ஊக்குவிக்கின்றார்கள்.

தன்னார்வலர்களுடன் ‘டெலிகிராம் செயலி’ மூலம் வாராந்திர உரையாடல், தனித்திறன் கொண்டாட்டம், மாதந்தோறும் புத்தாக்கப் பயிற்சி, TLM கண்காட்சிகள், தன்னார்வலர்கள் சந்திப்பு போன்ற பல்வேறு செயல் கூறுகள் இத்திட்டத்திற்கு மேலும் வலுவூட்டுகிறது. தினமும் 30 இலட்சம் மாணவர்கள் இல்லம் தேடிக் கல்வி மையங்களுக்கு வருகை புரிகிறார்கள். சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு, தன்னார்வலர்கள் மாணவர்களுடன் வைத்திருக்கும் நல்லுறவு, திறந்த மனதுடன் அவர்களை மையங்களுக்கு வரவேற்பது முதலியன மாணவர்கள் இல்லம் தேடிக் கல்வி மையங்களில் கற்றுக்கொள்வதற்கு அடிப்படையாக அமைகிறது.

இத்திட்டம் பெற்றோர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்களை உள்ளடக்கிய பள்ளி மேலாண்மைக் குழுக்களுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இக்குழுவினர் தன்னார்வலர்களுக்கு நல்ல ஒத்துழைப்பு அளிக்கிறார்கள். மாணவர்களிடம் கல்வி மற்றும் முழுமையான வளர்ச்சியை அடையச் செய்வதே பொதுவான குறிக்கோளாகும். பெருந்தொற்று காலத்தில் இல்லம் தேடிக் கல்வித் திட்டம், மாணவர்களிடையே

மேம்படுத்தப்பட்ட அர்த்தமுள்ள கற்றலை உருவாக்கியதோடு பெண்கள் தங்கள் நேரத்தைப் பயனுள்ள வகையில் பங்களிக்கவும் வழிவகை செய்துள்ளது. மேலும் இத்திட்டம் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் கல்வியின் தர முன்னேற்றதிற்கு அனைவருடன் இணைந்து பங்காற்றவும் வழிவகையினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் இல்லம் தேடிக்கல்வி திட்டத்திற்காக ரூ.97 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**42. எண்ணும் எழுத்தும் இயக்கம்**

எதிர்வரும் 2025ஆம் ஆண்டிற்குள் 1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளும் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்ணறிவுத் திறன்களைப் பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

ஆசிரியர்களுக்கென தலைமைப் பண்பு பயிற்சி, கையேடு, மாணாக்கரின் நிலைக்கேற்ற கற்றல் உபகரணங்கள் வழங்குதல் இவ்வியக்கத்தின் முதன்மைச் செயல்பாடாகும். ஒவ்வொரு குழந்தையின் அடைவுத் திறனும் தனித்தனியே கண்காணிக்கப்படும். 2021-22ஆம் ஆண்டில் எண்ணும் எழுத்தும் இயக்கத்திற்கென ரூ.66.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**43. கல்விசார் குறியீடுகள் மற்றும் நிலைத்த மேம்பாட்டு இலக்குகள்**

கல்விசார் குறியீடுகள் பள்ளிகள் ஆசிரியர்கள் மற்றும், மாணாக்கர் தொடர்பான குறியீடுகளை ஒப்பிடுவதற்கு உதவும் புள்ளி விவரங்கள் ஆகும் பொருத்தமான கல்விசார் . குறியீடுகளைக் கொண்டு கற்றல் செயல்பாடுகளின் விளைவுகளை மதிப்பிட இயலும். கல்விசார் குறியீடுகள் மற்றும் நிலைத்த மேம்பாட்டு இலக்குகள் பள்ளிக் கல்வியின் நிலையையும் இலக்குகளுக்கு ஏற்ப திட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களையும் இனங்காண உதவுகிறது. சில கல்விசார் குறியீடுகளின் வரையறைகள் பின்வருமாறு:

மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்

தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் வயதுவரம்பு ஏதுமின்றி சேர்க்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் மக்கள் தொகையில் அதே நிலையில் ஒத்த வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

$$\text{மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்} = \frac{\text{சேர்க்கப்பட்ட குழந்தைகள்}}{\text{மக்கள் தொகையில் ஒத்த வயதுடைய குழந்தைகள்}} \times 100$$

தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் மாணவர் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் 100க்கு மேலும் உயர்நிலை வகுப்புகளில் 94.20 ஆகவும், மேல்நிலை வகுப்புகளில் 78.60 ஆகவும் உள்ளது.

**நிகர மாணவர் சேர்க்கை விகிதம்:**

6 முதல் 17 வயதுக்குட்பட்ட 1 முதல் 12ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கும் மக்கள் தொகையில் அதே வயதிற்குட்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமாகும். தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலையில் நிகர மாணவர் சேர்க்கை விகிதமானது முறையே 99.90, 99.40, 78.40 மற்றும் 65.76 ஆக உள்ளது.

**தக்கவைத்தல் விகிதம்:**

தக்கவைத்தல் விகிதம் என்பது தற்போது 5, 8, 10ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கை எண்ணிக்கைக்கும் முறையே 4, 7, 9 ஆண்டுகளுக்கு முன்னர் ஒன்றாம் வகுப்பில் மாணவர் சேர்க்கை செய்யப்பட்ட எண்ணிக்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும். நம் மாநிலத்தில் தக்க வைத்தல் விகிதம் தொடக்க

வகுப்புகளில் 99.30 ஆகவும் நடுநிலை வகுப்புகளில் 98.70 ஆகவும், உயர்நிலை வகுப்புகளில் 96.75 ஆகவும் உள்ளது.

**இடைநிற்றல் விகிதம்:**

மொத்த மாணவர் சேர்க்கைக்கும் ஒரு குறிப்பிட்ட வகுப்பில் அதே ஆண்டில் கல்வியைத் தொடர இயலாத மாணவர்களுக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும். இடைநிற்றல் விகிதம் தொடக்க கல்வியில் 0.70 ஆகவும், நடுநிலைக் கல்வியில் 1.30 ஆகவும், இடைநிலை கல்வியில் 3.30 ஆகவும் உள்ள து.

**மாணவர் ஆசிரியர்விகிதம்:**

**மாணவர் ஆசிரியர் விகிதம் = பள்ளியில் குறிப்பிட்ட பிரிவில் மொத்த மாணவர் சேர்க்கை / அக்குறிப்பிட்ட பிரிவில் உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை**

புதிய ஆசிரியர்கள் உரிய நேரத்தில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுவதால் நாட்டிலேயே மிகக் குறைந்த மாணவர் ஆசிரியர் விகிதம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மாணவர் ஆசிரியர் விகிதம் தொடக்க நிலையில் 19 ஆகவும், நடுநிலையில் 20.90 ஆகவும் உயர்நிலையில் 22 ஆகவும், மேல்நிலையில் 30 ஆகவும் உள்ளது.

**பாலின சமநிலைக் குறியீடு:**

பாலின் சமநிலைக் குறியீடு என்பது பள்ளிச் சேர்க்கையில் உள்ள மாணவிகள் எண்ணிக்கைக்கும் மாணவர்கள் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

**பாலின சமநிலைக் குறியீடு = மொத்த மாணவிகளின் சேர்க்கை / மொத்த மாணவர்களின் சேர்க்கை**

பாலின சமநிலைக் குறியீடு உயர்நிலையில் 0.95 ஆகவும் மேல்நிலையில் 1.10 ஆகவும் உள்ளது.

**பாலின சமத்துவக் குறியீடு:**

பள்ளிச் சேர்க்கையில் பாலின சமத்துவத்தினை அறிய பாலின சமத்துவக் குறியீடு பயன்படுகிறது.

**பாலின சமத்துவக் குறியீடு = குறித்த நிலையில் பெண்களில் சேர்க்கை பங்கு / அந்நிலையில் அவ்வயதுடைய பெண்களின் பங்கு**

பாலின சமத்துவக் குறியீடு உயர்நிலையில் 1.01 ஆக உள்ளது. மாணவர் சேர்க்கை விகிதம், இடைநிற்றல் விகிதம், தேசிய அடைவு ஆய்வு (NAS) முடிவுகள், மாணவர் ஆசிரியர் விகிதம் ஆகியவை பள்ளிக் கல்வித் துறையின் நிலைத்த மேம்பாட்டு இலக்கை அடைவதற்கான முக்கியக் காரணிகளாகும்

### 44. கல்வி மேலாண்மை தகவல் முறைமை (EMIS)

பள்ளிக் கல்வித் துறையின் மின்னணு முதுகெலும்பாக விளங்கும் கல்வி மேலாண்மை தகவல் முறைமை தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளைச் சார்ந்த அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளின் நிகழ் நிலைத் தகவல்கள் அனைத்தும் மேற்கண்ட இணையதளத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தரவுகளின் அடிப்படையிலான கொள்கை முடிவுகளை எடுக்க இஃது உதவுகிறது. EMIS புள்ளி விவரங்கள் மாணவர்களின் தகவல்கள், பணியாளர்கள் மற்றும் பள்ளியின் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் பள்ளித்

தலைமை ஆசிரியர்கள் தங்களுக்கென்று வழங்கப்பட்டுள்ள பிரத்யேக உள்நுழைவு வாயிலாக உள்ளீடு செய்யப்படுகிறது.

பள்ளியில் பணியாற்றும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் மாணவர்களின் வருகைப் பதிவை குறிப்பதற்கும் மற்றும் அவர்களின் வருகைப் பதிவை கண்காணிப்பதற்கும் அவ்வாசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கும் பிரத்யேக உள்நுழைவு வழங்கப்பட்டுள்ளது. ஒன்றியம், கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் உள்ள ஒவ்வொரு நிருவாக அதிகாரிகளுக்கும் தனித்தனி உள்நுழைவு வழங்கப்படுகிறது. இதன் வாயிலாக அவர்கள் முக்கிய உள்ளீடுகள் செய்யவும், தரவுகளைப் பார்க்கவும், கண்காணிப்பு மேற்கொள்ளவும் முடியும். இம்முறையானது, ஆசிரியர்களின் பணிச்சுமைய குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் வாயிலாக மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணம், அதன் தொடர்புடைய சேர்க்கை பதிவு சரிபார்த்தல் மற்றும் நிதி ஒத்திசைவுப் பணிகள் EMIS தரவுகள் மூலம் சரிபார்க்கப்படுகிறது. 10 மற்றும் 11, 12 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகளை நடத்த பெயர் பட்டியல் தயாரித்தல் என்பது முக்கிய பங்கு வகிக்கிறது. இது EMIS வாயிலாக இணையவழியில் தயாரிக்கப்படுவதோடு அரசு தேர்வுகள் இயக்குநரகத்தின் தரவுகளுடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதால் நிருவாகப் பணிகளைக் குறைக்க உதவுகிறது.

தேசிய சுகாதார இயக்கம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ஆதிதிராவிடர் நலத்துறை, சமூக நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை போன்ற பல துறைகளுடன் ஒருங்கிணைந்து பள்ளிக் கல்வித் துறையால் உருவாக்கப்பட்ட வலுவான தரவுகள் மற்றும் மென்பொருளை உறுதிசெய்யும் பணி நடைபெற்று வருகிறது. தற்போதுள்ள செயல்பாடுகளின் திறனை மேம்படுத்துவதற்கும் துறைகளுக்கு இடையேயான தரவுப் பகிர்வுக்கும் அனைத்துத் துறைகளாலும் திறம்பட பயன்படுத்தப்படுகிறது.

உயர்கல்வியில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் 7.5% இடஒதுக்கீட்டை சரியான வகையில் நடைமுறைப்படுத்திட EMIS இணையதளம் விரைவாகவும், பயனுள்ள வகையிலும் தரவுகளை வழங்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இடைநின்ற மாணவர்களைக் கண்டறிந்து பள்ளியில் சேர்க்கவும் EMIS உதவுகிறது.

பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆய்வு அலுவலர்கள் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் பணிகளை ஆய்வு செய்வதற்காக EMIS தளத்தை அடிப்படையாகக் கொண்டு கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இச்செயலி வகுப்பறையில் நடைபெறும் கற்றல் கற்பித்தல் பரிமாற்றங்கள் மற்றும் மாணவர்களின் கற்றல் அடைவுகளை அறிந்துகொள்ள கட்டமைக்கப்பட்டுள்ளது. இச்செயலி பள்ளியில் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்களுக்கு தரமான பரிமாற்றம், ஆசிரியர் பயிற்சி மற்றும் தொடர் ஆய்விற்குச் சிறந்த செயலியாகப் பயன்பட துணைபுரியும்.

### 45. பள்ளி மேலாண்மைக்குழு (SMC)

பள்ளி அளவில் நிர்வகிக்கப்படும் முக்கியமான பள்ளி மேலாண்மை குழுவில் பெற்றோர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரநிதிகள், பள்ளி ஆசிரியர்கள், சுயநிதி குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கல்வியாளர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். பள்ளி அளவில் ஆரம்ப நிலையிலுள்ள இக்குழுவானது பள்ளியின் செயல்திறனை முன்னேற்றுவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்குழுவிற்கு புத்துணர்ச்சியூட்டும் வகையில், முழுமையாக அனைத்து பள்ளிகளிலும் மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி மேலாண்மை குழுவின் புதிய உறுப்பினர்கள் நியமனம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு

உறுப்பினர்களுடைய பணிகள் மற்றும் பொறுப்புகள் சார்ந்து இரண்டு கட்டங்களாக மாநில அளவிலான கருத்தாளர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது.

அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மை குழுக்களை (SMC) மறுகட்டமைப்பு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. SMC மறு கட்டமைப்பு, கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான பயிற்சி SMC உறுப்பினர்களுக்கும் மாநில கருத்தாளர்களுக்கும் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட கள அலுவலர்களுக்கு SMC பற்றிய விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் ஆசிரியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட கருத்தாளர்களுக்கு மாநில கருத்தாளர்களைக் கொண்டு 2 நாட்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் தலைமையாசியர், ஆசிரியர், 2 வார்டு உறுப்பினர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர் என 5உறுப்பினர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

20.03.2022 அன்று பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது. இப்பயிற்சியில் 23.54 இலட்சம் பெற்றோர்களுக்கு இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களின் உதவியுடனும் கலைக் குழுவின் வாயிலாகவும் சமூகத்திற்கான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்துப் பள்ளிகளிலும் பெற்றோர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு அனைத்து வகையான அரசுப் பள்ளிகளிலும் பலகட்டங்களாக மாநிலம் முழுவதும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்காக ஒரு சிறப்பு கைப்பேசி செயலி தொடங்கப்பட்டு, பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களால் பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களைத் திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற செயல்பாடுகளுக்காக 2021-22 ஆம் ஆண்டில் ரூ.1,682.59 லட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**46. சென்னை மெட்ரோ இரயில்**

சென்னை பெருநகர்ப் பகுதி, 98 இலட்சம் மக்கள் தொகையுடன் (ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம்-2018) 1189 சதுர கி.மீ அளவிற்கு பரவியுள்ளது. இந்த பகுதி மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பெருந்திரள் விரைவு இரயில் போக்குவரத்து கட்டமைப்புகளை (Mass Rapid Transit System) கொண்ட ஒரு பொதுப் போக்குவரத்து கட்டமைப்பை கொண்டதாகும். பெருகி வரும் போக்குவரத்து தேவையைக் கருத்தில் கொண்டும் போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசினை கட்டுப்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு, இரயில் சார்ந்த பெருந்திரள் போக்குவரத்தை அறிமுகப்படுத்த முடிவு செய்தது. பொதுப் போக்குவரத்தின் பங்கினை 28 சதவீதத்திலிருந்து (2018), 2048 இல் 50 சதவீதமாக உயர்த்துவதே இந்த அரசின் நோக்கமாகும்.

**1. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிறுவனங்கள் சட்டத்தின்படி, (Companies Act) மாநில அரசிற்கு சொந்தமான சிறப்பு வகை நிறுவனமாக, டிசம்பர் 2007இல் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற சமபங்கு வீதத்தில் இந்நிறுவனம் கூட்டு முயற்சி நிறுவனமாக 2009ல் மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி, ஒன்றிய அரசு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் அரசு செயலாளரை, தலைவராக கொண்டு ஐந்து

இயக்குநர்களை நியமனம் செய்கிறது. அதே போன்று, மாநில அரசு மேலாண்மை இயக்குநர் உட்பட ஐந்து இயக்குநர்களை நியமிக்கிறது. மேலும், இயக்குநர் குழுமத்தில் மூன்று செயல் இயக்குநர்கள் உள்ளனர்.

**2. சென்னை மெட்ரோ இரயில் திட்டங்கள்**

சென்னை மெட்ரோ இரயில் திட்டமானது, விமான போக்குவரத்து, தொலைதூர இரயில்கள் மற்றும் பேருந்துகள், மாநகரப் பேருந்துகள், புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் விரைவு போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய பொது மற்றும் தனியார் போக்குவரத்து அமைப்புகளுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட விரைவான, நம்பத் தகுந்த, திறன்மிக்க, மாசற்ற மற்றும் நீடித்த பொதுப் போக்குவரத்தாகும். சென்னை மெட்ரோ இரயில் திட்டம் வாழ்க்கையில் வசதியை ஏற்படுத்துதல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், நகரத்தின் மாசற்ற மற்றும் நீடித்த வளர்ச்சியையும் ஏற்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது. சென்னையின் மெட்ரோ இரயில் கட்டமைப்பிற்கு அதிக முதலீடுகள் தேவைப்படுவதால் கட்டங்களாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – கட்டம்–I**

வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலான ஒரு வழித்தடமும், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான மற்றொரு வழித்தடமும் என இரண்டு வழித்தடங்கள் கொண்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-I 2006 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டது. மாநில அரசு, இத்திட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கி, ஒன்றிய அரசின் நிதியுதவியும் வெளிநாட்டு நிதியுதவியும் பெறுவதற்காக பரிந்துரைத்தது. ஒன்றிய அரசு, 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், கட்டம்–ன் கீழ், இரண்டு வழித்தடங்களை செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை வழங்கியது. 45.1 கி.மீ நீளத்திலான இத்திட்டம் ரூ.14,600 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசும் மற்றும் ஒன்றிய அரசும் இணைந்து கூட்டு முயற்சி அடிப்படையில் செயல்படுத்தும் வகையில் ஒப்புதல் வழங்கப்பட்டது. கட்டம்–ன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட மெட்ரோ இரயில் வழித்தடங்களின் விவரங்கள் வருமாறு:

| வழித்தடங்கள் | உயர்த்தப் பட்டவை | சுரங்கப் பாதை | மொத்தம் |
|---|---|---|---|
| வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையில் (கி.மீ) | 8.8 | 14.3 | 23.1 |
| சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையில் (கி.மீ) | 12.3 | 9.7 | 22.0 |
| மொத்த நீளம் (கி.மீ) | 21.1 | 24.0 | 45.1 |
| மெட்ரோ இரயில் நிலையங்கள் | 13 | 19 | 32 |

கட்டம்-I ன் கீழ், பயணிகள் சேவைகள் பல்வேறு நிலைகளில் பணிகள் முடிவுற்றதையும், பணிமனைக்கு இணைப்பு ஏற்படுவதன் அடிப்படையிலும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொடங்கி வைக்கப்பட்டன:

இத் திட்ட மதிப்பீடு ரூ.14,600 கோடியிலிருந்து ரூ.18,379.92 கோடியாக திருத்தியமைக்கப்பட்டு மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் ஒப்புதல் 2021–ல் பெறப்பட்டது. திருத்திய பங்களிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு ரூ.3125.78 கோடியை சமவீத பங்காகவும் (17.00%), ரூ.2752.36 கோடியைச் சார்நிலைக் கடனாகவும் (14.98%) வழங்கியுள்ளது. அதே போன்று ஒன்றிய அரசு, ரூ.3125.78 கோடியை சமவீத பங்காகவும் (17.01%), ரூ.730.00 கோடியைச் சார்நிலைக் கடனாகவும் (3.97%) வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள

ரூ.8646.00 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக்கடனாக நேரடியாக செல்லும் நிதியுதவியாக (Pass Through Assistance- 47.04%) பெறப்பட்டது.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்–கட்டம் -I**

இன் நீட்டிப்பு தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் – I இன் வழித்தடம் – 1 ஐ வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையில் 9.051 கி.மீ நீளத்திற்கு நீட்டிப்பதற்கு ஒப்புதல் அளித்தது. இத்திட்டக் கருத்துரு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காகவும், அதன் நிதியுதவிக்காகவும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவி பெறுவதற்காகவும் 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தை ரூ.3770 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 15-06-2016 அன்று ஒன்றிய அரசு வழங்கியது. கட்டுமானப் பணிகள் 23-07-2016 அன்று தொடங்கப்பட்டு, பணிகளை மேற்கொள்கின்ற காலத்தில், கோவிட் பெருந்தொற்று பரவுவதைத் தடுப்பதற்கான கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் பணிகள் முடிவுற்று, 14-2-2021 அன்று பயணிகள் சேவை தொடங்கி வைக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு, ரூ.508.00 கோடியை சமவீத பங்காகவும், ரூ.599.27 கோடியை சார்நிலைக் கடனாகவும் கட்டம் – I இன் நீட்டிப்பு திட்டத்திற்காக வழங்கியுள்ளது. அதே போன்று, ஒன்றிய அரசு ரூ.508.00 கோடியை சமவீத பங்காகவும், ரூ.205.00 கோடியை சார் நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. ரூ.2141.00 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக்கடனாக நேரடியாக செல்லும் நிதியுதவியாக (Pass through Assistance) பெறப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் – Iஇன் கீழ், 54.1 கி.மீ நீள வழித்தடங்களில் முழுமையான பயணிகள் சேவை நடைபெற்று வருகின்றது. பெருந்தொற்று மற்றும் அதற்கான கட்டுப்பாடுகள் குறையத் தொடங்கியவுடன், பயணிகள் எண்ணிக்கை, கடந்த சில மாதங்களில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மார்ச் 2022-இல் பயணிகள் எண்ணிக்கை ஒரு நாளில் 2 இலட்சம் என்ற உச்சத்தைத் தொட்டுள்ளது மற்றும் அம்மாதத்தில் 44.6 இலட்சம் பயணிகள் மெட்ரோ இரயிலைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், கடைசி மைல் இணைப்பினை மேம்படுத்துதல், தள்ளுபடி கட்டணத்துடன் கூடிய பயண அட்டைகள், எளிதில் அணுகும் வகையில் மெட்ரோ நிலையங்களின் மேம்பாடு மற்றும் பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மூலம் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கம் மற்றும் மத்திய சதுக்கம் போன்றவை பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பின் அடையாளங்கள் மற்றும் சிறப்பான உதாரணங்கள் ஆகும். இதனால் ஒரு போக்குவரத்து அமைப்பிலிருந்து மற்றொரு போக்குவரத்து அமைப்பிற்கு பயணிகள் எளிதாக மாற இயலும். இத்திட்டங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. 16-12-2021 அன்று கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கமும் 30-03-2022 அன்று மத்திய சதுக்கமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டன. கடைசி மைல் இணைப்பினை மேம்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30-11-2021 அன்று 12 சிறிய பேருந்துகள் இணைப்பு சேவைகளாக துவக்கி வைக்கப்பட்டன.

இவற்றின் செயல்பாட்டினை கருத்தில் கொண்டு சிறிய பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். கடைசி மைல் இணைப்பின் இதர முறைகளான மிடுக்கு இருசக்கர வாகனங்கள் (Smart Bikes.), உபர் (Uber), ஓலா (Ola), ஷேர் ஆட்டோ (Share Auto) போன்றவை ஊக்குவிக்கப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்– கட்டம்–II**

மூன்று வழித்தடங்களை உள்ளடக்கிய 107.55 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II ற்கு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழக அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதி பங்களிப்பிற்காகவும் இருதரப்பு மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் நிதியுதவிக்காகவும் பரிந்துரை செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர்ப் பகுதிக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்ட அறிக்கையின் அடிப்படையில், கட்டம் – II இல் உள்ள வழித்தடங்களில் ஒன்றான வழித்தடம்–4 ஐ கலங்கரை விளக்கத்திலிருந்து வடபழனி மற்றும் போரூர் வழியாக பூந்தமல்லி வரை நீட்டிப்பதற்கும், திட்டச் செலவினை குறைப்பதற்காக வழித்தடம் – 5இல் சில சுரங்கப்பாதை வழித்தடப் பகுதிகளை உயர்த்தப்பட்டவைகளாக மாற்றுவதற்கும் அரசு முடிவு செய்தது. அதனடிப்படையில் ஒரு ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை திருவாளர்கள் ரைட்ஸ் (RITES) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–II ற்கு கொள்கையளவிலான ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசு வழங்கியது. கட்டம் – IIன் திட்டம் ரூ.69,180 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டு நிதியுதவி மற்றும் வெளிநாட்டு கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு விரிவான திட்ட அறிக்கை பரிந்துரைக்கப்பட்டது.

இதனிடையே, மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான மதிப்பீட்டு அளவுகோல் (Benchmarking cost) குறித்த வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஆலோசனைகளின் அடிப்படையிலும், ஒன்றிய அரசின் புதிய மெட்ரோ இரயில் கொள்கையின் அடிப்படையிலும், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II இன் செலவு மதிப்பீடு ரூ.61,843 கோடியாகவும், கட்டுமான காலத்திற்கான வட்டி மற்றும் முன் இறுதிக்கட்டணத்தைச் சேர்த்து ரூ.63,246 கோடியாகவும் திருத்தியமைக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் –1ற்கு வழங்கியதைப் போல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் –பற்கும் 50:50 என்ற சமவீதப் பங்களிப்பு அடிப்படையில் ஒப்புதல் வழங்குமாறு ஒன்றிய அரசிடம் கோரப்பட்டுள்ளது. இத்திட்டமானது, இந்தியாவிலேயே ஒரே கட்டத்தில் செயல்படுத்தப்படும் மிகப்பெரிய மெட்ரோ இரயில் திட்டமாக அமைந்துள்ளது.

**கட்டம்-II வழித்தடங்களின் விவரங்கள் பின்வருமாறு:**

- **வழித்தடம்–3:** மாதவரம் முதல் சிறுசேரி (சிப்காட்) வரையுள்ள (45.8 கி.மீ) – வடக்கு – தெற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில், மென்பொருள் வழித்தடம், அடையார், மயிலை மற்றும் புரசைவாக்கம் போன்ற முக்கியப் பகுதிகள் இணைக்கப்படுகிறது;
- **வழித்தடம்–4:** கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச் சாலையானது (26.1 கி.மீ) – கிழக்கு மேற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில் நகரின் வணிகப் பகுதிகளான நந்தனம், தியாகராயநகர், வடபழனி, போரூர் மற்றும் பூவிருந்தவல்லி ஆகியவை இணைக்கப்படுகிறது;
- **வழித்தடம்–5:** மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை (47.0 கி.மீ) – சுற்று வட்ட வழித்தடமான இவ்வழித்தடத்தில் வில்லிவாக்கம், அண்ணாநகர், கோயம்பேடு, விருகம்பாக்கம், இராமாபுரம், மடிப்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஆகிய பகுதிகள் இணைக்கப்படுகிறது; கட்டம்–ன்கீழ் கருதப்பட்டுள்ள மெட்ரோ இரயில் நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

வழித்தடம்–3 இல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் (35.67கி.மீ), வழித்தடம்5இல் மாதவரம் முதல் சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையம் வரையிலும் (16.34கி.மீ) – மொத்தம் 52.01 கி.மீ நீள

வழித்தடத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவி இறுதி செய்யப்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு.

முகமையுடன் 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடன் வழங்க இறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒன்றிய அரசு பங்கேற்கும் வரையில், இத்திட்டத்தைத் தற்காலிகமாக "மாநில அரசு திட்டமாகக்" கருதி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியளிக்கும் வழித்தடப்பகுதிகளை செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாநில அரசு வழங்கியது. கடன் தொகையின் முதல் தவணை 75 பில்லியன் 519 மில்லியன் ஜப்பான் யென் ஆகும். இரண்டாவது தவணை கடனான 73 பில்லியன் ஜப்பான் யென்னுக்கும் 31-03-2022 அன்று கையெழுத்தாகியுள்ளது.

கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி புறவழிச்சாலை வரையிலான (26.1 கி.மீ) வழித்தடம்-4, வழித்தடம்-3 இல் சோழிங்கநல்லூர் முதல் சிறுசேரி (சிப்காட்) வரை (10.13 கி.மீ) மற்றும் வழித்தடம்-5 இல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான (30.66 கி.மீ) எஞ்சிய வழித்தடப்பகுதிகளை செயல்படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் நிதியுதவி இறுதி செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு பின்னர் இத்திட்டத்தில் பங்கேற்கும் வகையில், தற்காலிகமாக மாநில அரசு திட்டமாகக் கருதி, 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், வழித்தடம்-4 முழுமையாகவும் வழித்தடம்-3 மற்றும் வழித்தடம்-5 இல் எஞ்சிய வழித்தடப்பகுதிகளையும் செயல்படுத்துவதற்காக அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

2021-2022 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் வரவு செலவுத் திட்ட உரையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம் - பற்கான நிதி பங்களிப்பு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, இத்திட்டம் சமபங்களிப்பு முறையில் ஒன்றிய அரசின் திட்டமாக செயல்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் இறுதி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மாநில அரசின் நிதியுதவியுடன் மண் பரிசோதனை மற்றும் விரிவான வடிவமைப்பு தயாரிப்புப் பணிகளை முடித்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கட்டம் - I ஐ வெற்றிகரமாக செயல்படுத்தியதன் வாயிலாக கிடைக்கப்பெற்ற ஒட்டுமொத்த அனுபவத்தின் அடிப்படையில், மெட்ரோ நிலையங்களின் அளவினை சீரமைத்தல், நடைமேடை நீளம், காற்றுப் போக்கி அமைப்புகள் போன்றவற்றில் பல்வேறு புத்தாக்க வடிமைப்புகளை சட்டபூர்வமான அளவுகோலுக்கு குந்தகம் இன்றி அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புத்தாக்கங்கள் இந்தியாவில் உருவாகிக் கொண்டிருக்கும் ஏனைய மெட்ரோ இரயில் நிறுவனங்களால் பின்பற்றும் வகையில் அமைந்துள்ளது. அனைத்து நிலையங்களும், மாற்றுத் திறனாளிக்கு உகந்த வகையிலும் இந்திய பசுமை கட்டிட குழுமத்தின் பசுமைக் கட்டிட அளவுகோலின் படியும், அதாவது சமூக மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளன.

மொத்த நீளமான 118.9 கி.மீ வழித்தடப் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி, சீராக முன்னேறி வருகின்றன. கட்டுமான காலத்தின் போது நகரக் குடிமக்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைக்கும் வகையிலும் பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்யும் வகையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

**பிற திட்டங்கள்:**

**1. சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – கட்டம் – 1 இன் நீட்டிப்பு – விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை**

தமிழ்நாட்டின் தென்பகுதிகளின் நுழை வாயிலான ஜி.எஸ்.டி சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், உருவாகி வரும் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திற்கு போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்துவதற்கும் சென்னை மெட்ரோ இரயில் வழித்தடம் – 1 ஐ விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு / விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. திருவாளர்கள் ஏஇகாம் (M/s. AECOM) நிறுவனம் தயாரித்தளித்த விரிவான திட்ட அறிக்கை, இருதரப்பு / பன்னாட்டு வங்கிகளின் நிதியுதவிக்கு பரிந்துரைப்பதற்காக தற்போது மாநில அரசின் தீவிர பரிசீனையில் உள்ளது.

**2. இரயில் வழித்தட இணைப்பு – தாம்பரம் முதல் வேளச்சேரி வரை**

தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான இரயில் வழித்தட இணைப்பிற்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. திருவாளர்கள் சிஸ்ட்ரா (M/s. SYSTRA) நிறுவனம் தயாரித்தளித்த சாத்தியக்கூறு அறிக்கை மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

**3. கோயம்புத்தூர் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டம்**

கோயம்புத்தூர் நகருக்கான பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டத்திற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை / விரிவான திட்ட அறிக்கையை ஜெர்மானிய நாட்டின் நிதியுதவி முகமையான கே.எப்.டபுள்யூ-வின் (KfW) நிதியுதவியுடன் தயாரிப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அறிக்கைகள் தயாரிக்கும் பணியினை திருவாளர்கள் சிஸ்ட்ரா (SYSTRA) மற்றும் ரைட்ஸ் (RITES) கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கைக்கு ஜூலை 2021ல் வழங்கப்பட்ட ஒப்புதலின் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆலோசகர்கள் இத்திட்டத்தை 3 கட்டங்களாக செயல்படுத்த பரிந்துரைத்துள்ளனர். இது குறித்து அங்குள்ள தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், நிறுவனங்கள், முக்கிய சங்கங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் போன்ற பங்குதாரர்களின் கருத்து கேட்பு கூட்டம் 01-04-2022 அன்று நடைபெற்றது. கட்டம்-ற்கான விரிவான திட்ட அறிக்கை அரசின் ஆய்விற்காக விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**4. இரண்டாம் நிலை நகரங்களில் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டம்**

மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்து திட்டங்களை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கைகளை தயாரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நகரங்களுக்காக ஒருங்கிணைந்த நகர்வுத் திட்ட அறிக்கைகளின் அடிப்படையில் சாத்தியக் கூறு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படுகிறது. அவ்வாறே மதுரைக்கான சாத்தியக்கூறு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் சாத்தியக்கூறு அறிக்கை பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டத்தை மேம்படுத்துதல் / தயாரித்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**47. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட ம்–II**

அதிக வாகன நெருக்கடி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளை உலக வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்த, தமிழக அரசு தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II–ஐ உருவாக்கியது. இவ்வலகானது, திட்ட இயக்குநர் தலைமையில் ஒரு தலைமைப் பொறியாளர், 2 வட்டங்கள் மற்றும் 8கோட்டங்கள் மற்றும் 3 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் செயல்பட்டு வருகின்றது.

**மேம்படுத்துதல் பணிகள்:**

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–IIன் மூலம் 1170 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் உலக வங்கியின் கடனான 300.00 மில்லியன் அமெரிக்க டாலர் (மீளப்பட்ட தொகை ரூ.2122.90 கோடி) உடன், நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறுவாழ்வு மறுகுடியமர்வு செலவு பணிகள் மொத்தம் ரூ.5171 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**முடிக்கப்பட்ட பணிகள்:**

427.967 கி.மீ. நீளமுள்ள 10 தொகுப்புப் பணிகள் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறையில் ரூ.1704.91 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு 5 ஆண்டு கால பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பொது தனியார் பங்களிப்பு முறையில் (பிபிபி) 70.2 கி.மீ. நீளமுள்ள ஒட்டன்சத்திரம் – தாராபுரம் அவினாசிபாளையம் சாலை (மா.நெ.37) நான்கு வழிச் சாலையாக ரூ.713.45 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு 8 ஆண்டு கால பராமரிப்புப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–1–இன் மூலம் மேம்பாடு செய்யப்பட்ட ஆற்காடு முதல் திருவாரூர் சாலை மற்றும் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான 581.493 கி.மீ நீளமுள்ள சாலைகள் வெளித்திறன் மற்றும் செயல்பாடு அடிப்படையிலான ஒப்பந்தம் (OPRC) மூலம் ரூ.220.07 கோடியில் 5 ஆண்டு பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டன.

**நடைபெற்றுவரும் பணிகள்:**

பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறையில் (EPC) 6 தொகுப்புப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. நடைபெற்று வருகின்ற பணிகள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் (TNIDB) நிதி உதவியுடன் விரிவான திட்ட அறிக்கை **தயாரிக்கும் பணி:**

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 3319 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளுக்காக ரூ.132.76 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக, 987 கி.மீ. நீளமுள்ள 28 சாலைகள் 5 தொகுப்புகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு ஆலோசகர்கள் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நிறுவனத் திறன் மேம்பாடு மற்றும் சாலை பாதுகாப்பு (ICERS):**

**நிறுவனத்திறன் மேம்பாடு (ICE):**

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II இன் கீழ் ரூ.66.00 கோடி செலவில் நிறுவனத் திறன் மேம்பாட்டுப் பணிகள் உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த கூறுகளின் கீழ் பின்வரும் பணிகள் நடைபெற்று வருகின்றன:

- நெடுஞ்சாலை கையேடுகள் (1, II, III& IV) ஆகியவற்றை தற்போதைய நிலைக்கேற்பதிருத்தம் செய்தல்.

- இத்துறைக்குத் தேவையான கணினிகள், மடிக்கணினிகள் போன்றவற்றை தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (Electronics Corporation of Tamil Nadu (ELCOT)) மூலம் கொள்முதல் செய்தல்.
- நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் (HRS) மூலம் பயிற்சி மையத்திற்கான கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல்.

**சாலை பாதுகாப்பு (RS):**

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II இன் கீழ் ரூ.120.00 கோடி செலவில் சாலை பாதுகாப்புப் பணிகள் உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு நடவடிக்கைகள்

நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம் 2013 RFCTLARR Act - Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act-2013) மற்றும் உலக வங்கியின் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் அடிப்படையில் திட்டங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு, உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கிட ஏதுவாக, மறு குடியமர்வு கொள்கை அமைப்பிற்கு (RPF - Resettlement Policy Frame work) அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் – 2001ன்படி இத்திட்டத்திற்கென 177.19 ஹெக்டர் தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு நிலங்களுக்கான இழப்பீடு "நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமைச் சட்டம் 2013" அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

மறு குடியமர்வு கொள்கை அமைப்பின்படி, "இத்திட்டத்தால் பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்கள், நில உரிமை இல்லாதவர்கள், சாலையோர கடை நடத்துபவர்கள் உட்பட 5272 நபர்களுக்கு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுக்கெனவும், திட்டத்தால் பாதிக்கப்பட்ட 298 பொதுவான சொத்துகளை மறுகட்டுமானம் செய்யவும் 31.03.2022 வரை மொத்தம் ரூ.53.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**48. சென்னை எல்லைச்சாலை திட்டம்.**

சென்னை எல்லைச் சாலை திட்டமானது, திட்ட இயக்குநர், தலைமையில் செயல்படுகிறது. திட்ட செயலாக்க அலகு 1 கண்காணிப்புப் பொறியாளர், 1 கோட்டப் பொறியாளர் மற்றும் 1 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலருடன் செயல்பட்டு வருகின்றது.

132.87 கி.மீ. நீளமுள்ள சென்னை எல்லைச் சாலை திட்டம் எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி கிழக்கு கடற்கரை சாலையில் மாமல்லபுரம் அருகே பூஞ்சேரி சந்திப்பில் முடிவடைகிறது. இத்திட்டமானது, சென்னை நகருக்கு சிறந்த போக்குவரத்து இணைப்பை வழங்கும் ஒரு முக்கிய போக்குவரத்து வழித்தடமாகும். மேலும், இத்திட்டம் சென்னையின் நான்கு முக்கிய ஆரச் (ரேடியல்) சாலைகளான தே.நெ-16 (சென்னை – கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை), தே.நெ-716 (சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலை), தே.நெ.48 (சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை), தே.நெ-32 (சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை) ஆகிய தேசிய நெடுஞ்சாலைகளை இணைப்பதன் மூலம் துறைமுகங்களுக்குத் திறமையான வணிகப் போக்குவரத்தை வழங்குகிறது.

இத்திட்டம் பிரிவு 1 முதல் பிரிவு IV வரை அணுகல் கட்டுப்படுத்தப்பட்ட ஆறுவழித்தட பிரதான சாலையாகவும், பிரிவு-V அணுகல்கட்டுப்படுத்தப்பட்ட நான்கு வழித்தட பிரதான

சாலையாகவும், இருபுறமும் முழு நீளத்திற்கு இருவழித்தடச் சேவைச் சாலையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. செயல்திறன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக நுட்பமான போக்குவரத்து அமைப்பு (ITS) நிறுவப்படும்.

132.87 கி.மீ. நீளமுள்ள சென்னை எல்லைச் சாலை திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதற்காக 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| பிரிவு | தொடக்கம் | முடிவு | நீளம் (கி.மீ.) | திட்ட மதிப்பீடு (கோடி) |
|---|---|---|---|---|
| I | எண்ணூர் துறைமுகம் | சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை 16ல் உள்ள தச்சூர் | 25.40 | 3624.42 |
| II | சென்னை – கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை 16ல் உள்ள தச்சூர் | சென்னை திருப்பதி தேசிய நெடுஞ்சாலை 716ல் உள்ள திருவள்ளூர் புறவழிச் சாலையின் தொடக்கம் | 26.10 | 6754.40 (பிரிவு II மற்றும் III மட்டும்) |
| III | சென்னைதிருப்பதி தேசிய நெடுஞ்சாலை 716ல் உள்ள திருவள்ளூர் புறவழிச் சாலையின் தொடக்கம் | சென்னை பெங்களுரு தேசிய நெடுஞ்சாலை 48ல் உள்ள திருப்பெரும்புதூர் | 30.10 | |
| IV | சென்னைபெங்களுரு தேசிய நெடுஞ்சாலை 48ல் உள்ள திருப்பெரும்புதூர் | சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை 32 ல் உள்ள சிங்கபெருமாள் கோயில் | 23.80 | 584.00 (மேம்படுத்துதல் மட்டும்) |
| V | சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை 32ல் உள்ள சிங்கபெருமாள் கோயில் | கிழக்கு கடற்கரைச் சாலையில் மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள பூஞ்சேரி சந்திப்பு | 27.47 | 2850.00 |
| | மொத்தம் | | 132.87 | 13812.82 |

இத்திட்டத்தின் பிரிவு 1-ன் செயலாக்கமானது ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிதி நிறுவனத்தின் (JICA) 40,074 மில்லியன் ஜப்பான் யென் (ரூ.2473.70 கோடி) நிதி உதவியுடன் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC) மூலம் செயல்படுத்தப்படவுள்ளது. பிரிவு 1-ன் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பிரிவு II மற்றும் III ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் பன்னாட்டு மேம்பாட்டிற்கான எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் நிதி நிறுவனம் (OPEC Fund for International Development) ஆகிய வங்கிகளின் 478.07 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.3346.49 கோடி) நிதி உதவியுடன் தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC) மூலம்

செயல்படுத்தப்படவுள்ளது. வெளி நிதியுதவிக்கான கடன் ஒப்பந்தம் 2022-23 நிதியாண்டின் முதல் காலாண்டில் கையெழுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவு II மற்றும் III-ற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.4899 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. பிரிவு-II, 2 இபிசி (இபிசி-01 & 02) தொகுப்புகளாகவும், பிரிவு-III, 3 (இபிசி-03, 04 & 05) தொகுப்புகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

பிரிவு II, இபிசி-01 தொகுப்பிற்கான கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. பிரிவு II, இபிசி-02 தொகுப்பிற்கான கட்டுமான பணிக்கான ஒப்பந்தப்புள்ளி நிதி மதிப்பீடு முடிவுற்று, பணி ஆணை வழங்கும் எண்ணம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு-III, இபிசி-03 & 04 தொகுப்புகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீடு நடந்து வருகிறது. பிரிவு-III, இபிசி-05 தொகுப்புக்கான ஒப்பந்தப் புள்ளி ஆவணங்களுக்கு AIIB நிதி நிறுவனத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

பிரிவு-IV மாநில நிதியைப் பயன்படுத்தி தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தால் முடிக்கப்பட்டது. ரூ.584 கோடி செலவில் பிரிவு IV ஐ சென்னை எல்லைச் சாலை தரத்திற்கு உயர்த்துவதற்கான தொகையையும் பிரிவு II மற்றும் III க்காக AIIB யிடமிருந்து பெறப்படும் கடன் தொகையில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவு-V ல் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. பிரிவு V ஐ செயல்படுத்துவதற்காக நிதி நிறுவனம் தெரிவு செய்யும் நடவடிக்கையில் உள்ளது.

**49. இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டம்**

தமிழ் நாட்டில் 2021-ஆம் ஆண்டின் மாநில குற்ற ஆவண பதிவேட்டின்படி, 55,713 சாலை விபத்துகள் பதிவாகியுள்ளன. அதில் 14,912 பேர் இறந்தும், 17,544 பேர் படுகாயமடைந்தும் உள்ளனர். கடந்த பத்து ஆண்டுகளில், விபத்துகளால் நிகழும் இறப்புகள் தீர்க்க இயலாத பிரச்சனையாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு 40-45 பேர் வீதம் சாலை விபத்துக்களில் மாதத்திற்கு 1400-1450 பேர் இறக்கின்றனர். தடுக்க வாய்ப்புள்ள இந்த பொது சுகாதார நெருக்கடி குறைக்கப்பட வேண்டும் என்ற “வளர்ச்சி இலக்குகள் 3.6”-ஐ அடைவதற்கு, சாலை போக்குவரத்து காயங்களால் ஏற்படும் இறப்புகளை 2030-க்குள் பாதியாக குறைக்கப்பட வேண்டும். சாலை விபத்தினால் நிகழும் இறப்புகளை குறைப்பதற்கும், அதனால் குடும்பங்களுக்கு ஏற்படும் மருத்துவ செலவை குறைப்பதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கப்பட்ட ஒரு புதிய உயிர்காக்கும் திட்டமே, இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் – 48 திட்டம் ஆகும். இத்திட்டம் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விபத்து நடந்த முதல் 48 மணி நேர, நெருக்கடியான காலகட்டத்தில், முழுமையான சிகிச்சை வழங்க, அதிகபட்சமாக ரூபாய் ஒரு இலட்சம் வரை வழங்குவதை உறுதி செய்வதாகும். இத்திட்டத்தால் வழங்கப்படும் சிகிச்சையானது இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையை பெருமளவு குறைப்பதையும், விபத்து ஏற்பட்டவுடன் உடனடியாக மருத்துவ சிகிச்சை வழங்குதல் மற்றும் நோயாளியின் தேவையற்ற இடமாற்றத்தை தவிர்த்தலையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ்

i) உடனடியாக நோயாளியை சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வகையில், அதிக விபத்து நடைபெறும் 500 நெடுஞ்சாலை இடங்களை கண்டறிந்து, அதற்கு அருகாமையில் தகுதி வாய்ந்த 662 மருத்துவமனைகள் (440 தனியார் மற்றும் 222 அரசு மருத்துவமனைகள்) கண்டறியப்பட்டுள்ளது.

ii) விபத்து ஏற்பட்டவுடன், அவசர வாகன சேவையின் காலதாமதத்தைக் குறைக்கவும், உயிரிழப்புகளைத் தடுக்கவும் தேர்வு செய்யப்பட்ட மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு உடனடியாக அழைத்துச் செல்லவும் மாவட்டவாரியான "விபத்து – சிகிச்சை திட்டம்" தயாரிக்கப்பட்டுள்ளது.

iii) விபத்து நடந்த ஒரு மணி நேரத்திற்குள் (பொன்னான நேரம்), நோயாளியின் தன்மைக்கு ஏற்ப சரியான சிகிச்சை மையத்திற்கு அவசர மருத்துவ சேவை வாகனங்கள் மூலம் அழைத்துச் செல்லப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

iv) விபத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உத்தரவாத முறையில் கட்டணமில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட 81 சேதக் கட்டுப்பாட்டு சிகிச்சையுடன் உள்ளடங்கிய, அவசர சிகிச்சை முறைகள், ரூபாய் ஒரு லட்சத்திற்கு மிகாமல், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் (CMCHIS) கீழ் காப்பீட்டு அட்டை உள்ளதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் வழங்கப்படுகிறது.

v) இந்தத்திட்டத்தில், தமிழ்நாட்டின் எல்லைக்குள் நிகழும் சாலைப்போக்குவரத்து விபத்தினால் பாதிக்கப் பட்டவர்கள் அனைவருக்கும், தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்கள், புலம் பெயர்ந்தோர் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என்று பாராமல் சிகிச்சை வழங்கப்படுகிறது.

vi) vi) இத்திட்டத்திற்கான மூலதன நிதியாக 50 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. இந்த நிதியாண்டில் மேலும் 100 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**திட்ட செயல்முறைகள்:**

i. இத்திட்ட நடைமுறைகளின்படி, விபத்தில் பாதிக்கப்பட்டவர், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கீகரிக்கப் பட்ட மருத்துவமனைகளில் விபத்து நடந்த முதல் 48 மணி நேர சிகிச்சையை கட்டணமில்லாமல் எடுத்துக் கொள்ளலாம்.

ii. 48 மணி நேரத்திற்குப் பிறகும் சாலை விபத்தால் பாதிக்கப்பட்டவரின் உடல் இயக்க நிலையானது, சமச்சீர் அற்ற நிலையில் இருந்தால், அரசு மருத்துவ மனைகளிலேயே இலவசமாக சிகிச்சை தொடரும். தேர்வு செய்யப்பட்ட தனியார் மருத்துவமனையில் அரசு வழிகாட்டுதல்களின்படி அனுமதிக்கப்பட்ட நோயாளிக்கு பின்வருமாறு சிகிச்சை அளிக்கப்படும்:

| | |
|---|---|
| அ) பாதிக்கப்பட்டவர் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இருந்தால் | தற்போதுள்ள, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்ட நடைமுறையின்படி அவருக்கு சிகிச்சை தொடரும் |
| அ) பாதிக்கப்பட்டவர் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்ட பயனாளியாக இல்லாவிட்டால் | நோயாளியின் உடல் இயக்க நிலையானது சீர்படுத்தப்பட்டு பின்னர் அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு மாற்றப்படுவார் |
| இ) பாதிக்கப்பட்டவர் அரசு மருத்துவ மனைக்குச் செல்ல விரும்பவில்லை என்ற நிலையிலும், பிற தனியார் காப்பீட்டுத் திட்டம் பெற்றவராக இருந்தாலும் மற்றும் தனியார் மருத்துவமனையில் பணம் செலுத்தி சிகிச்சை பெறத் தயாராக இருந்தாலும் | நோயாளியின் உடல் இயக்க நிலையானது சீர்படுத்தப்பட்டு, அதே தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுவார் அல்லது நோயாளியின் விருப்பப்படி வேறு மருத்துவமனைக்கு மாற்றப்படுவார். அத்தகைய நோயாளிகள் மருத்துவமனை மற்றும் சிகிச்சைக்கான கட்டணத்தை தங்கள் சொந்த நிதியில் இருந்து செலுத்த வேண்டும் |

இந்த திட்டத்தின் மூலம் 18.12.21 முதல் 31.03.2022 வரை அரசு மருத்துவமனைகளில் 34,878 நபர்கள், தனியார் மருத்துவமனைகளில் 4,664 நபர்கள் என மொத்தம் 39,542 விபத்துக்குள்ளானோர் பயனடைந்துள்ளனர்.

**50. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

உயிர்காக்கும் சிகிச்சைக்கான முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத் திட்டம் 23.07.2009 அன்று தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது. உயிர்காக்கும் மருத்துவ சிகிச்சைகளை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கட்டணமில்லாமல் ஏழை மற்றும் குறைந்த வருவாய் பெறும் குடும்பங்கள் பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளியின் குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் வரை இலவசமாக சிகிச்சை பெற காப்பீடு செய்யப்பட்டது. இந்த நோக்கத்திற்காக முழு பிரீமியம் தொகையை அரசே செலுத்தியது. மொத்தம் 1.34 கோடி குடும்பங்கள் இத்திட்டத்தில் பயனாளி குடும்பங்களாக இருந்தனர். இத்திட்டத்தால் பயனாளிகள் பெற்று வரும் நன்மைகளை கருத்தில் கொண்டு, ஆண்டு வருமானம் 72,000 ரூபாய்க்கும் குறைவாக உள்ள 1.58 கோடி குடும்பங்கள் பயன் பெறும் வண்ணம், இத்திட்டம் மேலும் சீரமைக்கப்பட்டு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டமாக 1.1.2012 முதல் இதுவரை செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் பிரதான் மந்திரி மக்கள் ஆரோக்ய திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் 23.09.2018 முதல் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 77.71 இலட்சம் குடும்பங்களுக்கு ஒன்றிய அரசின் பங்களிப்பாக 60 விழுக்காடு பிரிமீயம் தொகை வழங்கப்படுகிறது. 2021-22-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டதிற்கிணங்க, 11.1.2022 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளியாவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பை 72,000 ரூபாயிலிருந்து 1,20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் வருமான உச்சவரம்பின்றி இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாக சேர்க்கப்படுகின்றனர்.

**சிறப்பம்சங்கள்:**

- அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகள்: இத்திட்டத்தில் தற்போது 1700 மருத்துவமனைகள் (800 அரசு மருத்துவமனைகள் மற்றும் 900 தனியார் மருத்துவமனைகள்) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- காப்பீட்டுத் தொகை: இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டொன்றுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரை காப்பீடு வழங்கப்படுகிறது.
- சிகிச்சை முறைகள்: இத்திட்டத்தின் கீழ் 1090 மருத்துவம் மற்றும் மருத்துவ சிகிச்சை முறைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன (11 தொடர் சிகிச்சை முறைகள் 52 முழுமையான பரிசோதனை முறைகள் 8 உயர் சிறப்பு சிகிச்சை முறைகள் உட்பட).
- புலம் பெயர்ந்த தொழிலாளர்கள்: பழங்குடியினர்கள் உள்ளிட்ட சமூக பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பிரிவினர்கள் இத்திட்டத்தில் தொடர்ந்து சேர்க்கப்பட்டு பயன் பெற்று வருகின்றனர்.
- தமிழ்நாடு அரசால் ஆதரவற்றோர் என வரையறுக்கப்பட்டவர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினராக சேர்க்கப்படுகிறார்கள். மேலும் கோவிட் தொற்றினால் பெற்றோரை இழந்த குழந்தைகள் குடும்ப அட்டை சமர்ப்பிக்க வலியுறுத்தப்படாமல் இத்திட்டத்தில் பயனாளிகளாக சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

- மின்னணு முறையில் அடையாள அட்டையினை முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- தர நிர்ணய சான்றிதழ் ஒன்றிய அரசின் தர அளவு கோல்கள் மற்றும் தேசிய மருத்துவமனைகள் அங்கீகரிப்புக் குழுவால் (NABH I NQAS) வரையறுக்கப்பட்ட ஆரம்ப நிலை தர நிர்ணயச் சான்றிதழ், அரசு மருத்துவமனைகள் உட்பட அனைத்து மருத்துவ மனைகளுக்கும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- குறைந்தபட்ச மருத்துவத் தகவல் பதிவுகளை (Minimal Electronic Health Record) BLOOT OT600) ALDOULD வலைதளத்தில் பயனாளிகள் பார்வையிடலாம்.

**கோவிட் பெருந்தொற்று நடவடிக்கைகள்:**

கோவிட்-19 இரண்டாம் அலை பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பலரும் அரசு மருத்துவமனைகள் மட்டுமின்றி தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெறும் வகையில், அவர்களின் நலன் கருதி இன்னலைக் குறைக்கும் வகையில், சிகிச்சைக்கான மருத்துவமனை கட்டணத்தை தமிழ்நாடு அரசே காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்கும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க பெருந்தொற்று காலத்தில் ஏழை எளிய மக்களுக்கு தரமான சிகிச்சை தனியார் மருத்துவமனைகளில் கட்டணமின்றி கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கோவிட்-19 சிகிச்சைக்கென அனுமதி அளிக்கப்பட்ட 642 தனியார் மருத்துவமனைகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இது தவிர, ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனைக் கட்டணம், பொதுமக்களின் நலன் கருதி குறைக்கப்பட்டுள்ளது. கருப்புப்பூஞ்சை நோய்க்கும் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை பெற விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**சிகிச்சைக் கட்டணம் நிர்ணயம்:** கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் மக்கள் நலன் காத்திடவும், கட்டணமில்லா சிகிச்சை வழங்கிடவும், சிகிச்சைக்கான கட்டணம் 22.05.2021 அன்று முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்ட பயனாளிகளுக்கும், பொதுமக்களுக்கும் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 9.8.2021 அன்று முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கோவிட்-19 தொற்று சிகிச்சைக்கான கட்டணம் நாளொன்றுக்கு என்ற கட்டணத்திலிருந்து தொகுப்பு கட்டணமாக மாற்றியமைக்கப்பட்டது.

**தொகுப்பு நிதி:** அதிக செலவாகும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை அறுவை சிகிச்சை, காதுவால் நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை மற்றும் ஸ்டெம்செல் மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செவிப்புல மூளைதண்டு உள்வைப்பு அறுவை சிகிச்சை மற்றும் மேற்குறிப்பிட்ட அறுவை சிகிச்சைக்குப் பின்னர் தேவைப்படும் நோய்தடுப்பு சிகிச்சைகளை மேற்கொள்ளும் வகையில் தொகுப்பு நிதி (Corpus fund) ஒன்று அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தொகுப்பு நிதிக்கு அரசின் பங்காக 35 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகள், காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பும் கோரிக்கைத் தொகையில் 27 விழுக்காடு தொகை தொகுப்பு நிதியில் சேர்க்கப்படுகிறது. இந்த தொகுப்பு நிதியிலிருந்து நிபுணர் குழுவால் மேற்குறிப்பிட்ட சிறப்பு சிகிச்சைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. 11.01.2012 முதல் 31.03.2022 வரை மொத்தத்தில் 11,444 பயனாளிகளுக்கு, சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.